DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue, Markham ON, L6B 1A6

MORTGAGE மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1356 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 1, 2022

# தமிழ் அரசியல்வாதிகள் அனைவருமே பிச்சைக்காரர்கள் என்கிறார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீ சற்குணராஜா


Professor Sivakolundu Srisatkunarajah
BSc (Hons. - Jaffna), Dip.in.Ed (OUSL), PhD (Heriot - Watt)

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்கள். அவர்கள் அனைவரும் திருத்தப்பட வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீ சற்குணராஜா தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 124 வது ஜனன தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகள் காணப்படுகின்றார்கள். ஆனால் எமது அரசியல்வாதிகளிடம் அவர்களுக்கு உதவுவதற்கு எந்த ஒரு திட்டமும் இல்லை. நிகழ்ச்சி நிரலும் இல்லை. *(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
ACCOUNTING
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

## City of Brampton's Mayor Patrick Brown was invited for a gathering at Mr. Nimal Vinayagamoorthy's Residence in Markham

## கனடாவின் தேசிய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடும் பெற்றிக் பிரவுணுக்கு மார்க்கம் நகரில் நடத்தப்பெற்ற வரவேற்பு



கனடாவின் தேசிய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடும் பெற்றிக் பிரவுண் அவர்களுக்கு மார்க்கம் நகரில் நடத்தப்பெற்ற வரவேற்பு நிகழ்வு சிறப்பாகவும் ஆதரவாளர்களின் வாழ்த்துக்களோடும் வெற்றிகரமாக நடைபெற்றது. திரு நிமால் விநாயகமூர்த்தியின் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பெற்ற இந்த வரவேற்பு நிகழ்வை செல்வி அபீனா நிமல்ராஜ் வரவேற்புரை நிகழ்த்தி ஆரம்பித்து வைத்தார். *(தொடர்ச்சி உள்ளே 7ம் பக்கத்தில்)*

PYRAMID GROUP REAL ESTATE PROFESSIONALS
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ஸ்காபுறோவில் Taste of Madurai உணவகத்தின் திறப்பு விழா SPECIAL
மதுரை கில்லிப் பரோட்டா – 2 $ 9.99 மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு 416-332-8000
2ம் பக்கம் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
North York, Scarborough & Brampton.
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING



இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்
கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'
நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை
416 732 1608
என்னும் WHATSAPP
இலக்கத்திற்கும்
அனுப்பலாம்.

www.uthayannews.ca UTHAYAN உதயன்

இலங்கைச் சிறப்பிதழில்
பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.



தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2
மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: 416-894-6244

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்


Jeya 647-669-2739

### Help Wanted

Full time & Part time kitchen workers are needed for a well renowned Canadian restaurant at Morningside and Military Trail.
For details, call:

647-204-1520

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.



Our secure online application is easy to complete, just go to
gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at:
(647) 763-0210

brimell

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce
Real Estate
- residential purchase, sale & refinance transactions
Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Trainee Dental Assistant Wanted

Looking for a Trainee Dental Assistant.
Requirements:-
Science, Math, Computer Skill, Communication skill.
Team player, Fast learner.
Training will be given to the right Candidate.
Please forward resume to
cydentalcare@gmail.com

### Part-Time Medical Receptionist Wanted

Part-time Medical Receptionist wanted for a Medical Clinic in Scarborough., 15-20hrs/ week. Candidate must be fluent in English and Tamil. Must be proficient in computer skills. Duties include answering phone calls, preparing paperwork, scanning documents, etc.
Wages Negotiable.
Please send resume to:
vahishan@gmail.com

### Basement for Rent

Salem / Rossland (Ajax)
Brand new 2 bedroom basement available for rent.
புதிதாக திருத்தப்பட்டுள்ள 2 அறை கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.
Call: 647-706-4969

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்களின் இறுதிக் காலம் நெருங்குகின்றதா?

இலங்கையில் தற்போது ஜனாதிபதியாக சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் கோட்டாபாய என்னும் 'குறை ஜனாதிபதியும;' பிரதமராகப் பதவி வகிக்கும் அவரது சகோதரர் மகிந்தா ராஜபக்சாவும் நிதி அமைச்சராகப் பதவி வகிக்கும் மூன்றாவது சகோதரர் பசில் என்பவரும் தங்கள் இயலாமையை நேரடியாகவே காட்டி நின்ற காரணத்தால் தற்போது அவர்களைத் திணறடிக்கும் வகையில் மக்கள் போராட்டம் அங்கு வெடித்துள்ளது

இலங்கையின் கோட்டாபய அரசாங்கம் சொல்லிலும் செயலிலும் நிதானமான ஜனநாயகத்தை கடைப்பிடித்தால் மாத்திரமே தற்போது மக்கள் மத்தியில் எழுந்துள்ள கிளர்ச்சியை கட்டுப்படுத்தமுடியும் என்புத நன்கு புலனாகியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தனிப்பட்ட மீரிஹன வீட்டுக்கு செல்லும் வழியில் நேற்று வியாழக்கிழமை பொது மக்கள் திரண்டு சென்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இவ்வாறிருக்க. 1977ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை செயலுக்கு வந்த பின்னர் போராட்டங்கள் பெரும்பாலும் ஏதோ ஒரு வகையில் அரச இயந்திரத்தினால் செயலிழக்கச் செய்யப்பட்ட வரலாறுகளே உள்ளன.

இந்தநிலையில் தற்போதைய நிலை முற்றிலும் மாறுப்பட்டது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்ட கோட்டாபய, 20வது அரசியலமைப்பு திருத்தம் மூலம் அதீத அதிகாரங்களையும் தமது கைகளுக்கு மாற்றிக்கொண்டார்.

இது நாட்டை கட்டியெழுப்புவதற்கான, மாற்றத்துக்கான முயற்சி என்று அவர் கூறிவந்தார். ஆனால் இன்று அந்த மாற்றம் புதிய திருப்பத்தைக் கொண்டு தடுமாறுகின்றது . ஏற்கனவே ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகள் செய்த காரியங்களே இன்றும் முன்னெடுக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

அரசியல் பழிவாங்கல், வழக்குகளில் இருந்து அரசாங்கத்துக்கு சார்பானவர்கள் விடுவிக்கப்படுகின்றமை, நிர்வாகத்தில் அரசாங்கத்தின் செல்வாக்கு என்பன அதீதமாக உள்ளது என்று எதிர்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன. இதனை அரசாங்கமும் கண்டு கொள்ளாமல் செயற்பட்டு வருகிறது. ஆனால் ஜனாதிபதி அலுவலகம் இந்த போராட்டத்தை பற்றிய மாறான செய்தியைப் பரப்ப நினைக்கின்றது

நுகேகொடை - மிரிஹான - பெங்கிரிவத்தை பகுதியில் நேற்று(31) வியாழக்கிழமை இரவு முதல் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை வரை ஜனாதிபதி கோட்டாபாயவின் இல்லத்திற்குச் செல்லும் வீதியில் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். நேற்றிரவு வியாழக்கிழமையன்று நுகேகொடை – மிரிஹான பகுதியிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் வீட்டை பல மணி நேரமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வந்துள்ளனர்.

பல ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் ஒன்றிணைந்து போராட்டத்தை நடத்திய நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக பாதுகாப்பு பிரிவினர் தடியடி பிரயோகம், கண்ணீர் புகை பிரயோகம் மற்றும் நீர்த்தாரை பிரயோகம் நடத்தப்பட்டது. இவ்வாறான அரச அடக்கு முறைகள் அதிகரிக்கும் போது நாடு இன்னும் பாதகமான விளைவுகளையே எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

# கனடாவில் நன்கு அறியப்பெற்ற காப்புறுதி முகவர் ஜேய் நடராஜாவின் புதிய நிறுவனம் Great Life Financial






கடந்த பல வருடங்களாக கனடாவில் நன்கு அறியப்பெற்ற காப்புறுதி முகவராகவும் மற்றும் வீடு விற்பனை முகவராகவும் பணியாற்றி வரும் திரு ஜேய் நடராஜா (ஜெயக்குமார் நடராஜா) அவர்களின் நிர்வாகத்தில் புதியதோர் காப்புறுதி நிறுவனமான **Great Life Financial** தலைமை அலுவலகம் கடந்த சனிக்கிழமையன்று மாலை திறந்து வைக்கப்பட்டது.

**885 Progress Avenue, Scarborough** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அலுவலகத்தினை திரு ஜேய் நடராஜா (ஜெயக்குமார் நடராஜா) அவர்களின் நண்பரும் **Mega Financial Inc.** காப்புறுதி நிறுவனத்தின் அதிபருமாகிய திரு ராஜ் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். அதன்போது, ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தின் ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் உறுப்பினர் விஜய் தணிகாசலமும் உடனிருந்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வைபவத்தின் பிரம்ரன் மாநகர மேயரும் மத்திய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பதவிக்கு தற்பொழுது போட்டியில் இறங்கியுள்ளவருமான பெற்றிக் பிரவுண் அவர்களும் கலநது சிறப்பித்தார்.

மேற்படி திறப்பு விழா வைபவத்தில் பல காப்புறுதி முகவர்கள்.வாடிக்கையாளர்கள் நண்பர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

திரு ஜேய் நடராஜா (ஜெயக்குமார் நடராஜா) அவர்களுக்கு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புவோர் 416 558 2551 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

INCOME TAX
BRAMPTON
துர்க்கா மார்க்கட்
Side Entrance
In person or online with e-signature
UBER/LYFT/Rental/Business welcome
Personal Tax -No slip charge $30.00
Pension Welfare Student $20.00
Trucker's Special
$395.00 All included
Corporate Tax from $100.00
Bookkeeping, Accounting & Payroll Services
416-400-1053
Call first & avoid waiting ntax 24 years experience
Ntax Accounting & Financial Solutions Inc.

# இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு 4000 பேர் வரை அகதிகளாக படையெடுக்க வாய்ப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

இலங்கையில் பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருவதால் 2000 முதல் 4000 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு தஞ்சம் புக வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இலங்கையில் தற்போது விண்ணைமுட்டும் அளவிற்கு அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இதன் காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் உணவு, அத்தியாவசிய தேவைகளுக்காக கடுமையான சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். இதனால் இலங்கை தமிழர்கள் பலர் கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு தஞ்சம் புகத் தொடங்கியுள்ளனர்.

அதன்படி கடந்த 22ம் தேதி கஜேந்திரன், மேரிகிளாரி, நிசாத், கியூரி, எஸ்தர், மோசஸ் உள்ளிட்ட நான்கு மாத கைகுழந்தையுடன் 5 பேர் ஒரு பைப்பர் படகில் தனுஸ்கோடிக்கு அகதிகளாக வந்துள்ளனர். விஷயம் அறிந்து விரைந்த கடலோர காவல் படையினர் தஞ்சம் புகுந்தவர்களை மீட்டனர். இதையடுத்து அவர்கள் அனைவரும் ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

மேலும், 5 குழந்தைகள் உட்பட 10 பேர் தமிழ்நாட்டிற்கு வந்தனர். அவர்களிடம் விசாரணை செய்தப்போது, இலங்கையில் இனி வாழ்வது கடினம் என்றும், அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கே வழி இல்லாத அளவிற்கு விலை உயர்வு இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். மேலும், தங்களை போல் இன்னும் பல குடும்பங்கள் இலங்கையை விட்டு வெளியேற திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், இலங்கையில் பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருவதால் 2000 முதல் 4000 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு தஞ்சம் புக வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், இலங்கை தமிழர்கள் இந்தியாவிற்கு அகதிகளாக வரும் இந்த சமயத்தில் தீவிரவாத ஊடுறுவல்களை தடுப்பதற்காக கடலோர் பாதுகாப்பு குழு கண்காணிப்பை தீவிரப்படுத்தயுள்ளது.

# மன்னாரில் அரச இலட்சினையை தவறாக பயன்படுத்தும் அரசியல்வாதி




மன்னாரில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் அரச இலட்சினையை தவறாக பயன்படுத்தி தனது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேச சபையின் போனஸ் ஆசன உறுப்பினர் றொஜன் என்பவரே குறித்த செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக தெரிய வருகின்றது.

குறித்த பிரதேச சபை உறுப்பினர் அரசியல் பிரதிநிதியாக இருந்த நிலையில் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் குறித்த நபர் பிரதேச சபை உறுப்பினராக இருந்து மணல் ஏற்றும் நடவடிக்கை உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்ட நிலையில், அவர் திடீர் மரண விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க மன்னார் நீதி மன்றத்தினால் எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்படாத நிலையில், திடீர் மரண விசாரணை நடவடிக்கைகளை மாவட்டத்தில் உள்ள ஏனைய திடீர் மரண விசாரணை அதிகாரிகள் முன்னெடுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பிரதேச சபை உறுப்பினர் தனது வாகனத்திற்கு பெயர் பலகையை திடீர் மரண விசாரணை அதிகாரி என சிங்களத்தில் தயாரித்து அதில் அரச இலட்சினையையும் தவறாக பயன்படுத்தி குறித்த பெயர் பலகையை பயன்படுத்தி வருகிறார்.

குறித்த அரச இலச்சினை பயண்படுத்தப்பட்ட பெயர் பலகை குறித்த பிரதேச சபை உறுப்பினரிடம் உள்ள ஏனைய வாகனங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு ஏனையவர்கள் பயன்படுத்தி வருகின்றதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

மேலும் குறித்த பெயர் பலகையினை பயன் படுத்து இராணுவ சோதனைச் சாவடி ஊடாக இவ்வித இடையூறுகளும் இன்றி பயணிப்பதாக தெரிய வருகின்றது.

அரசியல்வாதியான ஒருவரை எவ்வாறு திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்க முடியும் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளதோடு, அரச இலட்சினையை தவறாக பயன்படுத்தும், மற்றும் அரசியல் பிரதி நிதியாக உள்ள குறித்த பிரதேச சபை உறுப்பினரின் திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனம் குறித்து நீதி அமைச்சர் மற்றும் நீதி அமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி:

## மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு பொதிகளை வழங்க முன்வந்த மெசிடோ நிறுவனம்




நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மற்றும் கூலித்தொழிலை மேற்கொள்ளும் குடும்பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள 1200 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகளை முதல் கட்டமாக வழங்க மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) முன் வந்துள்ளது.





குறித்த குடும்பங்களுக்கு அவசர தேவையாக உள்ள அரிசி, மா, சீனி பொருட்களை உடனடியாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

எனினும் மொத்த வியாபார நிலையங்களில் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் நிலவி வருகின்ற நிலையில் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண பணிகளில் தாமதம் அடைவதாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறடோ தெரிவித்தார்.

எனினும் துரித கதியில் குறித்த உலர் உணவு பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# கடலில் வைத்து தமிழக மீனவர்களை தாக்கிய இலங்கை கடற்படையினர்






தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் இருந்து சதீஷ், ஆறுமுகம், தமிழ்ச்செல்வம் ஆகியோர் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர்.

இரவு 8.30மணியளவில் கோடியக்கரைக்கு தென்கிழக்கே 15 மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது சாம்பல் நிற கப்பலில் வந்த 5 இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர் படகில் ஏறி கம்பு மற்றும் கல்லால் தாக்கி உள்ளனர். இதில் தமிழ்செல்வத்திற்கு பலமான உள்காயம் ஏற்பட்டுள்ளது.

மீனவர்கள் கடலில் விரித்திருந்த 300 கிலோ வலைகளை வெட்டி விட்டு விட்டு படகில் இருந்த கையடக்க தொலைபேசி, கயிறு, டார்ச்லைட் உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் சென்றுவிட்டனர். மீனவர்கள் வலையினை தேடி பார்த்து விட்டு வலை கிடைக்காததால் நாகை மாவட்டம் கோடிக்கரை சித்தர் கோவில் கடற்கரைக்கு வந்தடைந்தனர்.



தமிழ்ச் செல்வம் என்பவருக்கு பின்பக்கம் பலத்த உள்காயம் காரண-மாக நடக்க முடியாமல் இருந்தவர் உட்பட மூவரையும் 108 ஆம்புலன்சை வரவழைத்து வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு. அனுப்பி வைக்கப்பட்டார்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கையில் பொருளாதார நெருக்கடி! வருவாய் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு 5000 ரூபாய் பரிசு என இலங்கை அரசு அறிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News



குறைவான வருவாயை கொண்டுள்ள குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் புத்தாண்டு பரிசாக வழங்கப்படும் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. மேலும் அந்நியச் செலாவணி கையிருப்பும் குறைந்ததால் அத்தியாவசிய பொருட்களின் விலையும் வரலாறு காணாத அளவில் உயர்ந்து உள்ளது. வரலாறு காணாத இந்த பொருளாதார நெருக்கடியால் இலங்கை மக்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் வருவாய் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு புத்தாண்டு பரிசாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது. தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி இந்த தொகை வழங்கப்படும் எனவும், சுமார் 31 லட்சம் குடும்பங்கள் இந்த தொகையை பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் அரசியல்வாதிகள் அனைவருமே பிச்சைக்காரர்கள் என்கிறார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீ சற்குணராஜா



தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்கள். அவர்கள் அனைவரும் திருத்தப்பட வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீ சற்குணராஜா தெரிவித்தார். தந்தை செல்வாவின் 124 வது ஜனன தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகள் காணப்படுகின்றார்கள். ஆனால் எமது அரசியல்வாதிகளிடம் அவர்களுக்கு உதவுவதற்கு எந்த ஒரு திட்டமும் இல்லை. நிகழ்ச்சி நிரலும் இல்லை.

அடுத்த மாகாண சபைத் தேர்தலுக்கு எவ்வாறு செயற்படுவது தொடர்பில் செயற்படுகிறார்களே தவிர தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக செயற்படவில்லை. எங்களிடம் ஒரு நிகழ்ச்சி நிரல் இல்லை, ஒரு திட்டமிடல் இல்லை, ஏதாவது ஒரு சம்பவம் என்றால் முதல் நாள் கூட்டத்தைக் கூட்டி ஓர் அறிக்கையைத் தயாரித்து அதை வாசித்துவிட்டு செல்வது தான் தற்போதுள்ள நிலைமை. அது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கை மனதளவில் ஒற்றுமையாக்க வேண்டும். அத்தோடு வட, கிழக்கை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம், எவ்வாறு முன்னேற்றலாம். அதற்கென்று ஒரு நிகழ்ச்சி நிரல் ஒரு திட்டமிடல் எங்களிடம் இல்லை. நாங்கள் தோற்கடிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால் தொடர்ந்தும் அவ்வாறே இருக்கத் தேவையில்லை. எமக்கென்று ஒரு பாரம்பரியம் உள்ளது.

ஏனைய உலக நாடுகளில் அந்த நாடுகளின் தயாரிப்புகளில் அந்த நாடுகளின் பெயர்கள் குறிப்பிடப்படும். ஆனால் யாழ்ப்பாண தயாரிப்பு என்று ஏதாவது உள்ளதா? அரசியல்வாதிகள் யாராவது எதையாவது சுட்டிக்காட்டுகிறார்களா? இல்லை. உதாரணமாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் எவ்வளவு சமூகப் பணி செய்கின்றார்.

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வளவு விடயத்தினை செய்ய முடிந்ததா? இல்லை. அவர் எந்த ஓர் அரசியல் தலையீடும் இன்றி தன்னிச்சையாக பல சமூக செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலையில், எந்த ஒரு செயற்பாடும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் இன்று வரை செயற்படுத்தப்படவில்லை.

இந்த மார்ச் மாதமானது, மகளிர் தினத்துக்குரிய மாதம் அந்த மகளிர் தின மாதத்தில் அரசியல் கட்சிகள், அரசியல் வாதிகள் ஏதாவது தேவைப் படும் மக்களுக்கு உதவி செய்யலாம். அத்தோடு இந்த அரசியல்வாதிகள் முதலில் தமக்குரிய அரச வீடு, சொகுசு வாகனம், சொகுசு வாழ்க்கை அனைத்தையும் தவிர்த்து மக்களோடு மக்களாக இருந்து வாழ்வதன் மூலமே மக்களுடைய பிரச்சினைகள் தெரியும்.

தற்பொழுது தந்தை செல்வா அறக் கட்டளை நிதியம் சில செயற்பாடுகளை முன்னெடுக் கின்றது. அது மிகவும் வரவேற்கத் தக்க விடயம். அவர்கள் அதனை தொடர்ச்சியாக செயற்படுத்த வேண்டும். தந்தை செல்வாவின் நோக்குத்தான் தமிழ் மக்களை உலகத்துக்கு காட்டியது. எமக்கு ஒரு கலை கலாசாரம் உள்ளது. எமக்கு ஒரு மொழி உள்ளது என்பதை உலக நாடுகளுக்கு காண்பித்தது தந்தை செல்வாவின் செயற்பாடுகளே.

தற்பொழுது தமிழ் அரசியல்வாதிகளையும் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்கிறார்கள். அதாவது வடக்கில் ஆட்கள் இல்லை என்று கொழும்பில் இருந்து அரசியலுக்கு ஆட்களை இறக்குகிறார்கள். இதெல்லாம் திருத்தப்பட வேண்டிய விடயம்.

இந்திய நாட்டைப் பார்த்தால் எத்தனையோ மொழிகள், எத்தனையோ இன மக்கள் உள்ளார்கள். ஆனால் அவர்கள் இன்று உலக நாடுகளில் தலை சிறந்து விளங்குகிறார்கள். அதற்கு காரணம் சிறந்த அரசியல் யாப்பை உருவாக்கியதே காரணம். ஆனால், நமது அரசியல்வாதிகள் அரசியல் யாப்பை உருவாக்குவது தொடர்பில் சிந்திக்கவில்லை. இன்றும் 13, 13+, சமஷ்டி என்று தமக்குள்ளே கருத்து முரண்பாடே தவிர செயல்படுத்த முடியவில்லை.

தமிழ் மக்களின் தந்தை என போற்றப்படும் தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களால் மட்டுமல்ல இலங்கையில் உள்ள அனைவராலும் அனைத்து இன மக்களாலும் போற்றப்பட்டவர். அவரது வாழ்க்கை முறை மிகவும் வித்தியாச மானது. அவர் மிகவும் மென்மையானவர். அரசியலுக்கு வந்த பின்னரும் அவர் சிறந்த மென்மையான போக்குடன் செயற்பட்டதன் காரணமாக அவரை அனைவரும் மதித்து செயற்பட்டார்கள் என்றார்.


## MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843



எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை பொருளாதார நெருக்கடி: "ஜனாதிபதி பதவி விலகி, மேலை நாடுகளில் செல்வாக்கு உள்ள ஒருவர் கைக்கு நாடு செல்லவேண்டும்"

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இலங்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி, மேலை நாடுகளின் செல்வாக்கு பெற்ற ஒருவர் கைக்கு இலங்கை செல்லவேண்டும் என்று கூறியுள்ளார் பொருளாதார வல்லுநர் விஜேசந்திரன். இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுகளை சந்தித்துள்ள இந்த தருணத்தில், நாட்டு மக்கள் நாளாந்தம் பல்வேறு விதமான பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவ்வாறான நிலையில், நாடு எதிர்காலத்தில் எவ்வாறான சவால்கள் மற்றும் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கும் என்பது குறித்து, பிபிசி தமிழ் ஆராய்கிறது. இந்த நிலையில், பொருளாதார நிபுணரும் பேராதனை பல்கலைக்கழக பொருளியல் துறை மூத்த விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ்.விஜேசந்திரன் அளித்த பேட்டியொன்றில்,

கேள்வி: இலங்கை ரூபா அதன் மதிப்பை இழக்குமா? இலங்கை மற்றுமொரு நாணயத்தை ஏற்றுக்கொள்ளுமா?
பதில்: மற்றுமொரு நாணயத்தை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இப்போதைக்கு இல்லை. இலங்கை பொதுவாக தன்னுடைய ரூபாவின் பெறுமதியை இழந்துக்கொண்டிருக்கின்றது. பாரிய முதலீடுகள், சர்வதேச நாடுகளின் உதவிகள் அல்லது நன்கொடைகள் கிடைப்பதன் ஊடாக, இந்த நிலைமையிலிருந்து மீளலாம். ஆகவே, அதன் அடிப்படையில் இன்னுமொரு நாட்டின் நாணயத்தை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கான அவசியம் இப்போதைக்கு இல்லை என்று கருத முடிகிறது.

கேள்வி: அப்படி மற்றுமொரு நாணயத்திற்குச் சென்றால், இலங்கை யாருடன் இணையும்?
பதில்: இலங்கைக்கு அருகில் இருக்கக்கூடிய இந்தியா அல்லது சீனாவுடன் தான் இலங்கை சேர வேண்டும். ஆனாலும், தற்போதைய சூழ்நிலையில் அதற்கான சாத்தியம் இல்லை என்றே கூற வேண்டும்.

கேள்வி: கடனை திரும்ப செலுத்த முடியவில்லை என்றால், நாடு திவாலாகுமா?
பதில்: கடனை திருப்பிச் செலுத்த முடியாதபோது, இலங்கைக்குள் உதவிகள் வராது. வங்கித் துறை வங்குரோத்து அடையலாம். நாட்டின் பொருளாதாரம் முழுமையாக ஸ்தம்பித்து, நாடு முழு வங்குரோத்து நிலைக்கு அல்லது பொருளாதார மந்த நிலைக்குச் செல்லலாம்.

கேள்வி: இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கினால், நாடு மீள வழமை நிலைக்கு வர அது உதவுமா?
பதில்: சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கினால், இலங்கை எதிர்நோக்கியிருக்கின்ற பிரச்னையிலிருந்து ஓரளவு மீள முடியும். அது முழுமையாக மீள முடியாது. கடனை விட நாட்டிற்கு மானிய அடிப்படையில் பாரிய அளவிலான உதவிகள் கிடைக்கும் போதே நாடு மீள முடியும். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்றால், அந்த கடனைச் செலுத்த முடியாது, திரும்பத் திரும்ப சிக்கலில் சிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே மேலை நாடுகளிடமிருந்து நிதி உதவிகள் மூலம் அல்லது மானிய அடிப்படையிலான உதவிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தான் இந்த பிரச்னையிலிருந்து விடுப்படக் கூடிய வாய்ப்பு இருக்கும்.



கேள்வி: இந்தியா, சீனா ஆகிய நாடுகள் இலங்கைக்கு கடன் வழங்கும்பட்சத்தில், அது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவர உதவியாக இருக்குமா?
பதில்: ஓரளவு இருக்கும். பெருமளவு என்று சொல்ல முடியாது. இந்த இரண்டு நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு கடனை வழங்கும் போது, அது பல்வேறு நிபந்தனைகளை விடுத்தே கடனை வழங்கும். சீனாவும் இந்தியாவும் கடன் வழங்கும் போது, இலங்கை மேலும் இக்கட்டான நிலைக்குத்தான் போகும். சீனாவும் இந்தியாவும் முரண்பட்ட துருவங்கள். முரண்பட்ட துருவங்களிடமிருந்து கடனை வாங்கும் போது இந்தியா விதிக்கின்ற நிபந்தனைகளையும் சீனா விதிக்கின்ற நிபந்தனைகளையும் நிறைவேற்றும் போது இலங்கை அரசியல் மற்றும் பொருளாதார குழிக்குத் தள்ளப்படும். மீளவே முடியாத நிலைமை ஏற்படும். இது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான பனிப் போருக்கான களமாக மாற்றப்படும். "இலங்கை குரங்கு கையில் அகப்பட்ட அப்பத்தை" போன்று இறுதியில் இருக்கும்.

கேள்வி: இலங்கை பிரச்சினைகள் முடிவடைய வேண்டும் என்றால், தற்போது இருக்கின்ற அரசாங்கம் பதவி விலக வேண்டுமா?
பதில்: இந்த அரசாங்கம் பதவி விலகுவது சரிவராது. ஜனாதிபதி பதவி விலக வேண்டும். ஏனென்றால், இலங்கையின் அதிகாரங்கள் தீர்மானம் எடுக்கும் சக்தி நாடாளுமன்றத்தை விடவும் ஜனாதிபதிக்கே அதிகம் இருக்கின்றது. அரசாங்கம் பதவி விலகி ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே ஜனாதிபதி பதவி விலகி வேறு ஒருவருக்கு பொறுப்பைக் கொடுக்க வேண்டும். அல்லது புதிய தேர்தலுக்குப் போக வேண்டும். அல்லது செய்யக்கூடிய ஆளுமை உள்ள மேலை நாடுகளின் செல்வாக்கு, மேலை நாடுகளின் அங்கீகாரம், மேலை நாடுகளின் பங்களிப்பு ஆகிய செல்வாக்கு உள்ள ஒருவருக்கு இந்த நாடு கையளிக்கப்பட வேண்டும். அப்படியாக இருந்தால் மாத்திரமே இலங்கை மீண்டெழ முடியும். அப்படி இல்லையென்றால், இலங்கைக்கு எந்த வித முன்னேற்றமும் வராது.


காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct 416.918.9771
Business 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
BMO Insurance

Are you getting Million Dollar advice?

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்றாரியோவில் மருத்துவ மற்றும் பற்சிகிச்சை காப்புறுதி இல்லாதவர்களுக்கு உதவு திட்டத்தை அறிவித்த மாகாண அரசு

ஒன்றாரியோ மாகாணத்தில் மருத்துவ மற்றும் பற்சிகிச்சை காப்புறுதி இல்லாத தொழிலாளர்களுக்கு உதவு திட்டத்தை ஒன்றாரியோ அரசு அறிவித்துள்ளது.

ஒன்றாரியோ அரசாங்கம் நியமித்துள்ள ஒரு புதிய குழு, உடல்நலம், பல் மற்றும் பார்வை பராமரிப்புக்கான காப்புறுதி இல்லாத இலட்சக் கணக்கான முழு நேரத் தொழிலாளர்களுக்கு அதற்குரிய அரச திட்டத்தை வழங்குவதற்கு, கையடக்க நன்மைகள் அமைப்பை எவ்வாறு வடிவமைப்பது என்பதை ஆராயும் வண்ணம் குழுவை அமைத்துள்ளது.

இந்த ஐந்து நபர் குழுவை முன்னாள் கனடிய மத்திதய கன்சர்வேடிவ் கட்சியின் வேட்பாளரும் முதலீட்டு வங்கியாளருமான சூசன் மெக்ஆர்தர் வழிநடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது, அவர் கடந்த ஆண்டு மாகாணத்தின் பொருளாதாரம் குறித்த ஆலோசனைகளுக்கு தலைமை தாங்கியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சில நாட்களுக்கு முன்னர் பத்திரிகையாளர்களுக்கு இந்த மருத்து காப்புறுதித் திட்டம் தொடர்பாக ஒன்றாரியோ மாகாணத்தின் தொழிலாளர் துறை அமைச்சர் மெக்னாட்டன் அளித்த பேட்டியில், இந்த அறிஞர்கள் குழு எமது மாகாணத்தில் தொழிலாளர்களின் நலன் கருதி இந்த மாற்று திட்டத்தை கொண்டு வரும் என்று தெரிவித்தார்.

"நீங்கள் எங்கு வேலை செய்தாலும், ஒன்ராறியோவில் உள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் உடல்நலம் மற்றும் பல் மருத்துவத் திட்டங்கள் போன்ற பலன்கள் கிடைக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்," என்று அமைச்சர் மக்னாட்டன் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "ஒரு சிறந்ததும் நம்பகத்தன்மை கொண்டதுமான ஒன்டாரியோவை மீண்டும் உருவாக்க நாம் முயன்று வருகின்றோம். இன்று மருத்துவ காப்புறுதி அல்லது இலவச சிகிச்சை பெற வசதிகள் இல்லாத இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் அவற்றைப் பெறுவதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்" ஒன்ராறியோவில் உள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் நன்மைகள் கிடைக்க வேண்டும்.



ஆனால் புதிய குழு தனது முதல் இடைக்கால அறிக்கையை மாகாணத் தேர்தல் முடிந்து ஒரு மாதத்திற்குப் பிறகு ஜூலை வரை வெளியிடாது. அதன் இறுதி அறிக்கை மற்றும் பரிந்துரைகள் அடுத்த கோடையில் எதிர்பார்க்கப்படும் என்றும் அமைச்சர் மெக்னாட்டன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "நாங்கள் இதை முடிந்தவரை விரைவாகச் செய்ய விரும்புகிறோம், ஆனால் இதை நாங்கள் சரியாகச் செய்து முடிக்க வேண்டும்.

திட்டத்தில் பணியாற்றும் ஆலோசகர்கள - புதிய நன்மைகள் மூலோபாயத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு முக்கியமான ஆதரவை அணுகுவதை உறுதிசெய்ய, தற்போதுள்ள உலகளாவிய சமூகத் திட்டங்களை விரிவுபடுத்துவதன் மூலம் சுகாதாரப் பாதுகாப்பு காப்புறுதித் திட்டத்தை மேம்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

இந்த செயல்முறையானது, தொழிலாளர்களுடன் இணைக்கப்பட்ட ஒரு நன்மை அமைப்பை உருவாக்க பரிந்துரைத்துள்ளுத. அத்துடன் ஒன்றாரியோவில் உள்ள் அனைத்து தொழிலாளர்களின் நலன்களும் இந்தத் திட்டத்தில் அடங்கும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## Canada's City of Brampton's Mayor Patrick Brown was invited for a Gathering at Mr. Nimal Vinayagamoorthy's residence in Markham

# கனடாவின் தேசிய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடும் பெற்றிக் பிரவுணுக்கு மார்க்கம் நகரில் நடத்தப்பெற்ற வரவேற்பு



கனடாவின் தேசிய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடும் பெற்றிக் பிரவுண் அவர்களுக்கு மார்க்கம் நகரில் நடத்தப்பெற்ற வரவேற்பு நிகழ்வு சிறப்பாகவும் ஆதரவாளர்களின் வாழ்த்துக்களோடும் வெற்றிகரமாக நடைபெற்றது. செல்வி அபீனா நிமல்ராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விரைவில் நடைபெறவுள்ள கனடாவின் தேசியக் கட்சிகளில் ஒன்றான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவராகவும் கனடாவின் அடுத்த பிரதமராகவும் தெர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பைப் பெற்றுள்ள பிரம்ரன் மாநகர சபையின் நகரபிதா பெற்றிக் பிரவுண் அவர்களை தனது இல்லத்திற்கு அழைத்து தமது ஆதரவைத் தெரிவித்ததோடு மட்டுமல்லாது. நண்பர்கள் வட்டத்தில் நிதி சேகரிப்பையும் செய்த நிமால் விநாயகமூர்த்தி அவர்களின் நல்லெண்ணத்தை பெற்றிக் பிரவுண் அவர்கள் பாராட்டினார்கள்.

மேற்படி வரவேற்பு நிகழ்விற்கும் நிதி சேகரிப்பு நிகழ்விற்கும் கனடாவில் இயங்கிவரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அதிக பட்ச உறுப்பினர்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்திருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அப்போது கனடா உதயன் பத்திரிகையில் பிரசுரமாகிய தனது பிரச்சாரம் தொடர்பான செய்தியைப் பார்த்து மிகுந்த பரவசமடைந்தார்.

*- சத்தியன் (கனடா உதயன்)*





# ஒன்றாரியோ லண்டன் நகரில் வைத்திய தாதியாக பணியாற்றிய இளம் தாயின் கொலைச் சம்பவம் தொடர்பாக புதிய தகவல்களை வெளியிட்டுள்ள பொலிசார்





கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள லண்டன் நகரில் வைத்திய தாதியாக பணியாற்ற வந்த ஒரு இளம் தாயை பட்டப்பகலில் கொலை செய்த ரொறன்ரோ பெரும்பாக நகரங்களில் ஒன்றான ஸ்காபுறோவிலிருந்து கொலை வெறியுடன் சென்ற துப்பாக்கி ஏந்திய கொலையாளிகள் இருவர் அந்த இளம் பெண்ணை கொலை செய்து விட்ட பின்னர் உடனடியாக இலண்டன் நகரத்தை விட்டு வெளியேறி பின்னர் தாங்கள் திருடிச் சென்ற வாகனத்தை கைவிட்டுச் சென்றுள்ளனர் என விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ள பொலிசார் ஊடகங்களுக்கு அறியத்தந்துள்ளனர், இந்த கொலை தொடர்பாக ஒன்றாரியோவின் லண்டன் நகரின் உள்ளூர் போலீசார் அதிர்ச்சியூட்டும் கடந்த செப்டம்பர் மாதம் இடம்பெற்ற இந்த அநியாயமான கொலை விசாரணையின் விபரங்கள் தொடர்பாக சமீபத்திய விசாரணைத் திருப்பங்களின் மூலும் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட 30 வயதான தாதியான லிண்டா குரூஸ் மார்க்யூஸ் சம்பவ தினத்தன்று இரவு 7:50 மணியளவில் கொல்லப்பட்டார். செப்டம்பர் 10, 2021 அன்று, வடமேற்கு லண்டனில் உள்ள வாட்டரோக் டிரைவில் உள்ள தனது வீட்டிற்கு வந்தபோது. இந்த பயங்கரச் சம்பவம் நடைபெற்றது என்றும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

லண்டன் பொலிஸாரின் கூற்றுப்படி, அவர் தனது காருக்குள் இருந்தபோது பலமுறை சுடப்பட்டார். என்றும் அவசர சிகிச்சைக் குழுவினர் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர், அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அண்மைய விசாரணையைப் புதுப்பிக்கும் வகையில் கடந்தசெவ்வாய் அன்று வெளியான செய்தி வெளியீட்டில், லண்டன் பொலிசார், துப்பாக்கி ஏந்தியவர்கள் செப்டம்பர். 9 அன்று GTA இலிருந்து ஒன்றாரியோ மாகாணத்தின் லண்டனுக்குப் பயணித்ததாகவும், அன்றிரவு மார்க்வெஸைக் கொன்ற உடனேயே மீண்டும் ரொறன்ரோ பெரும்பாக நகரங்களில் ஒன்றான ஸ்காபுறோவிற்குத் தப்பிச் சென்றதாகவும் இப்போது தெரிவித்தனர்.

சந்தேக நபர்களின் கார், கருப்பு 2016 Volkswagen Jetta, செப்டம்பர் 15 அன்று தென்கிழக்கு லண்டனில் மரங்கள் நிறைந்த சாலையோரத்தில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இளம் பெண்மணியைக் கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பெற்ற வாகனமானது ஸ்காபரோவில் உள்ள ப்ள.்.பர்ஸ் பூங்காவில் வீதியிலிருந்து திருடப்பெற்று கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் விசாரணைகளின் பின்னர் செவ்வாயன்று, தெரிவித்த போலீசார் இரண்டு சந்தேக நபர்களின் புகைப்படம் மற்றும் கார் பற்றிய விபரங்களை வெளியிட்டனர். இரண்டு முகமூடி அணிந்த மற்றும் முகமூடி அணிந்த மனிதர்கள் மார்க்வெஸின் ஓட்டுப்பாதையை நோக்கி நடந்து செல்வதை இது காட்டுகிறது, இருவரும் கைத்துப்பாக்கிகளைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதும் தெரியவருகின்றது என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய விசாரணைகளில் இளம் பெண்ணான மார்கஸின் கொலையில் மூன்று சந்தேக நபர்களை தேடி வருவதாக போலீசார் கூறியுள்ளனர்.



# மன்னாரில் தந்தை எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் 124 வது பிறந்த தினம் அனுஸ்டிப்பு



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை எஸ்.ஜே. வி செல்வநாயகத்தின் 124வது பிறந்த தின நிகழ்வு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் மன்னார் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா சிலையடிக்கு முன் வியாழக்கிழமை (31) காலை நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளைச் செயலாளரும் மன்னார் நகர சபையின் உப தவிசாளருமான ஜான்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இலங்கை தமிழரசு கட்சி மன்னார் கிளையின் முக்கிய உறுப்பினர்கள், மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள்,கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டு, சிறப்பு உரையும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# ஜனாதிபதியின் வீட்டிற்க்கு முன்பாக மக்கள் திரண்டதால் பதற்றம்!




ஜனாதிபதியின் வீட்டிற்க்கு முன்பாக மக்கள் திரண்டதால் அதனை சூழவுள்ள பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஜனாதிபதியின் வீட்டிற்கு செல்லும் மிரிஹான - பெங்கிரிவத்தை வீதியில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராகவும் அரசாங்கத்திற்கு எதிராகவும் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**









கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

உலக செய்திகள் World News

# பாகிஸ்தானில் பெரும்பான்மையை இழந்த இம்ரான்கான் அரசு

MQM கட்சி ஆதரவை விலக்கிக் கொண்ட நிலையில் பாகிஸ்தானின் இம்ரான்கான் அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது. பாகிஸ்தானின் பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசே காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வந்தன. இதனையடுத்து, இம்ரான்கான் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான்கான் அரசுக்கு அளித்த ஆதரவை MQM கட்சி விலக்கிக் கொண்ட நிலையில், எதிர்க்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாக MQM கட்சி அறிவித்துள்ளது. இதன்காரணமாக இம்ரான்கான் அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது.

நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்பே இம்ரான்கான் அரசு பின்னடைவை சந்தித்துள்ளது. மொத்தம் உள்ள 342 இடங்களில் 172 இடங்களுக்கு ஆதரவு தேவைப்படும் நிலையில், இம்ரான்கான் அரசுக்கு அளித்த ஆதரவை MQM கட்சி விலக்கிக் கொண்டதால் இம்ரான்கான் அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது. MQM கட்சி அறிவிப்பால் எதிர்க்கட்சிகளின் பலம் 177 ஆக அதிகரித்து இம்ரான்கான் அரசின் பலம் 164 ஆக குறைந்துள்ளது.

இதனால், உடனே பதவியை விட்டு இம்ரான்கான் விலக வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். அல்லது நாளை நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு பிறகு பதவி விலக உள்ளார் எனக் கூறப்படுகிறது.





# இறந்து பிறந்த குழந்தையின் உயிரை ஒரு நொடியில் காப்பாற்றிய பெண் மருத்துவர்

இறந்தே பிறந்த குழந்தை ஒன்றிற்கு தன் மூச்சு காற்றை கொடுத்து உயிர் பிழைக்க வைத்த பெண் மருத்துவரின் நெகிழ்ச்சி செயல் ஒன்று இணையத்தில் பெரிய அளவில் வைரலாகி வருகிறது. உலகில் பெரும்பாலான குழந்தைகள் பிறந்தவுடன் அழும். ஆனால் இங்கு பிறந்த குழந்தை ஒன்று மயங்கிய நிலையில் இருந்துள்ளது. குழந்தை இறந்தே பிறந்துள்ளது என அனைவரும் என்ன, உடனே பெண் மருத்துவர் ஒருவர் அந்த குழந்தையின் வாயுடன் தன் வாய் வைத்து முடிந்த வரையில் தன் மூச்சு காற்றை கொடுத்து போராடுகிறார்.

பின்னர் குழந்தையின் முதுகில் தட்டி உயிர் பிழைக்க வைத்துள்ளார். மருத்துவரின் இந்த நெகிழ்ச்சி செயல் தற்போது இணையத்தில் வைரலாகி அனைவரும் பாராட்டி வருகின்றனர். இந்த காட்சிகள் கடவுளையும் மிஞ்சிய ஒரு சக்தி இருக்கின்றது என்பதை உணர்த்தும் வகையில் உள்ளது.

# ஒரே பெண்ணை 3 மத முறைபடி திருமணம் செய்த தமிழன அரசு ஊழியர்



மயிலாடுதுறை மாவட்டம், சின்ன எரகலித்தெருவைச் சேர்ந்தவர் புருஷோத்தமன். 30 வயதுடைய இவர் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இந்து சமுதாயத்தைச் சேர்ந்த இவருக்கு, பெற்றோர் தங்களது சமூகத்திலேயே திருவையாறு பகுதியைச் சேர்ந்த புவனேஸ்வரி என்பவரை திருமணம் செய்து வைக்க நிச்சயித்திருந்தனர். சிறு வயது முதலே புருஷோத்தமன் அனைத்து சமூகத்தினருடனும் சேர்ந்து வளர்ந்துள்ளார்.

மேலும் இவருக்கு இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் அதிக அளவில் நண்பர்களாக உள்ளனர். இதன் பலனாக மூன்று மத வழிபாடுகளிலும் புருஷோத்தமன் ஈர்ப்புகொண்டார். திருமணம் நிச்சயிக்கப்பட்ட இந்நிலையில், தனது திருமணத்தை வித்தியாசமாகவும், மத நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் விததத்திலும் நடத்த வேண்டுமென்று புருசோத்தமன் எண்ணினார். பின்னர் இவர் தனது விருப்பத்தை நண்பர்கள், பெற்றோர், மணப்பெண் வீட்டார் என அனைவரிடமும் தெரிவித்துள்ளார். இவரது விருப்பத்திற்கு மறுப்பு தெரிவிக்காமல் அனைவரும் ஒப்புக்கொண்டனர். இதன்படி, அனைவரின் சம்மதத்தோடு இஸ்லாமிய, கிறிஸ்தவ முறைப்படி முதல் நாள் திருமணம் செய்யவும், மறுநாள் இந்து முறைப்படி தாலி கட்டி திருமணம் செய்யவும் திட்டமிட்டனர். இதற்காக மார்ச் 27ம் தேதி இந்து முறைப்படி திருமண நடப்பதாக ஒரு பத்திரிக்கையும், 26ம் தேதி இஸ்லாமியம், கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடப்பதாக 2 வேறு பத்திரிக்கையும் என மூன்று விதமான பத்திரிக்கைகள் அச்சிட்டுள்ளார் புருசோத்தமன்.

மேலும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு, அவர்களின் மதத்தைப் பொருத்து விதவிதமான பத்திரிக்கைகளை கொடுத்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளார் புருசோத்தமன். அதன்படி, நேற்று மாலை புருஷோத்தமன்-புவனேஸ்வரி திருமணம் இஸ்லாமிய முறைப்படி நடத்தது. அப்போது பள்ளிவாசல் இமாம் இத்திருமணத்தை நடத்திவைத்தார்.

இதைத் தொடர்ந்து, அடுத்ததாக கிறிஸ்தவ முறைப்படி பாஸ்டர் திருமணத்தை நடத்தி வைத்தார். கடைசியாக, மார்ச் 27ம் தேதி காலை 7.30 - 9 மணிக்குள் இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது. ஒரே பெண்ணை மும்மத முறைப்படி திருமணம் செய்து அசத்திய புருஷோத்தமன் இதுகுறித்து கூறுகையில், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், தமிழகத்தில் அனைத்து மதத்தினரும் ஒற்றுமையுடன் இருப்பதை வெளிப்படுத்தும் விதமாகவும் இந்த திருமணத்தை நடத்தியதாக கூறினார். மேலும், இந்து சமுதாயத்தை சேர்ந்தவர் இஸ்லாமிய, கிறிஸ்தவ முறைப்படி திருமணம் செய்தது ஆச்சரியதை ஏற்படுத்தியது என்று உறவினர்கள், நண்பர்கள் தெரிவித்தனர்.




## சிந்தனைக் களம்
### (இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

(**Zoom ID:** 837 8074 8571 **Passcode:** 638611)

09 ஏப்ரல் 2022 (சனிக்கிழமை) 09:00pm-11:30pm (கனடா-ரொறன்ரோ)

(இலங்கை, இந்திய - 10 ஏப்ரல் 2022 ஞாயிற்றுக்கிழமை 6:30am - 09:00am)

(சிட்னி - 10 ஏப்ரல் 2022 ஞாயிற்றுக்கிழமை 11:00am - 01:30pm)

**உரைத்தொடர் - 16**

உரைப் பொருள்
***'பரதக்கலையில் நாயகியர்'***

உரையாளர்
**டாக்டர் ராதிகா வைரவேலவன்**



Director
Chathur Lakshana Academy of Fine Arts,
Chennai



# கணவனின் கொடுமையால் கேரள மாநில பெண் பத்திரிகையாளர் தற்கொலை

இந்தியா செய்திகள்
India News

கேரள மாநிலம் காசர்கோடு பகுதியை சேர்ந்த ஸ்ருதி நாராயணன் என்ற பெண் பத்திரிகையாளர் பெங்களூருவில் ஆங்கில ஊடகத்தில் பணியாற்றி வந்தார். பெங்களூருவில் வொயிட்ஃபீல்டு கணவர் அனிஷ் கொயடன் உடன் ஸ்ருதி வசித்து வந்தார். கடந்த 22-ம் தேதி ஸ்ருதி தொலைபேசி அழைப்புகளை எடுக்காததால் சந்தேகமடைந்த அவரது சகோதரர் நிஷாந்த் வீட்டிற்கு நேரில் சென்று பார்த்தபோது ஸ்ருதி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

தற்கொலைக்கு முன்பாக ஸ்ருதி எழுதிய 3 கடிதங்களை காவல்துறையினர் கைப்பற்றி உள்ளனர். அதில் காவல்துறைக்கு ஒரு கடிதமும், அவரது கணவர் அனிஷிற்கு ஒரு கடிதமும், அவரது வயதான பெற்றோருக்கு ஒரு கடிதமும் எழுதப்பட்டுள்ளது. கணவருக்கு எழுதியுள்ள கடிதத்தில், 20 நிமிடங்களுக்கு மேல் உன்னுடைய கொடுமைகளை யாராலும் தாங்கிக்கொள்ள இயலாது - 2-வது திருமணம் செய்து கொண்டால், காது கேளாத, பார்வையற்ற பெண்ணை திருமணம் செய்துகொள். அப்போதுதான் நீ பேசுவதையும், செய்வதையும் அப்பெண்ணால் உணர முடியாது என ஸ்ருதி எழுதியுள்ளார். ஸ்ருதியின் பெற்றோர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் ஆவர். அவர்களுக்கு ஸ்ருதி எழுதியுள்ள கடிதம் அனைவரின் கண்களிலும் கண்ணீரை வரவழைக்கும் வகையில் உள்ளது. “நான் வாழ்ந்தால், அது உங்களுக்கு தினமும் வருத்தமாக இருக்கும். ஆனால் நான் இறந்தால் அந்த சோகம் உங்களுக்கு சில நாட்கள் மட்டுமே நீடிக்கும்” என ஸ்ருதி தனது பெற்றோருக்கு கடிதம் எழுதியுள்ளார். ஸ்ருதி தன் குடும்பத்தாரிடம் பேசுவது பிடிக்காததால் அவரது கணவர் அனிஷ் வீட்டில் ரகசிய கேமராக்கள் மற்றும் மைக்ரோஃபோன்களைப் பொருத்தி கண்காணித்ததாகவும், தாய்க்கு பணம் அனுப்பினால் அல்லது அவரது தந்தைக்கு ஒரு புத்தகத்தை பரிசாக கொடுத்தால் கூட ஸ்ருதியைக் கொடுமைப்படுத்துவார் எனவும், அவரது சகோதரர் நிஷாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.


மேலும், பிஎஃப் கணக்கில் தனது தாய் பெயரை ஸ்ருதி நாமினியாக பதிவு செய்திருந்த நிலையில் அதனை தனது பெயருக்கு மாற்றக்கோரியும் அனிஷ் கொடுமைப்படுத்தியதாக நிஷாந்த் குற்றம் சாட்டியுள்ளார். அனிஷ் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர் மீது தற்கொலைக்குத் தூண்டுதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து காவல்துறையினர் தேடி வருகின்றனர். கல்வி அறிவு அதிகமுடைய கேரளாவில் பெண்கள் வரதட்சணைக் கொடுமையினாலும், கணவனின் கொடுமையினாலும் மரணிப்பது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

# சாதி பெயரை சொல்லி ஆசிரியை திட்டியதால் தண்டவாளத்தில் தலையை வைத்து தற்கொலை செய்து கொண்ட நாமக்கல் மாவட்ட மாணவன்

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அருகே உள்ள தண்ணீர்பந்தல் பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளியின் ஆசிரியர்கள் பல நாட்களாக மாணவர்களை சாதியின் பெயரால் தகாத வார்த்தைகளால் திட்டுவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் மோடமங்கலம் பகுதியைச் சேர்ந்த பழனிச்சாமி, செல்வி தம்பதியினரின் 3 மகன்களில், 2வது மகனான ரிதுன் அருகிலுள்ள தண்ணீர் பந்தல் பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு படித்து வந்தான். ரிதுன் வகுப்பறையில் தன்னுடன் படிக்கும் சக மாணவியிடம் பேசிக் கொண்டிருந்ததை தவறாக புரிந்து கொண்ட பள்ளியின் தாவரவியல் ஆசிரியர் தெய்வாம்பாள், ரிதுனையும், அவனது பள்ளித் தோழியையும் கண்டித்து அடித்ததோடு, வகுப்பறைக்கு வெளியே ஒரு மணி நேரத்திற்கு மேலாக நிற்கவைத்து அருந்ததியினர் பிரிவைச் சேர்ந்த ரிதுனை சாதியின் பெயரைச் சொல்லி தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் கூறப்படுகிறது.


இதனால் மனமுடைந்த ரிதுன், கடிதம் எழுதி வைத்து விட்டு பள்ளிக்கு அருகில் உள்ள ரயில் தண்டவாளத்தில் தற்கொலை செய்துகொண்டார். தகவல் அறிந்து விரைந்து வந்த ரயில்வே காவல்துறையினர், ரிதுனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள அரசு ஈரோடு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் ரிதுனை சாதியின் பெயரால் தகாத வார்த்தைகளால் திட்டி தற்கொலைக்கு தூண்டிய பள்ளியின் ஆசிரியை தெய்வாம்பாள் மற்றும் பள்ளியை முறையாக வழி நடத்தாத தலைமை ஆசிரியர் மீது தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து அவர்களை கைது செய்ய வேண்டும் எனவும், பாதிக்க பட்ட மாணவனின் குடும்பத்திற்கு இழப்பீடு தொகையும், அவர்களது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும் எனக்கோரி மாணவன் ரிதுனின் பெற்றோர் மற்றும் உறவினர்களும், தமிழ் புலிகள் கட்சி, ஆதி தமிழர் பேரவை உள்ளிட்ட கட்சியினரும் இணைந்து மாணவனின் உடலை வாங்க மறுத்து மருத்துவமனை வளாகத்திற்குள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து தகவல் அறிந்து விரைந்து வந்த பெருந்துறை காவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சு வார்த்தையில் எவ்வித தீர்வும் எட்டப்படாததால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உடலை வாங்க மறுத்ததோடு, இச்சம்பவத்தை கண்டித்து நாளை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.



இதற்கிடையே தற்கொலை செய்துகொண்ட மாணவன் ரிதுன் எழுதிய கடிதத்தை சக மாணவ மாணவிகள் படித்ததாகவும், அதில் தனது தற்கொலைக்கு ஆசிரியர் தெய்வாம்பாள்தான் காரணம் என எழுதி இருந்ததாகவும், ரிதுன் எழுதிய கடிதத்தை ஆசிரியர்கள் மாற்றி கொடுத்துள்ளதாகவும், தற்பொழுது ரிதுன் எனக்கூறி காட்டப்படும் கடிதம் ரிதுன் எழுதியது இல்லை எனவும் சக மாணவிகள் தெரிவித்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னையில் பள்ளி வளாகத்தில் பரிதாப சம்பவம்: பின்னோக்கி வந்த வேன் மோதியதில் மாணவன் பலி




சென்னையில் பள்ளி வளாகத்தில் பின்னோக்கி வந்த வேன் மோதி மாணவன் உயிரிழந்தான்.

சென்னை விருகம்பாக்கம் இளங்கோவன் நகரை சேர்ந்தவர் வெற்றிவேல். ஐடி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இவருடைய மனைவி ஜெனிபர். இவரும் ஐடி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.

இவர்களுக்கு திக்ஷித் (7) என்ற மகன் இருந்தான். திக்ஷித் ஆழ்வார்திருநகரில் உள்ள பிரபல வெங்கடேஸ்வரா மெட்ரிகுலேஷன் பள்ளியில் 2ம் வகுப்பு படித்து வந்தான். வகுப்பில் முதல் மாணவனாக படித்து வந்த திக்ஷித் வழக்கம் போல் வீட்டில் இருந்து பள்ளி வேனில் பள்ளிக்கு சென்றான்.

பள்ளி வேனை பூங்காவனம் என்பவர் ஓட்டி வந்தார். வேன் பள்ளி வளாகத்திற்குள் வந்ததும். வேனில் இருந்து திக்ஷித் உள்ளிட்ட மாணவர்கள் இறங்கி வகுப்பு அறைக்கு சென்றனர். மாணவன் திக்ஷித் வேனுக்கு பின்னால் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது டிரைவர் பள்ளி மாணவர்கள் அனைவரும் இறங்கி சென்று விட்டதால் வேனை, பின் நோக்கி இயக்கி வெளியே வாகனத்தை எடுத்து செல்ல முயன்றார். இதில் பின்னால் வகுப்பு அறைக்கு நடந்து சென்ற மாணவன் திக்ஷித் மீது எதிர்பாராத வகையில் வேன் மோதியது. இதில் நிலை தடுமாறி மாணவன் கீழே விழுந்தான்.

இதை பள்ளியில் உள்ள ஆசிரியர்களும் கவனிக்க வில்லை. வேனை பின் நோக்கி இயக்கிய டிரைவர் பூங்காவனமும் கவனிக்கவில்லை. இதனால் மாணவனின் தலைமீது வேனின் பின்சக்கரம் ஏறி இறங்கியது. இதில் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி துடிதுடித்து ரத்த வெள்ளத்தில் மாணவன் உயிரிழந்தான். மாணவன் வேனில் சிக்கியதை கூட கவனிக்காமல் டிரைவர் தொடர்ந்து வேனை இயக்கினார். அப்போது சக மாணவர்கள் அலறும் சத்தம் கேட்ட பிறகு தான் வேன் டிரைவர் வாகனத்தை நிறுத்தினார். இதனால் பள்ளி வளாகத்தில் பரபரப்பு நிலவியது.

விபத்து குறித்து பள்ளி நிர்வாகம் வளசரவாக்கம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அதன்படி விரைந்து வந்த போலீசார் மாணவனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்து நடந்த 1 மணி நேரத்திற்கு பிறகு தான் மாணவன் இறந்தது குறித்து அவன் பெற்றோருக்கு பள்ளி நிர்வாகம் போன் செய்து தகவல் தெரிவித்துள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்த மாணவனின் பெற்றோர் விபத்து நடந்த பள்ளி வளாகத்திற்கு சென்று அழுது புரண்டு துடித்தனர். இது அங்கு இருந்தவர்களின் மனதை கரைய செய்தது.

பள்ளி வளாகத்திற்குள் விபத்து நடந்ததால் வளசரவாக்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து விபத்து ஏற்படுத்திய வேன் டிரைவர் பூங்காவனத்தை கைது செய்தனர். மேலும், விபத்து ஏற்படுத்திய வேனும் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், விபத்து தொடர்பாக பள்ளி தாளாளர், வேன் ஓட்டுநர், முதல்வர் உள்ளிட்ட 4 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களை வேனில் இருந்து இறக்கிவிடும் பெண் ஊழியர் ஞானசக்தி என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

# தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரையும், மீண்டும் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை இரு வழி பாக் கடல் வழியை நீந்தி தமிழகச் சிறுவன் சாதனை

## 19 மணிநேரம் 45 நிமிடத்தில் நீந்தி கடந்து சிறுவன் சாதனை



தமிழ்நாடு தேனியை சேர்ந்த 14 வயதுடைய சிறுவன் தனுஸ்கோடி முதல் இலங்கையின் தலைமன்னார் வரையில் நீந்தி பின் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி அரிச்சல் முனை வரையிலான பாக் ஜலசந்தி கடல் பகுதியை 19.45 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

தேனி மாவட்டத்தை சேர்ந்தவர் நீதிராஜன். அவரது மனைவி அனுசர. இவர்களது மகன் சினேகன் (வயது 14). சிறுவன் சினேகன் 2019 ஆம் ஆண்டு கோவாவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்றுள்ளார். அதே போல் கர்நாடக மாநிலம் தொன்னுரில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு வெங்கல பதக்கம் வென்றுள்ளார்.

இந்நிலையில் தனுஷ்கோடி அரிச்சல் முனையில் முதல் இலங்கை தலைமன்னார் வரை நீந்தி கடந்து பின் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி அரிச்சல் முனை வரை பாக் ஜலசந்தி கடற்பகுதியை நீந்தி கடப்பதற்காக கடந்த மாதம் டெல்லியில் உள்ள வெளியுறவுத்துறை, பாதுகாப்பு துறை அமைச்சகங்கள் மற்றும் இலங்கை தூதரகத்திற்கு அனுமதி கோரி கடிதம் அனுப்பி இருந்தார்.

இந்திய-இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் சிறுவன் சினேகன் திங்கட்கிழமை (28) மதியம் 2 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல் முனையில் இருந்து கடலில் நீந்த ஆரம்பித்து இரவு 09.55 மணிக்கு இலங்கை தலை மன்னாரை 7 மணி 55 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்தார்.





பின்னர் அங்கிருந்து இரவு 10.30க்கு புறப்பட்டு செவ்வாய்க்கிழமை (29) காலை 9.45க்கு தனுஷ்கோடி அரிச்சல்முனை வந்தடைந்தார். சிறுவன் சினேகன் 19 மணி நேரம் 45 நிமிடத்தில் பாக் ஜலசந்தி கடலை இரு வழி நீந்தி கடந்து சாதனை படைத்தார்.

கடந்த 1974ஆம் ஆண்டு இலங்கையை சேர்ந்த வி.எஸ்.குமார் ஆனந்த் முதல் முறையாக தலைமன்னார் முதல் தனுஷ்கோடி மீண்டும் தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரை 51 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்தார். அவரை தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு இலங்கையை சேர்ந்த ரேஷன் அபே சுந்தர தலைமன்னார் முதல் தனுஷ்கோடி பின்னர் தலைமன்னார் வரை 28 மணி நேரம் 19 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்தார்.

இந்நிலையில் இந்தியாவை சேர்ந்த சினேகன் முதன் முறையாக தனுஷ்கோடி முதல் தலைமன்னார் பின்னர் அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடி வரை இரு வழி நீந்தி கடக்க முயற்சி செய்து 19 மணி நேரம் 45 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார். கடலில் நீந்தி வந்த சிறுவன் சினேகனை மண்டபம் கடலோர காவல்படை கமாண்டர் நாகேந்திரன் பூங்கொத்து கொடுத்து வரவேற்ற சிறுவனை வாழ்த்தினார்.

இவர்களுக்கு உதவியாக இலங்கை கடற்படையின் ரோந்து படகு சர்வதேச எல்லை வரையிலும், இந்திய கடல் பகுதியில் மெரைன் போலீசார் மற்றும் இந்திய கடலோர காவல்படையின் கப்பலும் பாதுகாப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**







இந்தியா செய்திகள் India News

# ரூ.6,100 கோடிக்கு ஒப்பந்தங்கள் 14,700 பேருக்கு வேலைவாய்ப்பு அமீரக பயணம் குறித்து முதல்வர் ஸ்டாலின் பேட்டி

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துபாய் மற்றும் அபுதாபி பயணத்தை முடித்துக் கொண்டு மார்ச் 29 அன்று அதிகாலை சென்னை வந்தடைந்த பின் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

எனது பயணம் வெற்றிகரமாக, மகிழ்ச்சிகரமான பயணமாக அமைந்தது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எப்படி துபாய் ஒரு பிரமாண்டமான ஒரு நாடாக உருவாகியிருக்கிறதோ, அதுபோன்று என்னுடைய பயணமும் மிகப் பிரமாண்டமான வகையில் அமைந்தது.

ஆறு மிக முக்கியமான தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு இருக்கின்றன. இரும்பு தளவாடங்கள் துறையில் இருக்கக்கூடிய நோபல் ஸ்டீல்ஸ் துறையோடு 1,100 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. ஜவுளித் துறையைச் சார்ந்த ஒயிட் ஹவுஸ் நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

உணவுத் துறையைச் சார்ந்த டிரான்ஸ்வேர்ல்டு குழுமத்தோடு 100 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையைச் சார்ந்த அஸ்டர் டிஎம்ஹெல்த்கேர் நிறுவனத்தோடு 500 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

சரக்கு போக்குவரத்து நிறுவனத்தைச் சார்ந்த ஷராப் நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. உணவு பதப்படுத்தும் தொழில் மற்றும் கட்டுமானத்துறையைச் சார்ந்த லுலு நிறுவனத்தோடு 3,500 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. இந்த ஆறு நிறுவனங்களுடன் 6,100 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. இந்த ஒப்பந்தங்கள் போடப்பட்டிருப்பதன் மூலமாக 14,700 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகப் போகிறது.

ஆகவே, இந்தப் பயணம் ஒரு மகத்தான பயணமாக, வெற்றிப் பயணமாக அமைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் தொழில் முதலீடுக்கு ஏற்ற சூழல் இருப்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். தொடர்ந்து, அடுத்தடுத்த மாதங்களில் இன்னும் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கின்றன. நான் சந்தித்த அனைவரையும், தமிழ்நாட்டிற்கு வருகை தரவேண்டும் என்று நான் அழைப்பு விடுத்திருக்கிறேன். அவர்களது வருகை தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக நிச்சயம் அமையப் போகிறது.

மேலும் தமிழ்நாட்டில் தொழில் துறையின் கீழ் இயங்கக்கூடிய தொழில் வழிகாட்டி நிறுவனம் கைடன்ஸ் பியூரோ மூலமாக இரு நாடுகளிலிருந்து மேலும் முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும். கடந்த அதிமுக ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் காகிதக் கப்பல்களாகத் தான் இருந்தன. ஒப்பந்தம் போட்டதோடு சரி. ஆனால் நாங்கள் ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். அதனை விட முக்கியமாக அந்த நிறுவனங்கள் இங்கே வந்து தொழில் தொடங்க நடவடிக்கை எடுப்பதும், துரிதப்படுத்துவதுடன், முதலமைச்சரின் அலுவலகத்தில் டேஷ்போர்டு வைத்து மாதந்தோறும் அதை நாங்கள் ஆய்வு நடத்தி குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே அந்தத் தொழிலைத் தொடங்கி ஒரு நல்ல சூழலை உருவாக்கப் போகிறோம்.

வேலைவாய்ப்பை உருவாக்கப் போகிறோம். இதனை, உடன் வந்த அதிகாரிகள் அனைவருக்கும் நான் உத்தரவாக பிறப்பித்திருக்கிறேன். தொழில் துறைக்கு நன்றி சொன்னது போலவே, துபாய் அபுதாபி வாழ் தமிழர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தந்த வரவேற்பு மிகவும் எழுச்சியோடு, உணர்ச்சியோடு இருந்தது, இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், நாங்கள் போனபோது தமிழ்நாட்டு உணர்வைத் தான் நான் பெற்றேன். அந்த அளவிற்கு அவர்கள் உற்சாகத்தை, வரவேற்வை எனக்கு வழங்கியிருக்கிறார்கள்.



எதிர்பார்ப்பு

கேள்வி: துபாயில் உள்ள தொழிலதிபர்களுக்கு இங்கு வந்து தொழில் தொடங்குவதற்கு எந்த அளவு எதிர்பார்ப்பு இருக்கிறது? இங்கு வந்து தொழில் தொடங்குவதற்கு அவர்களுக்கு எந்த அளவுக்கு நம்பிக்கை கொடுத்திருக்கிறீர்கள்?

முதலமைச்சர்: ஒப்பந்தம் நேரடியாக கையெழுத்திட்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் தொடங்கினீர்கள் என்றால் எல்லா விதமான சலுகைகளும் முறையான வகையில் தொழில் தொடங்குவதற்கான சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்கத் தருகிறோம் என்ற நம்பிக்கையை கொடுத்திருக்கிறோம். அவர்களும் அந்த நம்பிக்கையுடன் தான் இருக்கிறார்கள்.

கேள்வி: இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் தொழில் வடிவம் எத்தனை மாதங்களில் வரும்?

முதலமைச்சர்: ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்து ஒப்பந்தம் கையெழுத்திட்டிருக்கிறோம். அதுதான் சொன்னேன், நாங்கள் ஒப்பந்தம் போட்டிருக்கிற தேதிக்கு முன்பே அந்தத் தொழிலை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்து வேலைவாய்ப்பை நிச்சயமாக உருவாக்கித் தருவோம். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

எதிர்க்கட்சிகள் விமர்சனம்

கேள்வி: உங்களுடைய பயணம் குறித்து எதிர்க்கட்சிகள் எல்லாம் பல குற்றச்சாட்டுகள் வைக்கிறார்கள், அதைப் நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

முதலமைச்சர்: அவர்கள் எதிர்க்கட்சி, அப்படித்தான் சொல்வார்கள். நான் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவது கிடையாது.

கேள்வி: தொடர்ச்சியாக இப்பொழுது ஐக்கிய அரபு நாடுகளில் சென்றது போல, வேறு நாடுகளுக்குச் சென்று, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்பு எப்படி இருக்கிறது?

முதலமைச்சர்: தொழில் தொடங்கக்கூடிய சூழ்நிலையில், வேலைவாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நிச்சயமாக அப்படி ஒரு சூழ்நிலை வருகிற போது நான் நிச்சயமாக பயன்படுத்துவேன், அதில் எந்த சந்தேகமும் இல்லை.

இவ்வாறு ஸ்டாலின் பேட்டி அளித்தார்.



# யாழ். கலாச்சார மையத் திறப்பு விழாவும் அதுதொடர்பான சில கேள்விகளும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த திங்கட்கிழமை யாழ். கலாச்சார மையம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. ஆனால் பொருத்தமான வார்த்தைகளில் சொன்னால் அது வைபவ ரீதியாக திறக்கப்பட்ட பின் மூடப்பட்டுள்ளது என்பதே சரி. இந்தியாவின் நிதி உதவியோடு கட்டப்பட்ட அக்கட்டடம் 11 மாடிகளைக் கொண்டது. யாழ்ப்பாணத்தின் நில அமைப்பைப் பொருத்தவரை ஆறு மாடிகளுக்கு மேல் கட்டிடங்களைக் கட்டுவதற்கு கட்டட நிர்மாணத் துறையினர் அனுமதிப்பதில்லை. எனினும் விசேஷ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய எல்லா கட்டடங்களை விடவும் உயரமான ஒரு கட்டடமாக கலாச்சார மையம் கட்டியெழுப்பப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தமிழர்களின் தாயகத்தில் உள்ள மிக உயரமான கட்டடம் அது. அதன் அசாதாரண உயரத்தை வைத்து, இந்தியா அதன் மேற் தளத்திலிருந்து வடபகுதியை கண்காணிக்கப் போகிறது என்றெல்லாம் கதைகள் பரவின. ஆனால் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் பல மாதங்களுக்கு ஆட்புழக்கமில்லாத ஒரு பொதுக் கட்டடமாக அது காணப்படுகிறது.

அக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின் அதை இந்தியப் பிரதமர் மோடி வந்து திறந்து வைப்பார் என்றும் திறப்பு விழா கோலாகலமாக ஒழுங்கமைக்கப்படும் என்றும் அதில் இசையமைப்பாளர் ரகுமானின் இசை நிகழ்ச்சியிருக்கும் என்று முன்பு கூறப்பட்டது. ஆனால் கடந்த திங்கட்கிழமை அமைதியாகவும் அழைக்கப்பட்ட குறிப்பிட்ட தொகை விருந்தினர்களின் முன்னிலையிலும் மெய்நிகர் நிகழ்வு ஒன்றில் கலாச்சார மையம் திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழா soft opening என்று அழைக்கப்பட்டது. மெய்நிகர் வைபவம் என்பதால் அது அவ்வாறு அழைக்கப்பட்டது என்று ஒரு விளக்கம் உண்டு. ஆனால் திறப்பு விழாவை வைத்துக் கூறுவதென்றால் அது ஒரு பகுதியளவான திறப்புத்தான். விழாவிற்கு வருகை தந்தவர்கள் கலாச்சார மையத்தின் கலையரங்கத்துக்குள் மட்டுமே நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். கலாச்சார மண்டபத்தின் ஏனைய பகுதிகளுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படவில்லை. மேலும் கலாச்சார மையத் திறப்பு விழா நடந்து கையோடு அது மீண்டும் மூடப்பட்டுவிட்டது. அது பொதுமக்களின் பாவனைக்கு திறக்கப்படவில்லை.

எல்லாவற்றையும் விட முக்கியமாக கலாச்சார மையம் யாருடைய பொறுப்பில் இருக்கும் என்பது தொடர்பில் தெளிவான தகவல்கள் இல்லை. கலாச்சார மையம் மாநகரசபை எல்லைக்குள் வருகிறது. ஆனால் மாநகர சபையிடம் அவ்வாறான பிரம்மாண்டமான ஒரு மையத்தை நிர்வகிப்பதற்கு போதுமான நிதி இல்லை. யாழ் மாநகர சபையின் வருமானம் அதற்குப் போதாது.எனவே அதை மத்திய கலாச்சார அமைச்சு அதன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரக்கூடிய நிலைமைகளே அதிகமாக தென்பட்டன. மாநகர முதல்வராக மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டதும் அவர் கலாச்சார மையத்தை மாநகர சபை பொறுப்பேற்கும் என்று தெரிவித்தார். அதற்கு வேண்டிய நிதியை இந்தியா வழங்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்த்தார். இந்தியா அதற்குரிய நிதியை குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு வழங்க முன் வந்ததாக ஒரு தகவல் உண்டு. இதுதொடர்பாக கொழும்பில் நடந்த சந்திப்புக்களில் ஒன்றின் போது கலாச்சார அமைச்சின் பிரதானி ஒருவர் மாநகர முதல்வரிடம் "நீங்கள் இந்தியாவை நம்பக்கூடாது அரசாங்கத்தைத்தான் நம்ப வேண்டும்" என்ற தொனிப்பட அறிவுறுத்தியிருக்கிறார். அவர் அவ்வாறு கூறும்பொழுது கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் துணைத் தூதுவரும் அங்கிருந்திருக்கிறார்.

எனினும் யாழ் மாநகர சபை தன் கொள்ளளவை மீறி கலாச்சார மையத்தை பொறுப்பேற்க தயாராக காணப்படுகிறது. ஆனால் இன்று வரையிலும் அவ்வாறு கலாச்சார மையத்தை இயக்குவதற்கு தேவையான நிர்வாக கட்டமைப்புக்கள் எவையும் உருவாக்கப்படவில்லை. அக்கட்டமைப்புகளுக்கு பொறுப்பாக ஒரு நிர்வாக சேவை அதிகாரியும் ஒரு கியூறேற்றரும் (curator) -எடுத்தாளுநரும்- நியமிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

இடையில் மாநகரசபை கலாச்சார மையத்தை நிர்வகிக்கத் தேவையான உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கப் போவதாக செய்திகள் வெளிவந்தன. எனினும் உரிய நிர்வாகக் கட்டமைப்புக்கள் எவையும் இன்றுவரையிலும் உருவாக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் கலாச்சார மையம் திறக்கப்பட்டிருக்கிறது.

கலாச்சார மையத்தை அரசாங்கம் மத்திய கலாச்சார அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவிரும்புவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்தியா அதை தமிழ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் வழங்குவதற்கு முன்னுரிமை அளிப்பதாக தெரிகிறது. இப்போது கிடைக்கும் செய்திகளின்படி சிலசமயம் கலாச்சார மையத்தின் நிர்வாகம் ஒரு தனியார் நிறுவனத்திடம் வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இது போன்ற மையங்கள் உள்ளூர் மக்களின் பங்களிப்போடு நிர்வகிக்கப்படும் போதுதான் அவை மெய்யான பொருளில் பண்பாட்டு மையங்களாக திகழும் என்பதே உலக அனுபவம் ஆகும். ஆனால் கலாச்சார மையத்தை யார் நிர்வகிப்பது என்பது தொடர்பில் பொருத்தமான இறுதி முடிவுகள் எடுக்கப்படாத ஒரு வெற்றிடத்தில்தான் மேற்கண்டவாறு ஒரு மென் திறந்துவைப்பு நடந்திருக்கிறது.

ஒரு பிரம்மாண்டமான முழு அளவிலான திறப்பு விழா வரும் நொவம்பர் மாதமளவில் ஒழுங்கு செய்யப்படும் என்று ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது சொ.்.ப்ற் ஓப்னிங் எனப்படுவது பிரயோகத்தில் முழு அளவிலான திறந்துவைப்பு அல்ல என்றும் பொருள்.

இந்த மாதம் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய பிரதமர் வரக்கூடும் என்ற எதிர்பார்ப்புகள் எழுந்தபோது அவர் கலாச்சார மண்டபத்தையும் திறந்து வைப்பார் என்றும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. ஆனால் அவ்வாறு எதுவும் நடக்க வில்லை. மாறாக அந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக வந்த இந்திய வெளியுறவு அமைச்சரும் இலங்கையின் பிரதமரும் இணைந்து மெய்நிகர் நிகழ்வு ஒன்றின் மூலம் கலாச்சார மண்டபத்தை திறந்து வைத்திருக்கிறார்கள்.

திறக்க வேண்டும் என்பதற்காக அவசரப்பட்டு சம்பிரதாய பூர்வமாக கலாச்சார மையம் திறக்கப்பட்டிருப்பதாகவே கருதவேண்டியுள்ளது. பிரதமர் மோடி வந்து அதை முழுமையாகத் திறந்து வைப்பார் என்றால் ஏன் அவசரப்பட்டு பகுதியளவு திறந்துவைக்க வேண்டும்? பிரதமர் மோடி வரும் வரையிலும் பொறுத்திருக்கலாம் தானே? பிரதமர் மோடி வருகை தந்து திறந்து வைக்கும் வரையிலும் கலாச்சார மையம் கடந்த பல மாதங்களாக இருந்து வந்ததைப் போலவே யாழ்ப்பாணத்தின் மிக உயரமான ஆனால் ஆளரவமற்ற ஒரு கட்டடமாக தொடர்ந்தும் இருக்கப் போகிறதா?

கடந்த சில மாதங்களாக இந்திய இலங்கை அரசாங்கத்துக்கு அதிக தொகை பணத்தை கடனாக கொடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் இலங்கை அரசாங்கத்தின் மீது இந்தியாவின் பிடி பலமடைந்து வர வேண்டும். அவ்வாறு இந்தியாவின் பிடி இலங்கைதீவில் பலமடைந்து வந்தால் இந்தியாவின் நிதி உதவியோடு உருவாக்கப்படும் கலாச்சார இணைப்பு திட்டங்களை விரைவாக முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும். குறிப்பாக கலாச்சார மண்டபத்தை முழுமையாக திறப்பது, பலாலி விமான நிலையத்தை இரண்டாம் கட்டத்திற்கு விரிவுபடுத்தி விஸ்தரித்து திறந்துவிடுவது, மூன்றாவதாக காங்கேசன்துறையிலிருந்து காரைக்காலுக்கு ஒரு பயணிகள் போக்குவரத்து படகை ஓடவிடுவது போன்ற இணைப்புத் திட்டங்களுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும். ஆனால் இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதாக செய்திகள் கிடைக்கவில்லை.

ஆனால் அதேசமயம் கலாச்சார மையம் திறந்து வைக்கப்பட்ட அதேநாளில் கொழும்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஆறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. அவற்றுள் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் நிறுவப்பட இருக்கும் மீளப்புதுப்பிக்கும் எரிசக்தி திட்டம், இந்தியா தனது தென் கடலோர கண்காணிப்பை ஒப்பீட்டளவில் அதிகளவு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஏற்பாடு செய்யும் ஓர் உடன்படிக்கை (MRCC) என்பனவும் அடங்கும்.

அதாவது இந்தியா கடனைக் கொடுத்து தனக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொள்கிறது. எனினும், கலாச்சார மையத்தை மக்கள் பாவனைக்கு திறந்து விடுவது மேலும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்திய பிரதமர் இலங்கைக்கு வரும் வரையிலும் கட்டடம் தொடர்ந்தும் ஆளரவமற்ற ஒரு கட்டடமாகத்தான் இருக்கப் போகிறதா? அதாவது கலாச்சார மையம் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறையில் இருந்து காரைக்காலுக்கு பயணிகள் போக்குவரத்துச் சேவை, மன்னாரில் இருந்து ராமேஸ்வரத்திற்கு மற்றொரு பயணிகள் படகுச் சேவை போன்ற தமிழ் மக்களுக்கும் தமிழகத்துக்கும் இடையிலான இணைப்புகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் இழுபட்டு இழுபட்டு நகர்கின்றன.

கலாச்சார மையம் கட்டப்பட்டு பல மாதங்களின் பின்னர் முழுமையாக திறக்கப்படாமலிருப்பது, பலாலி விமான நிலையத்தின் இப்போதுள்ள நிலைமையோடு ஒப்பிடத் தக்கது. அவ்விமான நிலையம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி காலத்தின் கடைசி பகுதியில் அவசர அவசரமாக திறக்கப்பட்டது. ஜனாதிபதி தேர்தலில் பெரும்பாலும் ராஜபக்சக்கள் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதை முன்னுணர்ந்து ரணில் விக்கிரமசிங்க தனது ஆட்சிக்காலத்தின் கடைசிக் கட்டத்தில் அவசர அவசரமாக அதை திறந்தார். திறக்கப்பட்ட பொழுது அந்த விமான நிலையத்தில் கொள்ளளவின்படி சிறிய விமானங்கள்தான் அங்கே வந்து போகக் கூடியதாக இருந்தது. சுமார் 70 பயணிகளை ஏற்றி இறக்கக்கூடிய விமானங்கள் மட்டும்தான் அங்கே வந்து போகலாம். பயணிகள் ஒவ்வொருவரும் இருபது கிலோ நிறை கொண்ட பொதிகளைத்தான் எடுத்து வரலாம். இதனால் விமான நிலையத்தை அடுத்த கட்டத்துக்கு விஸ்தரிக்க வேண்டிய தேவை இருந்தது.

இந்தியா அதற்கு நிதி உதவி வழங்குவதாகவும் கூறியது. ஆனால் அதற்கிடையே பெரும் தொற்றுநோய் பரவியது. அதனால் விமான நிலையம் மூடப்பட்டது. அதன்பின் விமான நிலையத்தை திறக்கப் போவதாக அரசாங்கமும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அடிக்கடி கூறியிருக்கிறார்கள். சிலசமயம் ஊடகங்களில் விமான நிலையம் மீளத்திறக்கப்படும் திகதியும் அறிவிக்கப்படுவது உண்டு.உதாரணமாக கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி விமான நிலையம் திறக்கப்படும் என்று ஒரு செய்தி வந்தது. ஆனால் இன்றுவரையிலும் அந்த விமான நிலையம் மீளத் திறக்கப்படவில்லை. அண்மையில்கூட யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அமைச்சர் பீரிஸ் அந்த விமான நிலையத்தை பற்றி குறிப்பிட்டிருந்தார். ஆனாலும் அது திறக்கப்படவில்லை. அவசரமாக திறக்கப்பட்டு அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படாமல் அது மூடப்பட்டுவிட்டது. யாழ் கலாச்சார மண்டபம் திறக்கப்பட்ட விதமும் அது யாருடைய நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது என்பது தொடர்பாக காணப்படும் குழப்பமும் தவிர்க்க முடியாதபடி பலாலி விமான நிலையத்தை ஞாபகப்படுத்துகின்றன.

## வீணாவின் கவிக்கணை

ஏறிச்செல்லும் ஏணி,
ஏறிய பிறகு, அதை
யாரும் தேடுவதில்லை,
ஏறியவனோ
தன்னை ஊக்குவித்து
முன்னேற்றிவிடுபவனை எட்டி
உதைத்து விட்டு
தன்னைவிட உயர்ந்தவன்
காலில் செருப்பாகி கிடப்பான்,
ஏற்றியவன் கால் செருப்பாக
வேண்டும் என்பதல்ல கருத்து,
அவன் கழுத்தில் உன் கால் வைக்காமல்
இருப்பதே சிறப்பு.




கனடிய செய்திகள்
Canadian News

# "புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" திரைப்படம் APRIL 9ம் திகதி சனிக்கிழமை கனடா ஸ்காபுறோவில் திரையிடப்படுகின்றது

யாழ் மண்ணில் தொடர்ச்சியாக வாழ்ந்த வண்ணம் கல்வி கற்று கலைகளையும் சினிமாவையும் கற்றுத் தேர்ந்த இயக்குனர், தயாரிப்பாளர்கள், நடிக, நடிகையர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் இணைந்து எமக்களித்த திரைப்படம் "புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" இலங்கையில் தமிழர்கள் வாழும் நகரங்களில் திரையிடப்பெற்ற இந்தத் திரைப்படம் எதிர்வரும் April 9ம் திகதி சனிக்கிழமை கனடாவின் ஸ்காபுறோ நகரில் திரையிடப்படுகின்றது.

3 காட்சிகளாக, யாழ்ப்பாணத் திரையரங்குகளில் வெற்றி நடைபோட்ட இந்த திரைப்படத்தை அனுமதிச் சீட்டுக்களைப் பெற்று.

பார்த்து மகிழுங்கள். அனுமதிச் சீட்டுக்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்: (416) 732-1608, (647) 770-7482, (416) 669-6437

# சுவாமி விபுலானந்தரை "முத்தமிழ் அறிஞர்" என்ற வட்டத்திற்குள் அடக்கி விடமுடியாது என்கிறார் மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிஷன் சுவாமி நீலமாதவானந்தா

சுவாமி விபுலானந்தர் அவர்களை "முத்தமிழ் அறிஞர்" என்ற வட்டத்திற்கு அடக்கி விடமுடியாது. அவரது இளவயதிலிருந்தே இறைவனின் ஆசியும் அருளும் பெற்ற ஒருவராக வாழ்ந்துள்ளார். அவர் விரும்பிய போதெல்லாம் அவருக்கு தேவையான பொருட்களை அவரை அறியாதவர்கள் பலர் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்கள். உதாரணமாக சில புத்தகங்களை அவர் வாசிக்க விரும்பிய போது அவை விபுலானந்தர் அடிகளாருக்கு எவ்வித தடையுமின்றி கிடைத்துள்ளன.

எனவே அந்த மகானின் 130வது பிறந்த நாளை உலகெங்கும் பலநாடுகளிலிருந்தும் அவரை மரியாதை செய்து நேசிப்பவர்களாகிய நாம் கொண்டாடி மகிழ்கின்றோம்.

இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் கனடா ஸ்காபுறோ நகரிலிருந்து விபுலானந்த அடிகளாரின் 130வது பிறந்த நாளை கொண்டாடும் வண்ணம் "சுவாமி விபுலானந்தர் கலை மன்றம் - கனடா" ஏற்பாடு செய்த விழாவில் இணையவழி மூலம் உரையாற்றிய மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிஷன் அமைப்பின் பொறுப்பாளர்களில் ஒருவரான சுவாமி நீலமாதவானந்தா அவர்கள் சிறப்புரையாற்றிய போது தெரிவித்தார்.







சுவாமி விபுலானந்தர் கலை மன்றம் - கனடா அமைப்பின் தலைவர் வல்



புருஷோத்தமன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவை மன்றத்தின் செயலாளர் நித்தி சிவானந்தராஜா சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

திரு. திருமதி கோணேஸ் - கீதா தம்பதியினர் மங்கல விளக்கேற்றினர். திருவாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை சுதர்ஷன் பத்மநாதன் ஆகிய இருவரும் விபுலானந்தர் அடிகளாரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்கள். தொடர்ந்து தலைவர் உரை இடம்டபெற்றது. அவரே வரவேற்புரையையும் ஆற்றினார். சங்கீத பூசணம் திருமதி. குலநாயகி விவேகானந்தன் அவர்கள் விபுலானந்தர் அடி-களாரின் புகழ்பாடும் பாடல்களை இசையோடு பாடி அனைவரையும் மகிழ்வித்தார்.

தொடர்ந்து கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம். மா. நல்லரத்தினம். சட்டத்தரணி சாம் தில்லையா ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினார்கள். தொடர்ந்து அமெரிக்கா வாழ் டாக்டர் தமிழ்ச் செல்வி முருகேசன் அவர்கள் சிறப்புரையாற்றி சபையோரை மகிழ்வித்தனர். அவரைத் தொடர்ந்து கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கமும் சிறப்புரையாற்றினார். கவிஞர் குமரகுரு நன்றியுரையாற்றினார்.

**செய்தியும் படங்களும்: சத்தியன் - கனடா உதயன்**

இந்தியா செய்திகள்
India News

# கொரோனா தாக்கிய 5-ல் ஒருவரை நீரிழிவு தாக்குகிறது

## ஓமந்தூரார் மருத்துவமனை ஆய்வில் தகவல்

சென்னை ஓமந்தூரார் மருத்துவமனையில் 500 கொரோனா பாதிப்பாளர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின்போது வயது வித்தியாசமின்றிகொரோனா தாக்கிய 5-ல் ஒருவரை நீரிழிவு தாக்குவது தெரிய வந்துள்ளது.

கொரோனா பாதித்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சென்னையில் பல்வேறு மருத்துவமனைகளில் சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட்டன. ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் 500 படுக்கைகள் கொண்ட சிறப்பு கிகிச்சை பிரிவு உருவாக்கப்பட்டது.

அங்கு கிசிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியவர்கள் மீண்டும் புத்துணர்ச்சி பெறவும், அதே மருத்துவமனையில் தனி பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. கொரோனாவுக்கு பின்பு ஏற்படும் தாக்கங்களை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றியும் அந்த தனிப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஓமந்தூரார் மருத்துவமனையில் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று மீண்டவர்களிடம் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது கொரோனா வைரஸ் தாக்கியவர்களில் 5-ல் ஒருவருக்கு நீரிழிவு நோய் தாக்கி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

பொதுவாக உடலில் இன்சுலின் சுரக்கும் அளவு குறைந்தாலோ அல்லது இன்சுலின் சுரக்காத போதே நீரிழிவு நோய் உருவாகி விடும். ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கும். இது சிறுநீரகங்களின் ரத்த நாளங்களை தாக்கி சேதப்படுத்தும் அபாயம் கொண்டது.

ஓமந்தூரார் மருத்துவமனையில் 500 கொரோனா பாதிப்பாளர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின்போது வயது வித்தியாசமின்றி நீரிழிவு தாக்கம் ஏற்பட்டு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த 500 பேரில் 196 பேர் பெண்கள். இவர்களில் 92 பேருக்கு நீரிழிவு தாக்கம் உருவாகி இருக்கிறது. கொரோனா பாதிப்புக்கு பிறகு இவர்களிடம் எப்படி நீரிழிவு நோய் உருவானது என்றும் ஆய்வு செய்யப்பட்டது.

அப்போது நமது உடலில் உள்ள இன்சுலின் சுரப்பி செல்களை கொரோனா வைரஸ் தாக்கி அழிப்பது தெரியவந்துள்ளது.

கொரோனாவால் நீரிழிவு நோய் தாக்கத்திற்கு ஆளாகி இருப்பவர்களில் 47 பேர் 20 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள். இவர்களில் 9 பேருக்கு ரத்தத்தில் சர்க்கரை அளவு கொரோனா வைரசால் அதிகரித்து இருப்பது தெரியவந்துள்ளது. 35 பேர் 50 முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள்.

ரத்தத்தில் சர்க்கரை அளவு இயல்பாக இருப்பதை விட கொரோனா பாதிப்பாளர்களுக்கு அதிகளவு உயர்ந்துவிட்டதை ஓமந்தூரார் மருத்துவமனை ஆய்வு உறுதிப்படுத்தி இருப்பதாக டீன் ஜெயந்தி தெரிவித்தார். மற்ற மருத்துவமனைகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளிலும் இதேபோன்ற முடிவுகள் வந்திருப்பதாக அவர் கூறினார்.

நீரிழிவு நோய்களில் பலவகைகள் உள்ளன. டைப்-1 எனப்படும் முதல் வகையில் சிறுவர்களுக்குத்தான் அதிக பாதிப்பு ஏற்படும். டைப்-2 என்ற 2-வது வகை நீரிழிவு பாதிப்பு, கணையம் போதுமான இன்சுலினை உற்பத்தி செய்யாதபோது ஏற்படுவது ஆகும்.

கொரோனாவுக்கு பின்பு நீரிழிவு நோயால் தாக்கப்படும் அனைவரும் இந்த 2-ம் வகை நீரிழிவு பிரிவில் இருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. என்றாலும், நீரிழிவுக்கு மிக முக்கிய மூலகாரணமாக அமைவது என்பதை கண்டுபிடிக்க தொடர்ந்து ஆய்வு நடந்து வருகிறது.

இன்சுலின் உற்பத்தி செய்யும் பீட்டா செல்களை கொரோனா வைரஸ் அழிப்பதை உலகம் முழுக்க உள்ள நிபுணர்கள் உறுதி செய்துள்ளனர். அதோடு கொரோனா பாதிப்பின் போது பயன்படுத்தும் மருந்துகளும் நீரிழிவு ஏற்பட ஒரு காரணமாகும் என்று பிரபல நீரிழிவு நிபுணர் டாக்டர் வி.மோகன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவிய காலங்களில் அனைவரும் வீடுகளில் முடங்க நேரிட்டதால் மன அழுத்தத்திற்கு உள்ளானார்கள். பலர் உடல் எடை கூடினார்கள். இத்தகைய காரணங்களும் நீரிழிவு நோய் வருவதற்கு ஒரு காரணமாக அமைந்திருப்பதாக மருத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். தொடர்ந்து இது தொடர்பாக மருத்துவமனைகளில் ஆய்வு நடந்து வருகிறது.

# டெல்லி நேரு நினைவு இல்லம் பிரதமர்கள் மியூசியமாக மாற்றம்

டெல்லியில் நேரு நினைவு இல்லம் பிரதமர்கள் மியூசியமாக மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. அதை பிரதமர் மோடி ஏப்ரல் 14-ந்தேதி திறந்து வைக்கிறார்.

நேரு இல்லம்

டெல்லியில் மறைந்த முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேருவுக்கு தீன் மூர்த்தி எஸ்டேட்டில் நினைவு இல்லம் உள்ளது. நேருவின் வாழ்க்கையை சித்தரிக்கும் வகையில் அவர் பயன்படுத்திய பொருட்கள், புத்தகங்கள் அந்த நினைவு இல்லத்தில் உள்ளன.

நேருவின் தியாகத்தை அந்த நினைவு இல்லம் பிரதிபலிப்பது போல முன்னாள் பிரதமர்கள் அனைவரது தியாகத்தையும் பிரதிபலிக்க செய்ய வேண்டும் என்று பிரதமர் மோடி திட்டமிட்டார்.


இதையடுத்து தீன் மூர்த்தி வளாகத்தின் ஒரு பகுதியில் முன்னாள் பிரதமர்கள் அனைவருக்கும் மியூசியம் ஒன்று கட்டப்படும் என்று அவர் கடந்த 2018-ம் ஆண்டு அறிவித்தார்.

அதன்படி ரூ.271 கோடி செலவில் 10,975.36 சதுர மீட்டர் பரப்பளவில் முன்னாள் பிரதமர்கள் மியூசியம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த மியூசியத்தில் 14 முன்னாள் பிரதமர்களின் அபூர்வப்படங்கள், குறிப்புகள், நாட்டுக்காக அவர்கள் செய்த தியாகங்கள் அனைத்தும் வடிவமைக்கப்பட்டுள்ளன.



இந்த மியூசியத்தை வருகிற 14-ந்தேதி அம்பேத்கர் பிறந்த தினத்தன்று பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளார். அன்றைய தினம் அம்பேத்கரின் நூற்றாண்டு பிறந்த தினம் தொடங்குகிறது. அதன் தொடக்கமும் அந்த விழாவில் நடைபெற உள்ளது.

முன்னாள் பிரதமர்கள் மியூசியம் மூலம் நாட்டுக்காக உழைத்த அனைவரின் தியாகத்தையும் ஒரே இடத்தில் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆம்ஸ்ட்ராங்கின் செய்தியும் ஆறிய தேநீரும்

- சிவா பரமேஸ்வரன் & நடராசா லோகதயாளன்

ஜூலை 20, 1969 அமெரிக்க நேரம் மாலை (EDT) 4:17 மணி, 30 நொடிகள் மட்டுமே செயல்படும் அளவிற்கான எரிபொருள் எஞ்சியிருந்தது. ரேடியோ மூலம் செய்தி அனுப்பினார் ஆம்ஸ்ட்ராங்:

"ஹுஸ்டன், இங்கு அமைதிப் பெருங்கடல், கழுகு தரையிறங்கிவிட்டது"

அமெரிக்க விண்வெளி அமைப்பான நாசா நிலவுக்கு வெற்றிகரமான அனுப்பிய அப்பலோ 11 விண்கலத்திலிருந்து ஆம்ஸ்ட்ரங் ரேடியோ வழியாக கூறிய அந்த தகவலைக் கேட்டதும் கண்காணிப்பு மையத்திலிருந்தவர்கள் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தனர் உலகம் ஆர்ப்பரித்தது, ஆனால் ரேடியோ மூலம் அந்த செய்தி வந்த பிறகு அடுத்த செய்தியை எதிர்பார்த்து ஒரு சிலர் அமைதியாக காத்திருந்தனர்.

கண்காணிப்பு மையத்திலிருந்த ஒரு மூத்த விஞ்ஞானி எழுந்து, "உங்கள் பொடியன்கள் சாதித்து விட்டனர் நாம் நிம்மதியாக மூச்சுவிடலாம்" என்று பலத்த கரகோ'த்தில் இடையே கூறினார். அப்பவும் சிலர் அமைதியாக இருந்தனர்.

அடுத்த சில நிமிடங்களில் ஆம்ஸ்ட்ராங்கிடமிருந்து அடுத்த ரேடியா செய்தி வந்தது

"தரையிறங்குவது மிகப்பெரும் கவலையாகவுள்ளது, இங்கு இனந்தெரியாத அம்சங்கள் ஏராளம், ஆயிரம் வி'யங்கள் பற்றி கவலைப்பட வேண்டியுள்ளது"

அரங்கில் அமைதியாக இருந்த குழுவிற்கு படபடப்பு அதிகரித்தது. அவர்களுக்கு வெளியே சந்தோஷம் உள்ளே சங்கடம். அறிவியலும், அறிவும் தம்மைக் கைவிடாது என்று அவர்கள் திடமாக நம்பினர். ஆனாலும் அந்த திக்....திக்......திக்.....இருந்துகொண்டே இருந்தது. வயிற்றிற்குள் பட்டாம்பூச்சிகள் படபடத்தன. இது ஆறு மணி நேரத்திற்கும் அதிகமாகத் தொடர்ந்தது. அந்த கண்காணிப்பு மையத்திலிருந்தவர்கள் பியரில் திளைத்திருந்தனர். ஆனால் அந்த சிறு குழுவிலிருந்தவர்களுக்கு ஆறிப்போன தேநீரைப் பருகக் கூட மனம் ஒப்பவில்லை.

பின்னர் உலகமே காத்திருந்த அந்த தருணம் வந்தது. அமெரிக்க நேரம் இரவு 10:56 மணிக்கு, கழுகின் கதவை மெல்லத் திறந்து அதைவிட மெதுவாகப் படிகளில் இறங்கி நிலவின் பரப்பில் கால்பதித்தார் நீல் ஆம்ஸ்ட்ராங். உலகில் 50 கோடி பேருக்கும் அதிகமானவர்கள் அதை தொலைக்காட்சியில் பார்த்தனர். பேசினார் ஆம்ஸ்ட்ராங்.....ரேடியே வழியே......கரகரத்த குரலாக அது உலகெங்கும் கேட்டது.

"இது தனியொரு மனிதருக்கு சிறிய முதல் அடி, ஆனால் மனித குலத்திற்கு மிகப்பெரும் முன்னெடுப்பு"

உலகம் ஆச்சரியத்தில் ஆர்ப்பரித்தது, வாழ்த்தொலிகள், தொலைபேசி அழைப்புகள், தந்திகள் ஆகியவை நாசாவில் குவிய ஆரம்பித்தன. அறிவியல் உலகில் சரித்திரம் படைக்கப்பட்டது.



அந்த சிறிய குழுவினரின் பதற்றம் தணிந்து ஆறிய தேநீரைப் பருகி கண்காணிப்பு அறையில் நிலவிய கொண்டாட்டங்களில் இணைந்து கொண்டனர். அதில் ஒருவர் குப்பிளானைச் சேர்ந்த வைத்திலிங்கம் துரைசாமி. நாசா வெற்றிகரமாக நிலவுக்கு அனுப்பிய அப்பலோ 11 விண்கலன் திட்டத்தின் தொலைத்தொடர்பு பிரிவில் முக்கியப் பொறுப்பில் இருந்தார் சில நாட்களுக்கு முன்னர் 90 வயதில் காலமான வைத்திலிங்கம் துரைசாமி.

அந்த அப்பலோ திட்டத்தில் அவரைப் போலவே முக்கிய பொறுப்பிலிருந்த சிரில் பொன்னம்பெருமவை கொண்டாடிய இலங்கை, வைத்திலிங்கம் துரைசாமியை மறந்தது ஏன் என்பது புத்த பகவானுக்கே வெளிச்சம்.

ஈழத்து மண்ணின் சிறிய கிராமமான குப்பிளானின் பிறந்து வளர்ந்து அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றிய கலாநிதி வைத்திலிங்கம் துரைசாமி கடந்த வந்த பாதை மிகவும் நீண்டது.

1968 ஆம் ஆண்டு நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் அப்பலோ-11 ஐ அனுப்புகின்ற குழுவில் அங்கம் வகித்த இலங்கையைச் சேர்ந்த இரு விஞ்ஞானிகளில் ஒருவரான வைத்திலிங்கம் துரைசாமி தாயகத்தில் தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாமல், அதை இறைப்பணிக்கு அர்ப்பணித்துவிட்டார்.

அவர் பிறந்து வளர்ந்த வீடு தற்போது குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமமாக விளங்குகிறது. அங்கு ஈழத்துச் சித்தர்கள் பலரின் படங்கள் உள்ளதோடு வாராந்தம் சனிக்கிழமைகளில் அன்னதானமும் வழங்கப்படுகின்றது. குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாசாலை, புன்னாலைகட்டுவன் ஆங்கில பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கி சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, யாழ். மத்திய கல்லூரிகளில் உயர் கற்கை நெறியினை முடித்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணித துறையில் சிறப்பு பட்டம் (B.Sc. [Hons.] in Maths) பெற்றபோதும் மாணவ பருவத்தில் குப்பிளான் விவசாய நிலங்களில் வேலை செய்வதும், சுன்னாகம் - ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு கால்நடையாகவுமே சென்று கற்றுவந்தார்.

இலங்கை பல்கலைக்கழகத்தில் கணித, விஞ்ஞான துறையில் பட்டப்படிப்பினை முடித்தபின்பு பகுதிநேர விரிவுரையாளராக பணிபுரிந்தபோது மத்திய கல்லூரி விசேட நியமனம் [Special Post with High Scale] வழங்க தயார் நிலையில் அழைப்பு விடுத்திருந்தமையால் அவர் யாழ் - மத்திய கல்லூரியில் கணிதம், பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியராகவும், மாணவர் விடுதி பொறுப்பாளராகவும் சில காலங்கள் பணிபுரிந்த காலத்தில் இங்கிலாந்து "பட்டயவியல் கணக்காளர்" [Chartered Accountant] கல்வித்துறையில் பயில்வதற்கு மனு செய்து, அனுமதி பெற்று அங்கு செல்வதற்குரிய விசா, கப்பல் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டார்.

இதற்காக 1958ம் ஆண்டு மேலை நாட்டுப் பயணங்களிற்கு விமானம் மூலம் செல்வது என்பது மிக அதிக செலவு என்பதனால் கப்பல் பிரயாணத்தின் மூலமே பிரயாணம் செய்தார். அதற்காக அப்போதே 100 பவுண்ட்ஸ் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. சில நாட்கள் பயணத்தின் பிறகு இங்கிலாந்தின் "சவுதாம்டன்" [Southamton] துறைமுகத்தினை சென்றடைந்தார்.

அவர் படித்துக் கொண்டிருக்கும் போதே லண்டனில் "கணக்காய்வு அலுவலகம் ஒன்றில் அலுவலக பணியாளராக கிழமைக்கு ஐந்து பவுண் வேதனத்திற்கு வேலை கிடைத்தது. அதேநேரம் 1958ம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவ நாடுகளில் ஒன்றான யேமன் நாட்டில் ஆசிரியர் தொழிலுக்கு விண்ணப்பங்கள் கோரும் தகவல் கிடைத்ததும் அதற்கு மனு செய்தார். லண்டனில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு அப்போது பிரித்தானியாவின் காலனித்துவ நாடான அந்த அரேபிய நாட்டில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. இதன்போது 1960ம் ஆண்டு தாயகம் திரும்பி இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார்.

திருமணத்தின் பின்பு மீண்டும் யேமன் நாடு சென்று ஆசிரியர் பணியினை தொடர்ந்தவர் 1961ம் ஆண்டு அமெரிக்காவில் பணிபுரிந்து கொண்டிருந்த அவரது நண்பன் வழிகாட்டலில் அமெரிக்கா சென்று மாசச்யூட்டஸ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயின்று முதுமாணி [M.Sc.,] பட்டமும் அமெரிக்காவின் "மேரிலான்ட் பல்கலைக்கழகத்தில் பிரயோக கணிதத்தில் கலாநிதி பட்டமும் (Ph.D.) பெற்றார். "கலாநிதி" பட்டம் பெற்றதனை தொடர்ந்து சர்வதேச ரீதியில் தொழில்நுட்ப தகவல்களை வழங்கும் அமெரிக்காவின் பிரபல தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி நிறுவனமான "பெல்லில்" நுண்பரிசோதனை கூடத்தில் தொழில் நுட்பவியல் விஞ்ஞானியாக தமது பணியினை தொடர்ந்தார்.




விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ளும் அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசா அமைப்பிற்கு விண்வெளி ஆய்வுகளுக்கு தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களை வழங்கும் ஒரு நிறுவனமாக இவர் பணிபுரிந்த "பெல் நுண்பரிசோதனை மையம்" கூட்டாகச் சேர்ந்து பணிபுரிந்தது. இதன்போது நாசா விண்வெளி விஞ்ஞானிகளுடன் சேர்ந்து நெருங்கி பணியாற்றும் வாய்ப்பு வைத்திலிங்கம் துரைசாமிக்கு கிட்டியது. பின்னர் முழுநேரமாக நாசாவின் உயர்மட்ட தொழில்நுட்பக் குழுவில் இணைந்தார்.

அப்பலோ-11 விண்கலனில் நிலவிற்குச் சென்ற பயணத்தில் நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின் ஆகியோருடன் அந்த விண்கலனின் தலைவராக இருந்து அதைச் செலுத்தியவர் மைக் காலின்ஸ். விண்வெளி தொலைத்தொடர்புகள் வளர்ச்சியடைய ஆரம்பித்த அந்தக் காலத்தில் வானொலி அலைகள் (ரேடியோ வேவ்ஸ்) மூலமாகவே அந்த தொடர்புகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது, இப்பவும் அப்படித்தான், ஆனால் தொழில்நுட்பம் மிகவும் மேம்பட்டுள்ளது.

இப்போதும் கூட அண்ட வெளியிலிருந்து பூமியில் உள்ளவர்களுக்கு வாட்ஸப்பில் அழைக்க முடியாது. அவ்வகையில் காலின்ஸ், ஆம்ஸ்ட்ராங் மற்றும் ஆல்ட்ரின் ஆகியோருடன் உரையாடும் முக்கிய குழுவில் குப்பிள்ளான் வைத்திலிங்கம் துரைசாமியும் இருந்தார்.

அவரோடு அந்த குழுவில் இருந்தவர் பால் ஹாரிஸ். அவரது மகனான ரிச்சர்ட் ஹாரிஸ், "திரு துரைசாமி எனது அப்பாவின் நெருங்கிய நண்பர். அப்பலோ விண்கலம் திட்டம் குறித்து எனது அப்பா விரிவாகத் தனது டைரியில் எழுதியுள்ளார். அதில் பலமுறை அவர் திரு துரைசாமி குறித்தும் அவரது ஆழ்ந்த அறிவு, பொறுமை, திறமை, கூட்டாகச் செயல்படுவது, ஆரவாரம் இல்லாமல் அமைதியாகச் செயல்படுவது போன்ற பல உயர்ந்த பண்புகளைக் கொண்டிருந்தார் என்று எழுதியுள்ளார். அலுவலகத்தில் இருவரும் ஒன்றாகவே தேநீருக்கும் உணவு இடைவேளைக்கும் செல்வார்கள். அப்பலோ-11 பயணத்தில், அவர்கள் குழுவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. அவரும் எனது தந்தையுமே ஆம்ஸ்ட்ராங் ரேடியோ மூலம் தெரிவித்த செய்திகளைக் கட்டுப்பாட்டு அறையிலிருந்தவர்களிடம் தெரிவித்தார்" என்றார்.

காலின்ஸ், ஆம்ஸ்ட்ராங் மற்றும் ஆல்ட்ரின் சந்திரனில் இறங்கியதிலிருந்து நிலவில் கால் பதிக்கும்வரை நாசா விண்வெளி ஆய்வுக் கூடத்திலிருந்து வழி நடத்திய தொழில்நுட்பக் குழுவில் முக்கிய இடம்பிடித்திருந்த அவரை இலங்கை உரிய முறையில் கௌரவிக்காதது மிகவும் வருத்தமளிப்பது மட்டுமின்றி இனவாதத்தின் வெளிப்பாடாகவும் பார்க்கப்படுகிறது. சிறில் பொன்னம்பெருமாவிற்கு கிடைத்த அதே அங்கீகாரம் கலாநிதி வைத்திலிங்கம் துரைசாமிக்கும் கிடைத்திருக்க வேண்டும்.



தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகப் பெருமையடித்துக் கொள்ளும் அரசியல்வாதிகள் இந்த விஷயத்தில் பாராமுகமாகவே இருந்துள்ளனர். இனியாவது அவரது நினைவைப் போற்றும் வகையில் யாழ் மண்ணிலும் தலைநகர் கொழும்பிலும் அவருக்கு ஒரு நினைவிடத்தை அமைத்து, எதிர்கால சந்ததியினர் இவரைப்பற்றியும் அறிந்துகொண்டு அவரை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்வலர்கள் கோருகின்றனர்.

குறைந்தபட்சம் முதற்படியாக யாழ்ப்பாணத்தில் அவருக்கு ஒரு சிலையும், பிரதான வீதி ஒன்றிற்கு அவரது பெயரும் வைக்கப்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது.

# International Council of Eelam Tamils
# அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

28 March 2022
Norway

**புலம்பெயர் தமிழர்களை வைத்து சிறிலங்காவை பிணையெடுக்க முயலும் எம்.ஏ.சுமந்திரன். *-அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை-***

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் 2009 மே மாதம் முடிவடைந்த போதிலும், தமிழர்கள் நிலங்கள் மீதான இராணுவ ஆக்கிரமிப்பானது தொடர்கிறது. நாட்டின் பாதுகாப்புக்கு உடனடி அச்சுறுத்தல் எதுவும் இல்லாத படியால் இலங்கையில் பாதுகாப்பு செலவினம் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் இதற்கு மாறாக, இலங்கையின் பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதுடன், அரசாங்கச் செலவுகளில் 15 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுப் போரின் போது, 2009ல் 100,000 சிப்பாய்கள் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, இது 300,000க்கு மேல் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்குச் சொந்தமான வளமான காணிகளை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்து, இராணுவ முகாம்கள் தமிழர் பிரதேசங்களில் வேரூன்றியுள்ளன. தமிழர் பிரதேசங்களில் நிலவும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் சிங்கள இராணுவம் கட்டுப்படுத்துகிறது. இன்று இலங்கையில் கள்ளச்சந்தை, பணவீக்கம் மற்றும் ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன. இலங்கை இராணுவம் வணிக முயற்சிகள், நிர்மாண ஒப்பந்தங்கள், சிவில் நிர்வாகம் மற்றும் விவசாயத்தை கட்டுப்படுத்துகிறது. இராணுவத்தின் சிவில் நிர்வாகத் தலையீட்டால் 3.5 மில்லியனுக்கும் அதிகமான தமிழ் மக்களை பாரிய இராணுவ மயப்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்பின் கீழ் தமிழர்களை நிரந்தரமாக வறுமையில் வைத்திருக்கிறது. இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு அவர்களின் உரிய அரசியல் உரிமைகளை வழங்குவதை விட அவர்களின் வாழ்வாதரத்திற்காக போராட வைத்து அவர்களை வறுமையில் வைத்திருக்கிறது! நீண்ட கால தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு உண்மையாகவும் இதயசுத்தியுடனும் தீர்வுகண்டிருந்தால் இலங்கை தற்போதைய பாரதூரமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்காது.

இந்தப் பின்னணியில், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு எந்தவொரு கணிசமான தீர்வையும் பெறாமல் இலங˙கையின் ஊழல் நிறைந்த அரசாங்கத்தை தொடர்ந்தும் பிணை எடுப்பதைத் தவிர்க்குமாறு புலம்பெயர் அமைப்புக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கேட்டுக்கொள்கின்றன. துரதிஸ்டவசமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய அரசியல் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புக்களின் வேண்டுகோளை உதாசீனப்படுத்துவதுடன் தமது சொந்த இலாபங்களுக்காக ஒரு ஊழல் நிறைந்த ஆட்சிக்கு தொடர்ந்தும் முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தை கையாள்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற Via Camillo Cavour 39, 42025 Cavriago, Reggio Emilia, ITALY. Email: office@iceelamtamils.com எமது அழைப்புக்களை அலட்சியம் செய்யும் திரு. சுமந்திரன் இலங்கை அரசாங்கத்திற்கும் புலம்பெயர்ந்த அமைப்புக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக சேவையாற்றுவதாகக் கூறிக் கொண்டமை குறித்து நாங்கள் திகைப்படைந்தோம். திரு. சுமந்திரன் தனது அண்மைய உலகளாவிய விஜயத்தின் போது புலம்பெயர்ந்த தமிழ் மக்களுடன் தொடர்புகொள்ள முடியாமல் அவமானப்பட்டதை மறந்துவிட்டார் போலும். புலம்பெயர் தமிழர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்காமல் கூட்ட அரங்குகளில் இருந்து பின்வாசல் வழியாக இரகசியமாகத் தப்பிச் சென்றார். திரு. சுமந்திரன் அவர்களின் மக்கள் விரோதப்போக்கின் அடிப்படையில், இலங்கை அரசாங்கத்திற்கு அவர் வழங்கிய முன்மொழிவானது இவரால் செயற்படுத்த முடியாத விடயமாகும்.

1956, 1958, 1962, 1974, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளிலும் அதனைத் தொடர்ந்து 30 ஆண்டுகால யுத்தத்திலும் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகள் காரணமாக 1.5 மில்லியனுக்கும் அதிகமான தமிழர்கள் புலம்பெயர்ந்து இலங்கைத் தீவை விட்டு வெளியேறினர். தமிழர்களுக்குச் சொந்தமான பல பில்லியன் டொலர் பெறுமதியான தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் சிங்கள அரசாலும் பௌத்த பிக்குகளாலும் ஏவிவிடப்பட்டு சிங்களக் காடையர்களாலும் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் அழித்துச் சாம்பலாக்கப்பட்டது. சிங்களக் காடைஎர்களால் அப்பாவி தமிழ் பொதுமக்கள் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என வித்தயாசம் இன்றி படுகொலை செய்யப்பட்டனர். உக்ரேனில் தற்போது நடைபெறும் யுத்தத்துடன் ஒப்பிடுகையில், தமிழர்கள் மீதான படுகொலைகள் அவர்களின் சனத்தொகை விகிதாசாரத்தில் மிகவும் மோசமானவையாகும். சிங்களத் தலைமைகள் தொடர்ந்தும் குற்றவாளிகளைப் பாதுகாத்து வருவதால் எவரும் இன்றுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. சர்வதேச நாணய நிதியம் மற்றும் மேற்குநாட்டு சக்திகளால் இலங்கைத் தீவில் காலூன்றுவதற்காக இலங்கை அரசின் பெரும் கடன்சுமையில் இருந்து பிணையெடுக்க எந்த விதமான முன்நிபந்தனைகளும் இன்றி முயல்கின்றன, அதே நேரம் தமிழர்களுக்கு எதிரான இன்னுமொரு இனப்படுகொலை மீண்டும் நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இந்தப் பின்னணியில், ஒரு தோல்வியுற்ற அரசை பிணை எடுப்பதற்காக புலம்பெயர் தமிழர்களுடன் தான் ஒரு பாலமாக சேவையாற்றுவதாகக் கூறிக்கொள்ளும் துணிச்சலை திரு. சுமந்திரன் அவர்களுக்கு புலத்தில் வாழும் ஒருசில அடிவருடிகளா கொடுத்தார்கள்?

சிங்கள இனவாதிகளின் ஏழு தசாப்த கால போலித்தனமான வரலாற்று அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒரு உண்மையான நம்பகமான மூன்றாம் தரப்பினரின் பிரசன்னம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் எந்தவிதமான பேச்சுகளிலும் ஈடுபடமாட்டார்கள். 2002 சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அனுபவங்களின் அடிப்படையில், புலம்பெயர்ந்த தமிழர்கள் இன்னுமொரு "சமாதானப் பொறிக்குள்" விழத் தயாராக இல்லை!

*-அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை-*

**International Council of Eelam Tamils (ICET) consist of the following country councils:**

National Council of Canadian Tamils (Canada)
Norwegian Council of Eelam Tamils (Norway)
Council of Eelam Tamils in Germany (Germany)
Maison du Tamil Eelam France (France)
Danish Federation of Tamil Associations (Denmark)
Italian Council of Tamils (Italy)
Finland Tamil Forum (Finland)
National council of New Zealand Tamils (New Zealand)
Swiss Council of Eelam Tamils (Swiss)
Dutch Tamil Forum (Netherland)
National council of Sweden Tamils (Sweden)
Campaign for Tamil Justice – Australia
Tamil cultural Centre (Belgium)

# OFFICIAL SPRING LAUNCH FOR SCHOOL CRICKET 2022 PREMIER'S CUP OF SCHOOL CRICKET

Ontario Premier, Doug Ford launched the much-anticipated Premier's Cup School Cricket 2022 this evening at the Spring Launch for School Cricket in Brampton. The evening featured remarks from the Premier and key sponsors, awards for student achievement, design and innovation in cricket as well as the unveiling of the new OSCA logo. The event was well attended and highlighted the growth of cricket in Ontario schools.

Premier Ford, Minister Bethlenfalvy, Minister Lecce, Minister Sarkaria, Mayor Brown and local MPPs were on hand to launch the Premier's Cup School Cricket which will support the delivery of school cricket programs to school aged children. The 2022 launch of the game of cricket also included school board officials, students, and other dignitaries who joined in the announcement of the winners of the OSCA Logo Design Contest and the unveiling of OSCA's new logo. A modern signature logo was unveiled that represents the diversity, appeal and accessibility of the sport.

In addition, Peel winners Jenna Wang and Ryden Peiris were recognized at the launch and congratulated by Premier Ford. The full list of winners, who were each awarded $1,000 Canadian Tire gift card are as follows (in alphabetical order):

Aiden Austria - St. Brother Andre Catholic High School, Markham.
Alicia Vaccarella - St. Theresa of Lisieux Catholic High School, Richmond Hill
Carrie Ji - St Robert Catholic High School, Thornhill
Jenna Wang - The Woodlands Secondary School, Mississauga
Ryden Peiris - Claireville Public School, Brampton

"We are delighted to partner with the Canadian Tire Corporation and CIMA to energize and empower young people through the sport of cricket which used to be the national sport of Canada many years ago" said Ken Jeffers, President of OSCA. "We are thankful for the support we received from our educational sector partners and the Ontario Cricket Academy (OCA) that helped make school physical activities more inclusive so they can positively impact the lives of young people."

"I am so pleased to hear that CIMA has now created the Ontario Schools Cricket Association (OSCA) , to expand the Premier's Cup School cricket. The sense of pride and happiness I take from this is hard to overstate and everyone here deserves so much credit for the incredible roles they've played. " said Premier Doug Ford. "I wish OSCA my very best wishes as you continue to share this great game with the next generation of cricketers.'

"CIMA Canada is proud to see the results of the tireless volunteer efforts, leadership and vision of our members to support young people of Ontario" said Keren Stephen, FCMA, CGMA, Chair of CIMA Canada. "CIMA Canada extends its best wishes, continued co-operation and support as OSCA takes on the next phase of growth of this wonderful program."

"Canadian Tire Corporation is proud to support the Ontario Schools Cricket Association (OSCA) in their efforts to give kids all over Ontario access to the wonderful sport of cricket," said Kim Saunders, Vice President, ESG Strategy & Community Impact at Canadian Tire. "We are thrilled with the success of the programs built over the past year that have helped kids get active and have fun." It was a proud moment for all as the Peel winners were recognized for their participation in the OSCA logo design contest and their excellence in the field of cricket.

Despite the limitations of Covid on schools and sports, OSCA has been actively providing cricket programs during the past year to children and youth as well as capacity building initiatives in schools through the generous support from OSCA's founding partner Canadian Tire Corporation and the Federal Government's Healthy Communities Initiative. These students were able to engage with their peers to develop skills that will stay with them for a lifetime.

For more information, please contact:
Ken Jeffers, President of OSCA
Cell: 647-467-1946

# டெல்லியில் 30 நிமிட சந்திப்பு பிரதமர் மோடியிடம் தமிழக முதல்வர் ஸ்டாலின் முன்வைத்த 14 கோரிக்கைகள்

4 நாள் பயணமாக டெல்லி சென்றுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். அப்போது அவரிடம் தமிழகம், தமிழர்கள் தொடர்பாக 14 முக்கியக் கோரிக்கைகளை ஸ்டாலின் முன்வைத்தார்.30 நிமிட சந்திப்பு: டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று பிற்பகல் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார். அப்போது அவரிடம், தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.

அந்த மனுவின் 14 அம்சங்கள்:

› நீர்வளப் பிரச்சனைகள்:காவிரியின் குறுக்கே கர்நாடகாவால் மேகதாது அணை கட்டும் திட்டத்துக்கு மத்திய அமைச்சகம் அனுமதி வழங்கக் கூடாது.

› மீன்வளம்: அ) பாக் வளைகுடாவில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல். ஆ) "கச்சத்தீவு" மீட்பது மற்றும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது.

› எரிசக்தி: அ) நிலக்கரி குறித்த விவகாரங்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அதிக அளவிலான நிலக்கரி பெறுவதற்கான முன்னெடுப்புகள் மற்றும் கூடுதலான ரயில் தொடர்கள் ஒதுக்கீடு செய்யக் கோருதல். ஆ) ரெய்கார் புகளூர் உயர் மின் அழுத்த மின் தொடரமைப்பினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சொத்தாக அறிவித்தல்.

› நிதி: (i) மாநிலங்களுடன் மேல் வரிகள் மற்றும் கூடுதல் கட்டணம் மூலம் வரும் வருவாயைப் பகிர்ந்து கொள்வது. (ii) ஜூன் 2022க்குப் பின்பும் ஜி.எஸ்.டி இழப்பீட்டை தொடர்ந்து வழங்குதல்.

› சுகாதாரம்: (i) மருத்துவ மாணவர் சேர்க்கை கொள்கை மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுக்கு (NEET) எதிர்ப்பு. (ii) உக்ரைனில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் படிப்பு தடைபட்ட நிலையிலிருந்து இந்தியாவில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில்



படிப்பைத் தொடர வழியைக் கண்டறிதல்.

› வேளாண்மை: பிரதம மந்திரி வேளாண்மை பயிர் பாதுகாப்புத் திட்டத்திற்கு (PMFBY) ஒன்றிய அரசின் பங்களிப்பை முந்தைய நிலைக்கு உயர்த்துதல்.

› தொழில்கள் (i) காலணி உற்பத்தியில் பிஎல்ஐ (PLI) திட்ட அறிமுகம். (ii) டிடிஐஎஸ் (DTIS) திட்டத்தில் தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடத்திற்கு முன்னுரிமை ஒதுக்கீடு(iii) தமிழ்நாட்டில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆய்வுக்கூடம் அமைத்தல் (iv) சேலம் எஃகு ஆலையின் மிகை நிலம் பாதுகாப்பு தொழில் பூங்காவிற்கு வழங்கப்படுதல்(ஸ்) மப்பேடுவில் மல்டி மாடல் லாஜிஸ்டிக் பார்க் (MMLP) வரை ரயில் பாதை அமைத்தல்.

› பள்ளிக்கல்வி: தேசிய கல்வி கொள்கை 2020 என்பது மாநில சுயாட்சிக்கே எதிரானது. அதில் இடம்பெற்றுள்ள பல்வேறு அம்சங்களும் தமிழக மாணவர்கள் நலனுக்கு எதிரானது என்பதால், அந்தக் கொள்கை விலக்கிக்கொள்ளப்பட வேண்டும்.

› சென்னை மெட்ரோ ரயில்: சென்னை மெட்ரோ ரயில் திட்டம் II இந்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் இடையே 50:50 பங்கு அடிப்படையில் ஒப்புதல்.

› பிற்படுத்தப்பட்டோர் நலன் 2022ல் ஹஜ் புனிதப் பயணத்திற்கான புறப்படும் இடமாக சென்னையை அறிவிக்கக் கோரிக்கை.

› பொது: (i) இலங்கை தமிழர் பிரச்சினைஈழத் தமிழர்களுக்கு சம உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள். (ii) இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையின் காரணமாக அல்லலுறும் இலங்கை தமிழர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை தமிழக அரசின் சார்பில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக.

› போக்குவரத்து தமிழ்நாட்டில் புதிய ரயில்வே திட்டங்கள் தேவை.

› சுற்றுச்சூழல்(i) நியூட்ரினோ ஆய்வக (INO) திட்டத்தை கைவிடக் கோரிக்கை.(ii) கூடங்குளம் அணுமின் திட்டம் செலவழித்த அணு எரிபொருள் நீக்குதல் தொடர்பாக (SNF)

› ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்நரிக்குறவர்கள்/குருவிக்காரர்கள் சமூகங்களை தமிழ்நாட்டின் பட்டியல் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.முன்னதாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் 4 நாள் பயணமாக நேற்று டெல்லி சென்றார். டெல்லியில் கட்டப்பட்டுள்ள திமுக அலுவலகமான அண்ணா கலைஞர் அறிவாலய திறப்பு விழா, வரும் ஏப்.2ம் தேதி நடக்கிறது. இதில் பங்கேற்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு டெல்லி புறப்பட்டு சென்றார். இலங்கை தமிழர்களுக்கு உதவ அனுமதிக்க வேண்டும்: சுமார் 30 நிமிடங்கள் நடந்த இந்தச் சந்திப்பின்போது, இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் தமிழர்களுக்கு உதவ அனுமதிக்க வேண்டும் எனவும், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் வழியாக உதவிகளை வழங்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் பிரதமரிடம் முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.முன்னதாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் 4 நாள் பயணமாக நேற்று டெல்லி சென்றார். டெல்லியில் கட்டப்பட்டுள்ள திமுக அலுவலகமான அண்ணா கலைஞர் அறிவாலய திறப்பு விழா, வரும் ஏப்.2ம் தேதி நடக்கிறது. இதில் பங்கேற்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு டெல்லி புறப்பட்டு சென்றார்.

# கண்ணகி கோயில் விழாவில் வழிபாட்டு நேரம் குறைப்பு: தமிழக, கேரள அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு




கண்ணகி கோயில் சித்திரை முழுநிலவு விழா வழிபாட்டில் ஒரு மணி நேரம் குறைக்கப்பட்டுள்ளது பக்தர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.தேனி மாவட்டம் கூடலூர் மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள வண்ணாத்திப்பாறையில் மங்கலதேவி கண்ணகி கோயிலில் 2 ஆண்டுகளுக்குப் பிறகு வரும் ஏப்ரல் 16ம் தேதி சித்திரை முழுநிலவு விழா நடைபெற உள்ளது.

இதற்காக தமிழக, கேரள அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் தேக்கடியில் நடந்தது. கூட்டத்தில் தேனி மாவட்ட ஆட்சியர் க.வீ.முரளீதரன், இடுக்கி மாவட்ட ஆட்சியர் ஷீபா ஜார்ஜ் ஆகியோர் ஆலோசனையில் ஈடுபட்டனர். தேனி, இடுக்கி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் பிரவின் உமேஷ் டோங்ரே, கருப்புசாமி, பெரியாறு புலிகள் சரணாலய இணை இயக்குநர் சுனில்பாபு, உத்தமபாளையம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஸ்ரேயாகுப்தா, கோட்டாட்சியர் கவுசல்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கண்ணகி அறக்கட்டளையினர், விழாவை இரண்டு நாட்கள் நடத்தவும், வழிபாட்டு நேரத்தை அதிகரிக்கவும் கோரிக்கை விடுத்தனர்.

இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.தேனி ஆட்சியர் க.வீ.முரளீதரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை மட்டுமே பக்தர்கள் கோயிலில் இருக்க அனுமதிக்கப்படுவர். இதனால் பிற்பகல் 2 மணிக்கு மேல் கீழிருந்து கோயிலுக்குச் செல்ல அனுமதியில்லை. நடந்து செல்லும் பக்தர்களுக்காக குடிநீர், கழிப்பிட வசதி, மருத்துவ முகாம்கள் அமைக்கப்படும்.புகையிலை, நெகிழி, மது போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இருமாநில போலீஸார் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த முறை பக்தர்கள் கீழேயிருந்து கோயிலுக்குச் செல்ல பிற்பகல் 3 மணி வரை அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இம்முறை அது 2 மணியாக குறைக்கப்பட்டுள்ளதால் பக்தர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். வனத்துறையினர் கூறுகையில், 2 ஆண்டுகளாக நடமாட்டம் இல்லாத பகுதியாக மாறிவிட்டது. இதனால் வனவிலங்குகள் மூலம் பாதிப்பு ஏற்படலாம் என்று கருதி நேரம் குறைக்கப்பட்டுள்ளது என்றனர்.

# இலங்கையை போல 2 ஆண்டுகளில் இந்தியாவிலும் பொருளாதார நெருக்கடி நிலை வரும்: சீமான் கருத்து



இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை, இன்னும் 2 ஆண்டுகளில் இந்தியாவிலும் வரும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் தெரிவித்தார். கடந்த 2015ல் நாம் தமிழர் கட்சி சார்பில் திருச்சி பஞ்சப்பூரில் மாநாடு நடத்தப்பட்டது.

இதில் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்ட 40 பேர் மீது எடமலைப்பட்டி புதூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இவ்வழக்கு விசாரணை ஜே.எம்.2 நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது. சீமான், மாநில ஒருங்கிணைப்பாளர் சேதுமனோகரன், திருச்சி நாடாளுமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் பிரபு உள்ளிட்ட 26 பேர் ஆஜராகினர். அவர்களிடம் விசாரணை நடத்திய நீதிபதி திரிவேணி, இவ்வழக்கை ஏப்.21ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

அதன்பின் நீதிமன்ற வளாகத்தில் சீமான் அளித்த பேட்டி: குடும்பத்தினருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனி விமானத்தில் துபாய் சென்ற பயணச் செலவை திமுக ஏற்றுள்ளதாக கூறுகின்றனர். இதில், முதல்வருடன் அரசு அதிகாரிகளும் உடன் சென்றுள்ளனர். அவர்களின் செலவையும் திமுக ஏன் ஏற்க வேண்டும்? என்பதை விளக்க வேண்டும்.நீட் தேர்வுக்கு எதிராக தேசிய அளவிலான ஒரு மாநாட்டை நடத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அப்படி அழுத்தம் கொடுத்தால் மட்டுமே நீட் தேர்வு தகர்க்கப்படும்.இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை, இன்னும் 2 ஆண்டுகளில் இந்தியாவிலும் வரும். அதற்கு மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ள தவறான பொருளாதாரக் கொள்கை தான் காரணம் என்றார்.

# GEORGE BROWN COLLEGE HOSTING VIRTUAL OPEN HOUSE



One of Ontario's best colleges will be hosting a virtual open house on Thursday, April 7th, 6 p.m. – 9 p.m. The event which is open to all, including domestic and international students will be an opportunity to learn about the campus, various career-focused programs and what it's like to be a student at George Brown, located in the heart of downtown Toronto. All from the comfort of home.

George Brown College combines theory with hands-on learning. We prioritize real-world experiences and provide students with opportunities to work alongside employers in different industries.


The event will allow interested students to:

*Learn about our career-focused programs -- Connect with faculty and staff about your academic areas of interest.
*Attend live presentations and Q&A sessions to help get your questions answered on everything from how to pay to college, student services, campus life and the admissions process.
*Learn how our Student Success team will support you from Day 1 to ensure a smooth transition to college life.




*For International students, representatives are available to answer your questions – in some cases, in your own language! Check the schedule online at www.georgebrown.ca/openhouse for times and languages available.

The event is FREE and will help prospective students make the best decisions and discover lifelong learning opportunities available at George Brown College. Register at www.georgebrown.ca/openhouse




# உங்கள் காத்திருப்பிற்கு ஏற்ற களை கட்டும் இல்லம் இதோ!!












## 1986 Grandview St N, Oshawa

**5 Bedrooms Property For SALE**
**In Oshawa North!**

**Premium Lot**
**Finished Walk Out BSMT**

**5 Bedrooms, 5 Bathrooms**
**6 Car Parking**

*https://www.1986grandviewst.com*

**Kavas** Satchithanandan
*Sales Representative*

**416 288 8882**

RE/MAX REALTRON Realty Inc. Home of the Top Producers



TEAM BLUE FORCE

TEAM BLUE FORCE

"Our focus in your investment is our mission"

நீதி மற்றும் அதற்கான பரிகாரம் ஆகியவற்றைப் பெற போராடும் தமிழ் சமூகத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் போராட்டத்தில் நானும் ஒரு பங்காளியாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். ஸ்காபுறோவில் தமிழ் சனசமூக நிலையத்தைக் கட்டியெழுப்பவும், தமிழ் இனப்படுகொலைக் கல்விச் சட்டத்தை ஆதரிப்பதற்காகவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

அத்துடன் மாகாண அரசாங்கம் சார்ந்த எந்த உதவிக்கும் எனது அலுவலகமும் உங்களுக்காக திறந்தே உள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்..

இங்ஙனம்,

அரிஸ் பாபிகியன், ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்

ஸ்கார்பரோ-அஜின்கோர்ட்

-----------------

My best wishes to the Tamil Community in its struggle to attain justice and redress. I am honoured to be part of your struggle. I am also thrilled to work with you to build the Tamil Community Centre and support the Tamil Genocide Education Act.

My office is also available for any help.

Aris Babikian, MPP

Scarborough-Agincourt



ONTARIO

**Aris Babikian**

MPP / DÉPUTÉ

SCARBOROUGH-AGINCOURT

**Constituency Office:**

207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6

**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

# Carefirst Family Health Team


## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்


Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




என்றுமே மாறாத மதுரைச் சுவையுடன் உணவு படைக்கின்றோம்





# Taste of MADURAI

Taste Of Madurai

Telephone: (416) 332-8000

திறப்பு விழாவையொட்டி விசேட விலைகளில்
சைவ, அசைவ உணவுகளைப் ஆடர் செய்து வாங்கிச் செல்லுங்கள்



## திறப்பு விழா ஸ்பெஷல்

**Madurai Killi Parotta (2 Pcs) $9.99**

மேலும். நாவுக்கு விருந்தாகும் பல வகை உணவுகள்: தோசை வகைகள். பரோட்டா வகைகள்
அத்துடன் மதுரைச் சாப்பாடு பல கறிகளுடன். சூப் வகைகள். இன்னும் பல...

AVAILABLE
DOORDASH
Uber Eats
SKIP THE DISHES













3500 McNicoll Ave. Unit-7
Scarborough, ON
(Markham / McNicoll)

Telephone: (416) 332-8000
Email: mahendran1980@hotmail.com

# இ.தொ.காவின் சாவிக்கொத்து தொண்டமான் குடும்பம் வசம்!



**தெ**ற்காசியாவின் சாபக்கேடு குடும்ப ஆட்சி. இதில் எந்த நாடும் கட்சியும் விதிவிலக்கல்ல. இலங்கையில் தற்போது நடைபெறும் ஆட்சியும், அத்துடன் கூட்டணியில் இருக்கும் கட்சிகளும் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். ராஜபக்ச சகோதரர்கள் நால்வரும் ஆட்சியின் உயர் பொறுப்புகளில் உள்ளனர். “இளவரசர்” நாமல் அமைச்சர், மற்றும் சில ராஜபக்சக்கள் வேறு சில அமைச்சு மற்றும் இதர பொறுப்புகளில்.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். பெரியவர் தொண்டமான், பின்னர் ஆறுமுகன் தொண்டமான், பிறகு அவரது என்று வரிசை செல்லுகிறது.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும், பொதுச் செயலராகவும், நிர்வாகத்தில் முக்கியப் பொறுப்பு ஆகியவை தொண்டமான் குடும்பத்தினர் வசம் சென்றுள்ளது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற அக்கட்சியின் தேசிய சபை? கூட்டத்தில் நடந்தது என்ன?

மலையகத் தமிழர்களுக்கான மாபெரும் அரசியல் மற்றும் தொழிற்சங்க இயக்கமாக கருதப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பதவி மீண்டுமொருமுறை தொண்டமான் குடும்பம் வசம் சென்றுள்ளது. காங்கிரஸ ின் புதிய தலைவராக செந்தில் தொண்டமானை, எதிர்ப்பின்றி - ஏகமனதாக தேசியசபை புதன்கிழமை (30) ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் பதவி ஜீவன் தொண்டமான் வசம் உள்ள நிலையில், கட்சியின் நிர்வாகப் பொறுப்பு ஆறுமுகன் தொண்டமானின் மகளான விஜி தொண்டமான் கைகளுக்குள் உள்ளது. தற்போது தலைமைப்பதவி செந்தில் தொண்டமானின் கைகளுக்குள் வந்துள்ளது. அந்தவகையில் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தின் முழுமையான சாவிகொத்து தொண்டமான் குடும்ப வசம் சென்றுவிட்டதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இ தொ கா தலைவராக செயற்பட்ட அமரர். ஆறுமுகன் தொண்டமானின் மறைவின் பின்னர், அப்பதவி வெற்றிடமாகவே காணப்பட்டது. எனவே, புதிய தலைவர் உட்பட இதர பதவிகளுக்காக உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கொட்டகலையில் கூடியது.

தலைவர் பதவிக்கு செந்தில் தொண்டமானை நியமிக்க வேண்டும் என ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுவிட்டதால், அப்பதவிக்கு போட்டி நிலவவில்லை. அவர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

தலைமைப்பதவிக்கு சவால் விடுப்பாரென பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட மருதபாண்டி ராமேஸ்வரனுக்கு நிதிச்செயலாளர் பதவிக்கு மேலதிகமாக கட்சியின் தவிசாளர் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நியமனத்துக்கும் தேசிய சபையில் ஆட்சேபனை எதுவும் முன்வைக்கப்படவில்லை. பிரதி தவிசாளர் பதவி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான ராஜதுரையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதித் தலைவர்களாக மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜும், அனுசியா சிவராஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். காங்கிரஸின் சார்பில் ஆசிரியர் சார் தொழிற்சங்க விவகாரத்தை கணபதி கனகராஜ் கையாண்டுவருகின்றார். பொதுச்செயலாளர் உட்பட முக்கிய பதவிகளை அனுசியாவும் வகித்துள்ளார்.

மத்திய மாகாணசபையின் அவைத் தலைவராக செயற்பட்ட அதேபோல காங்கிரஸின் நீண்டகால உறுப்பினரான துரை மதியுகராஜா திட்டமிட்ட அடிப்படையில் ஓரங்கட்டப்பட்டுள்ளார். பிரதித் தலைவருக்கான போட்டியில் அவர் தோற்கடிக்கப்பட்டுள்ளார். இதன் பின்னணியில் சூழ்ச்சி இருப்பதாக அவரின் ஆதரவாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் தோல்வி ஏற்படும் என தெரிந்ததால் கடந்த பொதுத்தேர்தலில் களமிறங்கும் வாய்ப்பை மதியுகராஜா மறுத்தார். அவரின் எதிர்ப்பையும்மீறி பாரத் அருள்சாமி களமிறக்கப்பட்டார். அவரால் வெற்றிபெறமுடியாமல்போனது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே துரை மதியுகராஜா (கண்டி துரை) ஓரங்கப்பட்டுள்ளார். பிரஜாசக்தி திட்ட பணிப்பாளராக செயற்படும் பாரத் அருள்சாமிக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனுக்கும், சிவராஜாவுக்கும் போஷகர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் தேசிய அமைப்பாளராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பி.சக்திவேல் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அரசியல் பிரிவுக்கான உதவி தேசிய அமைப்பாளராக ராஜமணி பிரசாந்தும், தொழிற்சங்க பிரிவுக்கான தேசிய அமைப்பாளராக பழனி சசிகுமாரும் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உப தலைவர்களின் எண்ணிக்கை இம்முறை குறைக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்புமூலமும், பரிந்துரைமூலமும் சுமார் 12 உப தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிலிப்குமார், சென்பகவள்ளி, யோகராஜ், சச்சிதானந்தன் ஆகியோருக்கும், பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அசோக்குமார், சிவலிங்கம் ஆகியோருக்கும் உப தலைவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டத்தில் உப தலைவர் பதவி சிவஞானத்திடமும், இரத்தினபுரி மாவட்ட உப தலைவர் பொறுப்பு ராஜமணியிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தை சேர்ந்த பாஸ்கரன், களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த எம்.மேரி, கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் செல்லசாமி திருகேதீஸ் ஆகியோரும் உப தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக இரத்தினபுரி மாவட்ட அரசியல் அமைப்பாளராக ரூபன் பெருமாளும், நுவரெலியா மாவட்ட அரசியல் அமைப்பாளராக பாரதிசாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் கட்டுப்பாட்டுக்குள் காங்கிரஸ் வந்த பிறகு, இரு தசாப்தங்கள்வரை அவர் தலைமைப்பதவியில் நீடித்தார். அதன்பிறகு ஆறுமுகன் தொண்டமான் தெரிவானார், இடையில் முத்துசிவலிங்கத்துக்கு தற்காலிகமாக தலைமைப்பதவி ஒப்படைக்கப்பட்டது. தற்போது அப்பதவியை செந்தில் தொண்டமான் பொறுப்பேற்றுள்ளார்.

“சந்தா பெறாத கட்சியாக காங்கிரஸை மாற்ற வேண்டும் என்பதே மறைந்த தலைவரின் இலட்சியம். அந்த இலக்கை அடையவே நாம் எதிர்ப்பார்க்கின்றோம்.” - என்று தலைமைப்பதவியை ஏற்ற பிறகும் அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார் செந்தில் தொண்டமான்.

அதேபோல இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கி பதவி பங்கீடு இடம்பெற்றுள்ளது எனவும், காங்கிரஸின் இனி தனிநபர் முடிவுக்கு இடமில்லை எனவும் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் அறிவித்தார். ஆறுமுகன் தொண்டமான் காலத்தில் தனிநபர் முடிவே ஆதிக்கம் செலுத்தியது என்ற விடயத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

“சந்தா வாங்காத சங்கம்“ என்ற இலக்கு சாத்தியமா? “கண்டி துரை“க்கு “வெட்டு“ - பாரத்துக்கு பதவி!!

இ.தொ.காவின் சாவிக்கொத்து தொண்டமான் குடும்பம் வசம்!

தெற்காசியாவின் சாபக்கேடு குடும்ப ஆட்சி. இதில் எந்த நாடும் கட்சியும் விதிவிலக்கல்ல. இலங்கையில் தற்போது நடைபெறும் ஆட்சியும், அத்துடன் கூட்டணியில் இருக்கும் கட்சிகளும் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். ராஜபக்ச சகோதரர்கள் நால்வரும் ஆட்சியின் உயர் பொறுப்புகளில் உள்ளனர். “இளவரசர்” நாமல் அமைச்சர், மற்றும் சில ராஜபக்சக்கள் வேறு சில அமைச்சு மற்றும் இதர பொறுப்புகளில்.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். பெரியவர் தொண்டமான், பின்னர் ஆறுமுகன் தொண்டமான், பிறகு அவரது என்று வரிசை செல்லுகிறது.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும், பொதுச் செயலராகவும், நிர்வாகத்தில் முக்கியப் பொறுப்பு ஆகியவை தொண்டமான் குடும்பத்தினர் வசம் சென்றுள்ளது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற அக்கட்சியின் தேசிய சபை? கூட்டத்தில் நடந்தது என்ன?

மலையகத் தமிழர்களுக்கான மாபெரும் அரசியல் மற்றும் தொழிற்சங்க இயக்கமாக கருதப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பதவி மீண்டுமொருமுறை தொண்டமான் குடும்பம் வசம் சென்றுள்ளது. காங்கிரஸ ின் புதிய தலைவராக செந்தில் தொண்டமானை, எதிர்ப்பின்றி - ஏகமனதாக தேசியசபை புதன்கிழமை (30) ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் பதவி ஜீவன் தொண்டமான் வசம் உள்ள நிலையில், கட்சியின் நிர்வாகப் பொறுப்பு ஆறுமுகன் தொண்டமானின் மகளான விஜி தொண்டமான் கைகளுக்குள் உள்ளது. தற்போது தலைமைப்பதவி செந்தில் தொண்டமானின் கைகளுக்குள் வந்துள்ளது. அந்தவகையில் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தின் முழுமையான சாவிகொத்து தொண்டமான் குடும்ப வசம் சென்றுவிட்டதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இ தொ கா தலைவராக செயற்பட்ட அமரர். ஆறுமுகன் தொண்டமானின் மறைவின் பின்னர், அப்பதவி வெற்றிடமாகவே காணப்பட்டது. எனவே, புதிய தலைவர் உட்பட இதர பதவிகளுக்காக உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கொட்டகலையில் கூடியது.

தலைவர் பதவிக்கு செந்தில் தொண்டமானை நியமிக்க வேண்டும் என ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுவிட்டதால், அப்பதவிக்கு போட்டி நிலவவில்லை. அவர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

தலைமைப்பதவிக்கு சவால் விடுப்பாரென பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட மருதபாண்டி ராமேஸ்வரனுக்கு நிதிச்செயலாளர் பதவிக்கு மேலதிகமாக கட்சியின் தவிசாளர் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நியமனத்துக்கும் தேசிய சபையில் ஆட்சேபனை எதுவும் முன்வைக்கப்படவில்லை. பிரதி தவிசாளர் பதவி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான ராஜதுரையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



பிரதித் தலைவர்களாக மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜும், அனுசியா சிவராஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். காங்கிரஸின் சார்பில் ஆசிரியர் சார் தொழிற்சங்க விவகாரத்தை கணபதி கனகராஜ் கையாண்டுவருகின்றார். பொதுச்செயலாளர் உட்பட முக்கிய பதவிகளை அனுசியாவும் வகித்துள்ளார்.

மத்திய மாகாணசபையின் அவைத் தலைவராக செயற்பட்ட அதேபோல காங்கிரஸின் நீண்டகால உறுப்பினரான துரை மதியுகராஜா திட்டமிட்ட அடிப்படையில் ஓரங்கட்டப்பட்டுள்ளார். பிரதித் தலைவருக்கான போட்டியில் அவர் தோற்கடிக்கப்பட்டுள்ளார். இதன் பின்னணியில் சூழ்ச்சி இருப்பதாக அவரின் ஆதரவாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் தோல்வி ஏற்படும் என தெரிந்ததால் கடந்த பொதுத்தேர்தலில் களமிறங்கும் வாய்ப்பை மதியுகராஜா மறுத்தார். அவரின் எதிர்ப்பையும்மீறி பாரத் அருள்சாமி களமிறக்கப்பட்டார். அவரால் வெற்றிபெறமுடியாமல்போனது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே துரை மதியுகராஜா (கண்டி துரை) ஓரங்கப்பட்டுள்ளார். பிரஜாசக்தி திட்ட பணிப்பாளராக செயற்படும் பாரத் அருள்சாமிக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனுக்கும், சிவராஜாவுக்கும் போஷகர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் தேசிய அமைப்பாளராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பி.சக்திவேல் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அரசியல் பிரிவுக்கான உதவி தேசிய அமைப்பாளராக ராஜமணி பிரசாந்தும், தொழிற்சங்க பிரிவுக்கான தேசிய அமைப்பாளராக பழனி சசிகுமாரும் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உப தலைவர்களின் எண்ணிக்கை இம்முறை குறைக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்புமூலமும், பரிந்துரைமூலமும் சுமார் 12 உப தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(தொடரும்...)

இந்தியா செய்திகள்
India News

# இந்திய நாடாளுமன்றத்தில் முதலமைச்சர் ஸ்டாலினுடன் புகைப்படம் எடுத்துத்துக்கொண்ட எம்.பி.க்கள்



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மூன்று நாள் பயணமாக டெல்லி சென்றுள்ள நிலையில், நாடாளுமன்ற வளாகத்தை சுற்றிப் பார்த்தார். அப்போது எம்.பி.க்கள் அவருடன் ஆர்வமாக புகைப்படம் எடுத்துகொண்டனர். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலின் சந்தித்தார்.

திமுக அலுவலக கட்டிடத்தை ஏப்ரல் 2ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டெல்லியில் திறந்து வைக்கிறார். இதற்கான அழைப்பிதழையும் சோனியா காந்தியிடம் அவர் வழங்கினார் இதை தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்திற்குள் வந்த மு.க.ஸ்டாலின் உடன் தமிழக எம்.பி.க்களான கனிமொழி, தமிழச்சி தங்கபாண்டியன், கனிமொழி சோனு ஆகியோர் புகைப்படம் எடுத்துகொண்டனர்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனையும் நாடாளுமன்றத்தில் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசினார். திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.பி. மஹுவா மொய்த்ரா மு.க.ஸ்டாலின் உடன் புகைப்படம் எடுத்துகொண்டார்.

சினிமா

# வீதி நாடகங்கள்தான் அச்சமற்ற நடிகனாக வருவதற்கு அடித்தளமென்கிறார் ஆயுஷ்மான் குரானா



அச்சமற்ற நடிகனாக உருவாவதற்கு எனக்கு அடித்தளம் தந்தது வீதி நாடகங்கள்தான் என்று ஆயுஷ்மான் குரானா பெருமிதம் தெரிவித்துள்ளார். விக்கி டோனர் படத்தின் வாயிலாக 2012 பாலிவுட்டில் அடிஎடுத்து வைத்தவர் ஆயுஷ்குமான் குரானா. தொடர்ந்து சுப்மங்கள் சாவ்தான், அந்தாதூன், ஆர்டிகிள் 15, உள்ளிட்ட ஏராளமான வெற்றிப் படங்களின் நாயகனாக வலம்வருபவர். ஐந்து வருடங்கள் தொடர்ந்து நாடகங்களில் நடித்து கடும் பயிற்சி பெற்றவர். கல்லூரி நாட்களில், சிம்லாவில் உள்ள கெய்ட்டி தியேட்டரிலும் பல நாடகங்களில் ஆயுஷ்மான் நடித்துள்ளது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சண்டிகரில் இயங்கிவரும் நாடகக் குழுக்களான DAV கல்லூரியின் ஆகாஸ் மற்றும் மஞ்ச்தந்திராவின் நிறுவன உறுப்பினராகவும் அவர் இருந்துள்ளார்.

இன்று மார்ச் 17ல் உலக நாடக தினம் (World Theatre Day) கொண்டாடப்படுவதை முன்னிட்டு ஆயுஷ்மான் குரானா வெளியிட்டுள்ள நடிப்புக் கலைஞர்களுக்கான ஒரு உற்சாகமான அறிக்கையில்,

"இன்று நான் ஒரு திரைக் கலைஞனாக இருப்பதற்கு விலைமதிப்பற்ற பங்களிப்பை தந்தது தெரு நாடகங்கள்தான். எனது நடிப்புக்கான முயற்சி அங்கிருந்துதான் தொடங்கியது, மக்களை திறமையால் மகிழ்விக்க முடியும் என்ற நம்பிக்கையை எனக்கு நாடகங்கள் ஏற்படுத்தின. உண்மையில் ஓர் அச்சமற்ற நடிகனாக ஆவதற்கு வீதி நாடகங்கள்தான் எனக்கான அடித்தளத்தை அமைத்துத் தந்தன. நான் ரிஸ்க் எடுக்க பயப்படவில்லை. இதற்காக நாடகத்துறைக்குத்தான் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், ஏனெனில் நான் இன்றுள்ள இடத்திற்கு வந்துள்ளதற்கு என்னை வடிவமைத்துக்கொடுத்தது நாடகங்கள்தான். நான் ஒரு நல்ல கலைஞனாக மாற வேண்டும் என்றால், எந்தத் தடைகளும் எனக்கு இருக்கக் கூடாது. நாடகமானது சுய வெளிப்பாட்டின் எல்லையற்ற வடிவம் ஆகும், ஒரு நல்ல நடிப்பு எப்படி இருக்க வேண்டும் என்ற எனது கருத்தை நிரூபிக்க தொடர்ந்து சவால்மிகுந்த பாத்திரங்களை தேர்ந்தெடுப்பதில் ஈடுபாடு இருக்கவேண்டும். நாடகங்கள் மூலகமாக நம்மை சுயபரிசோதனை செய்துகொள்ளவும் முடியும். சமூகத்தை பற்றி மட்டுமல்ல நாம் என்னவாக மாறுகிறோம் என நம்மைநாமே விமர்சித்துக்கொள்ள முடியும்.

நான் தியேட்டரில் இருந்து நிறைய கற்றுக்கொண்டேன், ஒரு நாடகக் கலைஞனாக இருந்தால் கலையானது உங்கள் நடிப்பின் எல்லையை நோக்கித் தள்ளவும் உங்களுக்கு சவால் விடுகிறது, இதனால் நீங்கள் பார்வையாளர்களை மிகவும் ஆழமாக ஊடுருவி மகிழ்விக்க முடியும். நான் நாடகம் நடிப்பதில் இருந்து கற்றுக்கொண்டதைக் கொண்டு நான் சினிமாவில் நடிப்பதற்கும் ஸ்கிரிப்ட் தேர்வுக்கும் அவற்றைப் பின்பற்ற முயற்சிக்கிறேன். இன்றும் நாடகம் மற்றும் நாடக நடிகர்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு, எனக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், அதற்காக நேரம் ஒதுக்கி சிறந்த நாடக நிகழ்ச்சிகளைக் காண முயல்கிறேன்".

இவ்வாறு ஆயுஷ்மான் குரானா தெரிவித்தார்.

# நிச்சயதார்த்த புகைப்படங்களை வெளியிட்டு சர்ச்சைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தார் நடிகை நிக்கி கல்ராணி



மலையாள திரைப்படங்களில் அறிமுகமாகி தமிழ் மற்றும் மலையாள திரைப்படங்களில் நடித்து வரும் நடிகை தான் நிக்கி கல்ராணி. இவர் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜிவி பிரகாஷ் கதாநாயகனாக நடித்த டார்லிங் திரைப்படத்தின் மூலமாக தமிழில் அறிமுகமானார். அவரது முதல் படத்திலேயே அவருக்கு நிறைய ரசிகர்கள் கிடைத்தனர். பின்னர், கலகலப்பு-2, வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன் உள்ளிட்ட படங்களில் நடித்திருந்தார். இவர் நடிகர் ஆதியுடன் இணைந்து மரகதநாணயம் படத்தில் நடித்த போது இருவரும் காதலில் விழுந்துள்ளதாக கிசுகிசு கிளம்பியது.

ஆனால், இரு தரப்பில் இருந்தும் இது குறித்து எந்தவிதமான தகவல்களையும் வெளியிடாமல் இருந்து வந்தனர். இத்தகைய நிலையில், சமீபத்தில் இருவருக்கும் நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது. விரைவில் திருமணம் என்று கூறப்பட்டு வந்தது. கடந்த வியாழன் மார்ச் 24 ஆம் தேதி நடிகர் ஆதி மற்றும் நிக்கி கல்ராணி இருவருக்கும் உறவினர்கள் முன்னிலையில் நிச்சயதார்த்தம் முடிந்ததாக கூறப்பட்ட நிலையில், தற்போது நிச்சயதார்த்த புகைப்படங்களை நடிகை நிக்கி கல்ராணி வெளியிட்டு இதனை உறுதி செய்துள்ளார்.

# மனோரம்மாவை வேண்டாமென ஒதுக்கிய விசு... கதையையே மாற்றி வெற்றி பெற்ற தயாரிப்பாளர் ஏவிஎம் சரவணன்



விசு குடும்ப படங்கள் படைப்பதில் வல்லவர். அவர் இயக்கிய மணல்கயிறு, வேடிக்கை என் வாடிக்கை, குடும்பம் ஒரு கதம்பம், சம்சாரம் அது மின்சாரம் போன்ற குடும்ப கதைகள் இன்றுவரை மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தவவை. அவர் இயக்கிய சம்சாரம் அது மின்சாரம் படம் சிறந்த குடும்பப் படமாக வெற்றி பெற்றது. இந்நிலையில் நகைச்சுவை கதாபாத்திரத்திற்காக அந்த படத்தில், விசுவும் அவரது தம்பியும் இருப்பதாகக் கூறி மனோரமா கதாபாத்திரத்தை நீக்கி விட்டாராம் விசு. இந்த கதையை ஏவிஎம் சரவணனிடம் விசு சொல்லியபோது, உங்கள் நகைச்சுவை காட்சிகள் நன்றாகத்தான் இருக்கும் ஆனால் இந்தப் படம் எல்லா ஊர்களிலும் சென்றடைய வேண்டும் என்றால், அதற்கு மனோரமா போன்ற ஒரு சிறந்த கதாபாத்திரம் வேண்டும். இந்த கதாபாத்திரத்திற்காக கதையை மாற்றி அமையுங்கள் என்று விசுவிடம் கூறிவிட்டாராம்.

இதனை ஒப்புக் கொள்ளாத விசு, வேண்டாம் நகைச்சுவை கதாபாத்திரங்களை நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்றாராம். அதற்கு நீங்கள் மனோரமாவை இந்தக் கதையில் எப்படியாவது புகுத்தி, படத்தை தயார் பண்ணுங்கள் என்று விடாப்பிடியாய் சரவணனும், விசுவடிம் கூறிவிட்டாராம். அதன்பின் தான் விசு யோசித்து "கண்ணம்மா" என்ற வேலைக்கார கதாபாத்திரத்தை அந்தப்படத்தில் கொண்டுவந்து அசத்தினார். அந்த "கண்ணம்மா" கதாபாத்திரமே அந்த படத்திற்கு தூணாக அமைந்தது. படம் ஆரம்பித்த பிறகு ஏவிஎம் சரவணனிடம், இப்பொழுது இந்த கண்ணம்மா கதாபாத்திரம் இல்லாமல் என்னால் இந்த படத்தை எடுக்கவே முடியாது என்று கூறி, அந்த கதாபாத்திரம் வைக்க சொன்ன சரவணனுக்கு ஒரு நன்றியை சொன்னாராம் விசு.

# கூட்டமைப்பு சந்திப்பும் கொண்டுவந்த செய்திகளும்

**- திருமலை நவம்**

தமிழ்த்தேசியக்கூட்டமைபபுக்கும் ஜனாதிபதி கோத்தபாயராஜபக்'வுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை (25.3,2022) இடம் பெற்றிருக்கிறது. பலமாத தவத்துக்குப்பிறகு இது இடம் பெற்றிருப்பதாக ஆதரவாளர் ஒருவர் தெரிவித்தார். இரண்டு வருடங்களுக்கு மேலாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையை தவிர்த்துவந்த ஜனாதிபதியவர்கள் தற்போது பேச்சவார்த்தைக்கு அழைத்துள்ளார் என்பதும் கூட்டமைப்பினரும் எந்தவித நிபந்தனையுமின்றி சென்றுவந்துள்ளனர். என்பதும் இலங்கை அரசியல் களத்தில் முக்கியமான பதிவுகளாகும்.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டு 20 மாதங்களுக்குப்பின் இச்சந்திப்பு இடம் பெற்றிருக்கிறது. இச்சந்திப்பு பல்வேறு எதிர்பார்ப்புக்கள் சவால்கள் விமர்சிப்புக்களுக்கு மத்தியில் இடம் பெற்றிருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

நீண்ட காலமாக புரையோடிப்போய் காணப்படுகிற அரசியல் பிரச்சனைக்கு தீர்வு காணும் எண்ணம் ஜனாதிபதியிடம் காணப்படுமாயின் அவரிடமிருந்து அழைப்பு வரலாம் என்று கூட்டமைப்பு எதிர்பார்த்தது ஒருபுறமிருக்க கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் பல தடவைகள் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கி தரும்படி ஜனாதிபதியை கோரியிருந்தபோதும் அது ஜனாதிபதியவர்களால் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இவ்வறானதொரு சூழ் நிலையில்தான் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் காணி அபகரிப்பு தொடர்பில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தார்கள். அத்தருணத்தில் ஜனாதிபதியை சந்திப்பதற்கான கோரிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களால் விடப்பட்டிருந்தது. ஆளும் அரசாங்கத்தின் கடும் போக்கு தன்மையிலிருந்து இலங்கை தமிழர்கள் காப்பாற்றப்படவேண்டுமாயின் இந்தியாவின் தலையீடு இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்த்தேசியக்கட்சிகளின் தலைவர்களால் அண்மையில் இந்தியப்பிதமர் நரேந்திரமோடிக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது. இது தவிர கடந்த பெப்ரவரி மாதமளவில் உதியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த பெப்ரவரி (2022) இலங்கை வந்திருந்த இந்திய வெளிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தமிழர்களுக்கான சமத்துவம் நீதி சமாதானம் கௌரவம் உறுதி செய்யப்படவேண்டுமாயின் அதிகாரப்பரவலாக்கம் இன்றி மையாதது என்பதை தனது விஜயத்தின்போது வலியுறத்தியிருந்தார்.

அளித்த வாக்குறதிகளிலிருந்து நடைமுறைப்படுத்தும் கடைப்பாட்டிலிருந்து இலங்கை அரசாங்கம் முழுமையாக மீறியுள்ளதுடன் தமிழர்களுக்கு எதையுமே செய்யவில்லை என்ற பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டி இரா. சம்பந்தன் அவர்கள் மனிதவுரிமைப்பேரவையில் அங்கம்பெறும் 47 உறுப்பு நாடுகளுக்கும் 2022 பெப்ரவரியில் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

இது ஒருபுறமிருக்க நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிகள் சில மந்திரிமாரின் பதவி பறிப்பு என்பவற்றுக்குப்பின் ஏற்பட்ட அகப்புற அரசியல் நெருக்கடிகள் கூட்டமைப்பை சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கவேண்டிய சூழ் நிலையை ஜனாதிபதிக்கு உருவாக்கி கொடுத்திருக்கலாம்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் எஸ். ஸ்ரீதரன் இ. சாணக்கியன் சாள்ஸ் நிர்மலநாதன் தவராஜா கலையரசன் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா புளட் அமைப்பின் தாலைரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் பங்க கொண்டிருந்தனர்.

ரெலோவின் மூன்றுபாராளுமன்ற உறுப்பினர்களும் இச்சந்திப்பில்பங்கெடுத்துக்கொள்ளவில்லை. அவர்களின் இந்த முடிவுக்கு காரணம் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கமிடையிலான பேச்சு நடைபெறுவதற்கு முன் ஜனாதிபதி நல்லெண்ண சமிஞ்சையை வெளியிடவேண்டுமென்று தெரிவித்து இந்த பேச்சுவார்த்தையை அவர்கள் தவிர்த்திருந்தார்கள்.

கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பு தொடர்பில் பல அபிப்பிராயபேதங்கள் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகிறது என்பது யதார்த்தம். ராஜபக்ஷக்களின் அரசாங்கம் தமிழ் மக்களின் நீண்ட காலப்பிரச்சனைக்கு தீர்வை வழங்கப்போவதில்லை எனவே பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது அர்த்தமற்றது என்ற எதிரான கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரவலாக விரவியிருக்கிறது.

இச்சந்திப்பில் பின்வரும் விடயங்கள்பற்றி பேசப்பட்டது என்று ஊடகங்கள் மாத்திரமன்றி கூட்டமைப்பின் பரதிநிதிகளோடு தொடர்பு கொண்டு கேட்டபோதும் தெரிவித்தார்கள்.

புதிய அரசியல் யாப்பும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும். 13 ஆவது அரசியல் சீர்திருத்தம் தமிழ்ப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் நில அபகரிப்பு அரசியல் கைதிகளின் விடுதலை. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு. வடகிழக்கு அபவிருத்திக்கு தனியான நிதியம் மாகாணசபை தேர்தல். இவ்விடயங்கள் தொடர்பில் கூட்டமைபினரால் தனித்தனியாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

சுதந்திரத்துக்குப்பின்னான காலத்தில் இலங்கை அரசாங்கங்களுடன் தமிழ் தலைவர்கள் பேசிவந்திருக்கிறார்கள். ஒப்பந்தங்களை செய்திருக்கிறார்கள் எல்லாமே புறக்குடத்து நீராக போனதே தவிர எந்த சாத்திய விளைவையும் அவை தரவில்லை. இவைபோலத்தான் கோத்தபாய கூட்டமைப்பு சந்திப்பு அமையக்கூடுமென்பது பலரது ஆருடம்.

ஜனாதிபதி கோத்தபாயா நினைத்திருந்தால் பொதுத்தேர்தல் முடிந்த கையுடன் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் முன்னெடுப்பை மேற்கொண்டிருக்கவேண்டும். அதன் ஆரம்ப நடவடிக்கையாக கூட்டமைப்பை அல்லது தமிழர் தரப்பை அழைத்து பேசியிருக்கவேண்டும். இதை அவர் செய்ய முயற்சிக்கவில்லை. இதற்கு காரணம் தான் சிங்கள மக்களால் தேர்ந்டுெகப்பட்ட துட்டகைமுனு பரம்பரையில்வந்த தலைவன் என்ற மமதையுடன் பேரினவாதக்கதிரையில் அமர்ந்திருக்கிறார்.

இப்பொழுது பொருளாதார நெருக்கடிகள் அரசியல் சதிராட்டங்கள் அவரை நிலை குலைய வைத்திருக்கிறது. மக்கள் எப்போது ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து புரட்சியொன்றை மேற்கொள்வார்களோ என்றபயமும் பீதியும் நடுங்க வைத்துக்கொண்டிருக்கிறது இதற்கான முஸ்தீப்புக்களை எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாஸதலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் அனுரா குமார திஸநாயக்கா தலைமையிலான ஜே.வி.பியும் முன்னெடுத்து வருகிறது நிலமைகள் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகிறது.

கோத்தபாய தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரியும் விலைவாசி ஏற்றத்தை கண்டித்தும் மக்களின் மோசமான வாழ்க்கை பாதிப்புக்களை எடுத்துக்காட்டும் வகையிலும் ஐக்கியமக்கள் சக்தியின் ஏற்பாட்டில் (15.3.2022) கொழும்பு காலி முகத்திடலில் மக்கள் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்ததுடன் ஜனாதிபதி செயலகத்தை முற்றகையிட முயன்றது பாரிய கவனத்தை ஈர்த்த மக்கள் புரட்சியாக பேசப்படுகிறது. இவ்வாறானதொரு நெருக்கடி நிலையில்தான்.

ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக் இடையிலான சந்திப்பானது தமிழ் மக்களின் நீண்டகால மற்றும் மகால பிரச்சனைகள் தொடர்பில் நிகழ்ச்சிப்படுத்தி பேசப்பட்டிருக்கிறது.

அரசியல் தீர்வு.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போரட்டமானது தந்தை செல்வநாயகம் காலத்திலிருந்து ஆரம்பிக்கபட்ட விவகாரம். அதற்கு வயது 70க்கு மேலாகிவிட்டது. தமிழ்த்தேசிய தீர்வைப் பொறுத்தவரை அது ஒரு ஆகாயத்தாமரையாகவே மாயவித்தை காட்டும் விடயமாக கண்ணுக்குப்புலப்படுவதுபோல் புலப்பட்டு பின் அது மறைந்துபோய்விடும் ஜாலவித்தையாக மாறிக்கொண்டிருப்பதை கடந்த கால வரலாற்றிலிருந்து அறிந்து கொண்டிருக்கிறோம்.

நல்லாட்சி காலத்தில் அரசியல் யாப்பு அதனூடாக அரசியல்தீர்வு என்ற நம்பிக்கை கொடுக்கப்பட்டது. அடுத்த தீபாவளிக்கு தீர்வை பெற்றுவிடுவோம். வரும் பொங்கல் தினத்தில் புதிய அரசியல் சாசனத்தின்வழி பொங்கலை தமிழர்கள் கொண்டாடுவோம் ஏன்றெல்லாம் கூறப்பட்டது. இந்த வாக்குறுதிகளை மக்கள் நம்பினார்கள்.

அரசியல் தீர்வு தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதிபதியுடன் உரையாட முற்பட்டபோது பிளவுபடாத பிரிவுக்கு உட்படாத ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சிப் பலம் கொண்ட அரசியல் தீர்வொன்றையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று கூற முற்பட்டவேளை ஜனாதிபதி குறுக்கிட்டு "அரசியல் சாசனம் தொடர்பான நிபுணர்குழு அறிக்கை விரைவில் வரவுள்ளது அந்த ஆலோசனைக்கு அமைய" என்று ஜனாதிபதி கூறவும் சம்பந்தன் ஐயா குறித்த பேச்சை முறித்துக்கொண்டு அவ்வறிக்கை வெளி வந்தபின் அதுபற்றி ஆராய்ந்து பேசுவோம் என்று நறுக்குத் தெறித்தாற்போல் கூறியதுடன் குறித்த விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அடுத்த விவகாரம்பற்றி பேச முற்பட்டிருக்கிறார்.

அரசியல் சாசனம் தொடர்பில் அதிகமாக பேசப்பட்ட காலம் நல்லாட்சிக்காலம். ஆனால் அந்த முன்னெடுப்புக்கள் பொரிமாத்தோண்டியின் கதையைப்போல் ஏமாற்றம் கண்டதுதான் மிச்சம். சம்மந்தன் ஐயாவின் பகீதரப்பிரயத்தனங்கள் கடுமையான போராட்டங்கள் வீணாகிப்போனதுபற்றி மீண்டும் நினைத்துப்பார்ப்போமானால் ஏமாற்றந்தான் மிஞ்சி நிற்கும்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களை கூட்டமைப்பினர் சந்தித்தபோது அவர் கூறிய கருத்துக்களை சம்பந்தன்போன்ற அனுபவம் கொண்ட தலைவர்கள் ,லகுவாகவே புரிந்து கொள்வார்கள். "புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சியில் கூட்டமைப்பினராகிய நீங்கள் இணைந்துவிடாதீர்கள். அதை உருவாக்குவோம் உருவாக்குவோம்" என இலங்கை அரசு கூறிக்கொண்டிருக்கும் இறுதியில் உங்களை ஏமாற்றிவிடுவார்கள். எனவே அரசியல் அமைப்புக்காக காத்திராமல் ஏனை விடயங்களை பேசி தீர்த்துக்கொள்ளுங்கள் என ஜெய்சங்கர் ஆலோசனை வழங்கியிருக்கிறார். அவரின் வார்த்தையில் எவ்வளவு உண்மையுள்ளது என்பதை யாருமே புரிந்துகொள்ளாமல் இருக்கமுடியாது.

13 ஆவது திருத்தம்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும்படி ஜனாதிபதியை சம்பந்தன் வலியுறுத்தியபோது அங்கு உடன் இருந்த நீதி அமைச்சர் அலிசப்ரி மற்றும் வெளிவவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் ஆகியோர் இதற்கு பதில் கூறுகையில் "13 ஆவது திருத்தத்தில் காணப்படும் காணி பொலீஸ் அதிகாரங்களை நடை முறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் காணப்படுகிறது. ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் இவற்றை நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை" என்று சம்பந்தனின் கருத்தை மறுதலித்து கூறியபோது கோபம் கொண்ட கூட்டமைப்பின் தலைவர் மேசையில் இருமுறை அறைந்து "13 ஆவது திருத்தத்தைக்கூட முழுமையாக அமுல்படுத்த முடியாவிட்டால் நாம் பேசி பயனில்லை எமது வழியில் நாம் பயனிப்போம்" என்ற தோரணயில் தனது கோபத்தை வெளிகாட்டியுள்ளார்.

சம்பந்தரின் இந்த கோபத்தைக்கண்டு அரச தரப்பினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்த சூழ்நிலைய சமாளிக்க முற்பட்ட ஜனாதிபதியவர்கள் "அமுல்படுத்த முடியாது என நாம் சொல்லவில்லை அதில் உள்ள சவால்களையே குறிப்பிட்டோம். நாம் முழுமையான அதிகாரப்பகிர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்வோம்" என ஜனாதிபதி அவ்வேளையில் தெரிவித்ததாக கூறப்பட்டது.

மாகாண சபை ஆரம்பித்த காலத்திலிருந்து குறிப்பாக முன்னாள் ஜனாதபதி ஜெயவர்த்தனா காலத்திலிருந்து காணி பொலீஸ் அதிகாரங்கள் தொடர்பாக ஏமாற்றுதல்களும் இழுத்தடிப்புக்களும் இடம் பெற்று வருகின்றன என்பது என்பது அறியப்பட்ட சமாச்சாரம்.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 23
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

கடவுளவன் எந்தமதம்;
  கேளுங்கள் ஞானியரே!
கடவுளவன் தங்குமிடம்;
  காணுங்கள் மானிடரே!
உடனிருக்கும் ஏழைக்(கு)
  உன்கைகள் உதவுமெனில்
கடவுளவன் அங்கிருப்பான்;
  கருணையேதன் மதமென்பான்!

உள்ளத்தில் மையிருட்டு;
  வாக்கினிலே பொய்புரட்டு!
பள்ளம்போல் தாழ்ந்தமனம்
  பக்திவேஷ அலங்காரம்!
கள்ளமிலா நெஞ்சிற்குக்
  'கோயி'லென்ற பேருண்டே!
உள்ளவரில் நல்லவர்க்குத்
  'தெய்வ'மென்னும் புகழுண்டே!



(23ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டமைப்பு சந்திப்பும் கொண்டுவந்த செய்திகளும்

இவ்விரு விடயம் தொடர்பில் தென்னிலங்கை மக்கள் மத்தியில் புகுத்தப்பட்டிருக்கும் விஷமத்தனமான கருத்துக்குள் பூதகரம் பெற்று காணப்படுகிறது.

வட கிழக்கு மாகாண சபை ஆரப்பித்த காலத்திலையே முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இவ்விரு அதிகாரங்களையும் பெற்றுத்தரும்படி இந்தியாவுக்கு அழுத்தம் கொடுத்தபோதும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அதற்கு உடன்படவில்லை. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபின்பும் இதுபற்றிபல தடவைகள் பேசப்பட்டபோதும் தென்னிலங்கையி கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

"13 அப்பால் சென்று அதிகாரப்பகிர்வினை வழங்குவேன்" என ஐக்கிய நாடுகள் சபைக்கும் இந்தியாவுக்கும் வாக்குறதி அளித்த முன்னாள் ஜனாதிபதி-யும் இந்நாள் பிரதமருமாகிய மஹிந்தராஜபக்ஷவின் வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

தமிழ் மக்களுக்கு பிரத்தியேக அரசியல் பிரச்சனைகள் காணப்படுகிறதென்றோ அல்லது அவர்களுக்கு தனித்துவமான பிரச்சனைகள் இருப்பதாக எப்பொழும் ஏற்றுக்கொள்ளாத ஜனாதிபதி அவர்கள் "தான் சிங்களவரால் மட்டுமே தெரிவு செய்யப்பட்டவர் அவர்களின் நலனும் விருப்பு வெறுப்புக்களுமே எனக்கு முக்கியமானது" என்று கூறிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவாரா? என்ற கேள்விக்கு யாராலும் தற்போது விடை இறுக்க முடியாது. அவ்வாறு நடக்குமானால் அது உலக சரித்திரத்தின் ஒரு புதிய அத்தியாயமாகவே எழுதப்படவேண்டும் என்பதே சில தமிழ் தலைமைகளின் அபிப்பிராயமாக காணப்படுகிறது.

அரசியல் கைதிகள் விடுதலை.

விடுதலை செய்யப்படாமலும் விசாரணை செய்யப்படாமலும் பல வருடங்களாக சிறைகளில் வாடும் அரசியல்கைதிகள் தொடர்ப்பில் காரசாரமக இருதரப்பினம் பேசியுள்ளனர். 48 அரசியல் கதைகளுக்கு மேல் 10 வருடங்களுக்குமேல் சிறையில் வாடுவதையும் இன்னும் பலர் வழக்கு தொடரப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளதையும் இப்பேச்சுவார்த்தையின்போது கூட்டமைப்பினர் ஜனதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்கு பதில் அளித்த ஜனாதிபதியவர்கள் 48 கைதிகள் விடயத்தை ஆராய்ந்து சாதகமான முடிவொன்றை விரைவில் தெரிவிப்பதாகவும். ஏனைய கைதிகள் தொடர்பில் தனித்தனியாக ஆராய்ந்து தன்னிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்கடி ஜனாதிபதி நீதி அமைச்சருக்கு ஆணைபிறப்பித்துள்ளார்.

இந்த அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் கடந்த நல்லாட்சிக்காலத்தில் அதிகமாக பேசப்பட்ட விவகாரம் மாத்திரமல்ல பல போராட்டங்களும் நடாத்தப்பட்டது. 2010 ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பிலிருந்த மஹிந்த அரசாங்கத்துடனும் 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்த ஸ்ரீசேன அரசாங்கத்திடமும் தமிழ் தலைமைகள் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக பல பேச்சுவாத்தைகளை நடத்தியபோதும் தீர்வு காணப்படவில்லை.

குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை குறித்து கூட்டமைப்பும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தாவும் அவசரம் அவசரமாககைதிகள் தொடர்பான பட்டியல் ஒன்றை தயாரித்து 2020 ஆம் ஆண்டு யூலை மாதமளவில் பிரதமர் மஹிந்தவிடம் கையத்திருந்தனர்.:. பட்டியலை ஏற்றுக்கொண்ட பிரதமர் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியுடன்பேசி நல்லதொரு முடிவை விரைவில் அறிவிப்பேன் என்று வாக்குறுதி அளித்த பிரதமர் மறுவாரமே குத்துக்கரணம் அடித்து அரசி-யல் கைதிகளில் பலர் விடுவிக்க முடியாத குற்றங்களுடன் தொடர்பு பட்டு காணப்படுவதால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கக்கூடிய சாத்தியமில்லை என்று தெரிவித்திருந்தார். இது பெருத்த ஏமாற்றமாக அமைந்தது.

அதே நேரம் அதே காலப்பகுதியில் கொலைக்குற்றித்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர் சுனில் ரத்நாயக்கா என்பவரை ஜனாதிபதி தனது அதிகாரத்தை பாவித்து விடுதலை செய்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது பின்னாளில் இதுபோன்ற பல சம்பவங்கள் இடம் பெற்றன. 3000 இராணுவத்தை கொன்றவன் நான் என்று பகிரங்கமாக தெரிவித்த கிழக்குவாதி ஒருவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்ட கௌரவம் இந்நாட்டில் இடம் பெற்றுள்ளது. ஜனாதிபதியின் வாக்குறுதிக்கு அமைய நல்லெண்ண சமிஞ்சையாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்களேயானால் அதுவே தமிழர் மனங்களை வெல்லும் முதல் உபாய பொறி முறையா-கவும் ஆகலாம். ஆனால் அது நடக்குமா? ஏன்பதை பொறுத்திருந்தே பாாக்கவேண்டும். மிருசுவிலில் தமிழ் மக்களை படுகொலை செய்தமைக்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட சிங்களப்படை அதிகாரி ஒருவருக்கு ஜனாதிபதி தனது அதிகாரத்தை பாவித்து மன்னிப்பு வழங்கியவர் திருகோணமலை குமாரபுரத்தில் 1996 ஆம் ஆண்டு அப்பாவி பொதுமக்கள் 24 பேரை படுகொ-லை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 6 இராணுவ வீரர்களும் அனைத்து குறறச்சாட்டுக்களிலுமிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் இந்த நிலையில் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்படுமாயின் அதுவே பாரிய நல்லிணக்கமாக மாற இடமுண்டு நில அபகரிப்புக்கள்.

தமிழ் மக்களின் வடகிழக்கு இனப்பரம்பலை நாசம் செய்யும் அரசாங்கத்தின் இன்னொரு நீசத்தனமான செயல்தான் நில அபகரிப்புக்களாகும். இது நேற்று அன்று ஆரம்பிக்கப்பட ஒன்றல்ல சுதந்திர கொடி ஏற்றப்பட்ட காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டுவரும் நிலப்பரீசமாகும். யுத்தத்தின்பின் இலங்கை அரசாங்கமானது. வட கிழக்கிலுள்ள காணிகளை ஆக்கிரமிப்பு செய்துவரும் அடாவடித்தனங்களை கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடத் மிக விபரமாக எடுத்துக்கட்டியுள்ளனர்.

இந்த விடயத்தை உலகம் அறியச் செய்யவேண்டுமென்பதற்காக காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் கடந்த (24.2.2022) தேதியன்று ஜனாதிபதி செயலக வளாகத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. வட கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

வனவிலங்கு பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி, தொல்பொருள் ஆய்வு, பூஜா பூமித்திட்டம் உல்லாசத்துறை அபிவிருத்தி விகாரை விஸ்தரிப்பு இராணுவ முகாம் விஸ்தரிப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிப்பு தொடர்பாக கூட்டமைப்பினர் வரிவாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

கிழக்கில் இராணுவம் ஒரு பக்கம் மறுபக்கம் தொல்பொருள் திணைக்களம், வனவிலங்கு திணைக்கள் இன்னொரு பக்கமாகவும் காணி சூறையாடல்களை மேற்கொண்டு வருகிறார்கள். என்று கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறவும் ஜனாதிபதி ஆச்சரியப்பட்டவராக "இராணுவத்தினர் அபகரிக்கிறார்களா? அவர்களுக்கு எதற்கு காணி என வினவியதாகவும் வயல் நிலங்களையும் வணக்க தலங்களையும் ஆக்கிரமிப்பது ஏற்க முடியாத நடைமுறை" என ஜனாதிபதி தெரிவித்ததாக கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்த அறியாமைத்தனத்தை தமிழ் தரப்பினர் ஏற்றுக்கொள்கிறார்களோ என்னவோ கிழக்கில் இராணுவத்தாலும் தொல்பொருள் திணைக்களத்தாலும் வன பரிபாலன திணைக்களத்தாலும் கபளீகரம் செய்யப்பட்ட ஏராளமான நிலக் கொள்ளை நடந்திருக்கிறது என்பது ஜனாதிபதிக்கு தெரி-யாமல் இருக்கிறது என்பது ஒரு பொருத்தமான பதிலாக இருக்க முடியாது. உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களுக்கு செந்தமான ஏராளமான நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் 6000 வருடம் பழமை வாய்ந்த கன்னியா வெந்நீரூற்று பறிக்கப்பட்டிருப்பது.

வடகிழக்கு அபிவிருத்தி நிதியம்.

கூட்டமைப்பினருடனான பேச்சுவார்த்தையின்போது ஜனாதிபதியவர்கள் "வட கிழக்குக்கான அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்கி புலம் பெயர் சமூகத்தின் நிதியை நாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கலாம்" என்ற கருத்தை ஜனாதிபதி கூட்டமைபிபினரிடம் தெரிவித்துனள்ளார். இது வரவேற்க ஆலோசனை மாத்திரமல்ல ஜனாதிபதியின் மனமாற்றத்தை எடுத்துகாட்டுவதாக அமைகிறது. இந்த செய்தியை அல்லது ஆலோசனையை ஜனாதிபதியவர்கள் திறந்த மனதுடன் கூறினாரா? அல்லது நல்ல மனோபாவத்துடன் தெரிவிதாரா? என்பது ஒருபுறமிருக்க குறித்த நிதியம் தொடர்பாக இருவிடயங்களை தெளிவாக பரிந்து கொள்ளவேண்டும்.

புலம் பெயர் சமூகத்தின் உதவியை எப்படி எவ்விதம் பெறுவது என்பது ஒரு சங்கடத்துக்கிய கேள்வி.

விடுதலைப்புலிகளுக்கும் நாட்டில் செயல்பட்டுவரும் பிரிவினைவாதிகளுக்கும் புலம் பெயர் சமூகத்தவர் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் எனக்கூறி 2014 ஆம் ஆண்டு மஹிந்த அரசாங்கம் புலிகள் உட்பட் 16 அமைப்புக்களையும் அதோடு தொடர்புடைய 424 புலம் பெயர் தமிழர்களையும் தடை செய்த நிலமை இன்னும் மாறிப்போகவில்லை. இது ஒருபுறமிருக்க கடந்த 2021 ஆம் ஆண்டு இதேமாதமளவில் பெப்ரவரி இலங்கை அரசாங்கம் 7 புலம் பெயர் அமைப்புக்களை மீண்டும் தடை செய்ததுடன் 388 தனிநபர்களை கறுப்புபட்டியலில் சேர்த்து 2016.37 அதிவிஷேட வர்த்தமானியையும் வெளியிட்டிருந்தது. கூட்டமைப்பினுடைய பேச்சுவாத்தைக்குப்பின் ஜனாதிபதி அவர்கள் புலம் பெயர் தமிழர்கள் அச்சமின்றிவரலாம் என்று சாதகமான சமிஞ்சையை காட்டியுள்ளார். இது நடைபெறுமாயின் புதியதொரு பயணத்தை இலங்கை அரசு ஆரம்பித்துள்ளது என்று பெருமைப்பட இடமுண்டு.

இந்த நிதியம் தொடர்பாக இன்னொரு செய்தியையும் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமானது. நல்லாட்சி அரசு காலத்தில் பிரதமர் ரணில் விக்கிமசிங்க அவர்கள் 2016 ஆம் ஆண்டளவில் யுத்த பாதிப்பை பெரிதும் எதிர் கொண்ட வடகிழக்கில் இவ்வருட் விஷேட நிதியமொன்றை அமைக்கவுள்ளதாக தெரிவித்திருந்தார் அதன்முடிவு எவ்வாறு இருந்தது என்பது நாடே அறியும். வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் முதல் அமைச்சர் நிதியமொன்றை அமைக்க பகீதரப்பிரயத்தனம் செய்தார். அந்த ஆலோசனைக்கு அரசு அனுமதி வழங்க ஆர்வம் காட்டவில்லை இனவாத குரோதத்துடன் பேசியது. வடக்கின் வசந்தமும் கிழக்கின் உதயமும் எதையுமே சாதிக்கவில்லை.

இந்த சம்பவங்கள் செய்திகளின் பின்னணியில்தான் அண்மையில் பேச்சுவார்த்தை இடம் பெற்றுள்ளது. "தான் கூட்டமைப்புக்கு வழங்கிய ஐந்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவேன் என்றும் அதுகுறித்து நம்பிக்கை கொள்ளும்படி" ஜனாதிபதி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஊடாக கூட்டமைப்புக்கு செய்தி அனுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது. இதை நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல் சூழ் நிலையை உருவாக்கக்கூடிய வல்லமை ஜனாதிபதி தன்னிடம் உண்டு என்பதை அவர் நிரூபிக்கவேண்டும். அது நடைபெறுமாயின் இலங்கையில் புதிய அத்தியாயமொன்று மலர வாய்ப்புண்டு.







# ஒஸ்கார் விருது வழங்கும் விழா - 2022

- குரு அரவிந்தன்

இந்த வருடம் ஒஸ்கார் விருது வழங்கும் விழா சென்ற 27 ஆம் திகதி மார்ச் மாதம், ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கோவிட்-19 காரணமாக கடந்த வருடம் இந்த விழா சிறிய வட்டத்திற்குள் நடத்தப்பட்டது. இம்முறை, சென்ற வருடத்திற்கான சிறந்த திரைப்படத்திற்கான விருது "கோடா" படத்திற்குக் கிடைத்தது. போட்டியில் இறுதிச் சுற்றுக்கு வந்த 10 படங்களில் இருந்து கோடா திரைப்படம் தெரிவானது. "த பவர் ஒவ் த டோக்" என்ற திரைப்படத்தை இயக்கிய ஜேன் கம்பெயினுக்கு சிறந்த இயக்குநர் விருது கிடைத்தது. ஒஸ்கார் சிறந்த இயக்குநர் விருது பெற்ற 3வது பெண்மணி இவராவார். "டியூன்" என்ற திரைப்படத்திற்கு 6 விருதுகள் கிடைத்திருந்தன. இந்தத் திரைப்படத்தை டெனிஸ் வில்லெனு என்பவர் இயக்கியிருந்தார். சர்வதேச திரைப்படத்திற்கான விருது யப்பானிய படமான "டிரைவ் மை கார்" என்ற படத்திற்குக் கிடைத்தது. சிறந்த அனிமேஷன் படத்திற்கான விருது "என்காண்டோ" என்ற திரைப்படத்திற்குக் கிடைத்தது. சிறந்த ஆவணப் படத்திற்கான விருது "சமர் ஒவ் ஸேல்" படத்திற்கும், சிறந்த ஆவண குறும் படத்திற்கான விருது "த குயின் ஒவ் பாஸ்கட்போல்" என்ற படத்திற்குக் கிடைத்தது.

உலகத் தரமான சிறந்த படங்களுக்கும், அதில் சிறப்பாகப் பங்கு பற்றியவர்களுக்குமான விருதுகள் வழங்கும் விழாக்களில் ஒஸ்கார் விருது விழா மிகவும் பிரசித்தி பெற்றது. இந்தவிழா சினிமா சமூகம் வாழும் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வருடா வருடம் நடைபெறுகின்றது. அந்த வரிசையில் இம்முறை 94வது ஒஸ்கர் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவில் இடம் பெற்றது. லொஸ் ஏஞ்சல்ஸ்ஸில் உள்ள டால்பி கலையரங்கத்தில் நடைபெற்ற இந்த விழாவில் விழாத் தொகுப்பாளர்ளாக வாண்டா சைக்ஸ், ஏமி ஸ்கூமர், ரெஜினா ஹால் ஆகியோர் கலந்து கொண்டனர். 2018 ஆம் ஆண்டுக்குப் பின் முதற்தடவையாக மூன்று பெண்கள் சேர்ந்து இந்த நிகழ்வைத் தொகுத்து வழங்கியிருந்தனர்.

இந்த விழாவில் சிறந்த நடிகருக்கான ஒஸ்கர் விருது ஹாலிவுட் நடிகரான வில் ஸ்மித்துக்குக் கிடைத்தது. 53 வயதான, பிலடெல்பியாவில் பிறந்த இவர் நடித்த "கிங் ரிச்சர்ட்" என்ற திரைப்படத்திற்காக இவருக்கு இந்த ஒஸ்கர் விருது கிடைத்தது. இவர் ஏற்கனவே வேறுபல விருதுகளைப் பெற்றிருக்கின்றார். தொலைக்காட்சிப் படங்களில் நடித்த இவர், 1986 ஆம் ஆண்டு திரைப்படத் துறைக்குள் வந்தார். வில் ஸ்மித் சின்ன வயதிலேயே சின்னத்திரை படங்களில் தனது இயற்கையான நடிப்பின் மூலம் பிரபலமானவர். அதன் மூலம் தனக்கெனப் பெரியதொரு ரசிகர் வட்டத்தையே உருவாக்கி இருந்தார். இவர் படத்தயாரிபாளருமாவார். இவரது 13வது வயதிலே இவரது பெற்றோர்கள் தனித்தனியே பிரிந்திருந்தார்கள்.



விழா நடந்து கொண்டிருந்த போது ஒரு கட்டத்தில் நகைச்சுவை நடிகரான கிறிஸ்றொக் மேடையில் நின்றபடி வில் ஸ்மித்தின் மனைவியின் கூந்தல் பற்றி விமர்சனம் செய்தார். வில் ஸ்மித்தின் மனைவியான ஜடா பிங்கெட் "அலோபீசியா" என்ற முடியுதிரும் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அதனால் அதைப்பற்றிக் கிண்டல் செய்த போது வில் ஸ்மித் மேடையில் ஏறி அவரது கன்னத்தில் பளார் என்று அறைந்து விட்டுத் திரும்பி வந்து உட்கார்ந்தார். அங்கிருந்தபடியே "எனது மனைவி பற்றி பேசவேண்டாம்" என்று உரத்த குரலில் சத்தம் போட்டுச் சொன்னார். இது நகைச்சுவைக்காக நடந்ததா, அல்லது உண்மையாகவே நடந்ததா என்பது தெரியாமல் ரசிகர்கள் குழம்பிப் போயிருந்தனர். ஆனால் வில் ஸ்மித் தனது உரையின் போது நடந்ததற்காக மேடையில், விழா அமைபாளர்களிடம் மன்னிப்புக் கேட்டார்.

சிறந்த திரைக்கதை, வசனத்திற்கான விருது "பெல்பாஸ்ட்" திரைப்படத்திற்குக் கிடைத்தது. சிறந்த நடிகைக்கான விருது "த ஐஸ் ஒவ் ரம்மி பே" படத்தில் நடித்த ஜெசிகா ஹெஸ்ரெயின் என்பவருக்குக் கிடைத்தது. சிறந்த துணை நடிகருக்கான விருது, "கோடா" திரைப்படத்தில் நடித்த ரோய் கோட்சூர் என்பவருக்கும், சிறந்த துணை நடிகைக்கான விருது, "வெஸ்ட் சைட் ஸ்ரோரி" படத்தில் நடித்த அரியானா டிபோஸ் என்பவருக்கும் கிடைத்தன. இம்முறை மொத்தம் 23 விருதுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில விருதுகள் கொடுப்பதை மட்டுமே நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

கடந்தகால ஒஸ்கார் விருதுகளை எடுத்துப் பார்த்தால், 1957 ஆம் ஆண்டு பிறந்த நடிகர் டானியல் டே லூவிஸ் மூன்று தடவைகள் ஒஸ்கார் விருதுகளைப் பெற்றிருந்தார். வயதில் குறைந்த நடிகைக்கான விருதை "பேப்பமூன்" படத்தில் நடித்த 10 வயதான ரட்ரும் ஓ நில் என்ற சிறுமி பெற்றிருந்தார். வயதில் குறைந்த சிறந்த நடிகருக்கான விருதை 29 வயதான அட்ரின் புறோடி பெற்றிருந்தார். ஒஸ்கார் விருது பெற்ற வயதில் கூடியவர் என்ற பெயரை கிளின்ட் எஸ்ற்வூட் 74 வயதில் பெற்றார். "லோறன்ஸ் ஒவ் அரேபியா" படத்தில் நடித்த பீட்டர் ஓ டூல் தான் அதிகமாக ஒஸ்கார் விருதுக்காகச் சிபார்சு செய்யப்பட்ட நடிகராவார். வயதில் குறைந்த இயக்குநருக்கான விருதை 2021 ஆண்டு டமியன் செசிலி தனது 32வயதில் "லா லா லான்ட்" படத்திற்காகப் பெற்றுக் கொண்டார். ஒஸ்கார் விருதுகள் பொதுவாக வெண்கலத்தில் செய்யப்பட்டுத் தங்க முலாம் பூசப்படுவது வழக்கம்.



கோடிக்கணக்கில் வருமானம் பெறும் திரைப்படங்கள் ஹொலிவூட்டில்தான் உருவாகின்றன. "வானபிறதேஸ்" ஸ்ரூடியோவுக்குச் சென்ற போது சில திரைப் படங்களின் படப்பிடிப்புகளைக் பார்ப்பதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு பெற்றோல் எண்ணெய் நிலையத்தில் நின்ற எண்ணெய் காவு வண்டியில் தீ பிடித்த போது அது எப்படி எல்லா இடமும் வேகமாகப் பரவியது என்பதைச் செயல் முறையில் செய்து காட்டிய காட்சி இப்பொழுதும் மனதில் பதிந்திருக்கின்றது. ஹொலிவூட்டில் பிரமாண்டமான படங்களை எப்படி உருவாக்குகிறார்கள் என்பதும் அப்போது புரிந்தது.



## ஜீவன் முக்தி (பகுதி 570)

# தேடும் ஆனந்தம் தியானத்தால் சாத்தியமே



திருப்தி நிம்மதி சுகம் போன்ற பல தலைப்புகளில் தமக்குக் கிடைத்த வழிகளிலெல்லாம் மனிதர்கள் முட்டி மோதி ஆனந்தத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். தியான மார்க்கத்தின் ஒரே நோக்கம் ஆனந்தத்தை மனிதருக்குள் அளவின்றி தருவது தருவது. உடல் நலம் மனநலம் ஆரோக்கியமான உறவுகள் செல்வம் ஆனந்தம் ஆகிய அனைத்தும் தியான மார்க்கத்தைத் மாத்திரமே. தொடர்ந்து கடைப்பிடிப்பதனாலேயே ஒருவருக்குக் கிடைக்கும் அருமையான பலன்கள். மனிதனின் ஒட்டு மொத்த தேவைகளுக்கும் ஒரேயொரு தீர்வு தியானம். தொடர்ந்து தியானம் செய்யும் தியானியாக மாறினால் மேற்கண்ட அனைத்தும் உண்மையென நிச்சயம் புரிந்து கொள்வீர்கள். வாழ்வில் அவ்வப்போது தியானம் வந்து போகாமல் வாழ்வே தியானமாக மாறும்போது ஜீவன் முக்தராக வாழ ஆரம்பித்து இருப்பீர்கள்.

| பஞ்சபூத தியானங்கள் | | ஐம்புலன்களுக்கான தியானங்கள் | | ஐந்து கோஷங்களுக்கான தியானங்கள் | |
|---|---|---|---|---|---|
| ஆகாசம் | சிதாகாச தியானம் | பார்த்தல் | பிரத்யாகார தியானம் | அன்னமய கோசம் | நித்ய யோகா |
| வாயு | ஸ்பூர்த்தி பானா தியானம் | கேட்டல் | மௌனமிருந்து தியானம் | பிராணமய கோசம் | சக்தி தாரணா |
| நெருப்பு | ஜோதி ஸ்தம்ப தியானம் | நுகர்தல் | செயலை நிறுத்து தியானம் | மனோமய கோசம் | நித்ய தியானம் |
| நீர் | ஆத்ம ஸ்புரண தியானம் | சுவைத்தல் | உண்ணுதல் தியானம் | விஞ்ஞானமய கோசம் | புஷ் சாதனா |
| நிலம் | யந்திரத் தியானம் | தொடுவுணர்வு | காமழுரண தியானம் | ஆனந்தமய கோசம் | தியான சிகிச்சை |

### சிதாகாச தியானம்



பலன்கள்:
7: ஆகாச தத்துவ சக்தியை நமக்குள் உருவாக்கும் சக்திவாய்ந்த தியானம் சிதாகாஷ தியானம்.
2: இந்தப் பயிற்சியை மேற்கொள்ள, தெளிந்த ஆகாச சக்தி உங்களுக்குள்ளேயே இருப்பதை பார்ப்பீர்கள். நீங்கள் மனமற்ற நிலையை எளிதாய் உணர உதவும் தியானம் இது.

இந்தத் தியான முறையைப் பற்றி:

வானத்தை முன்னிலைப்படுத்தி தியானம் செய்வதுதான், வெறுமையைத் தியானம் செய்வது. தெளிந்த நீலவானமே பூரண வெறுமை. அதன் மீது தியானம் செய்வது என்பது தெளிவுக்குள் பிரவேசிப்பது.

செயல்முறைக்கான விளக்கம்:

மேகமில்லாத தெளிந்த நீலவானம் புலப்படும் ஒரு நாளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அமைதியான இடமொன்றில் மல்லாக்கப் படுத்துக்கொண்டு வானத்தைப் பார்க்கத் தொடங்குங்கள். கண்களை இமைக்கக் கூடாது. கண்களில் நீர் வழிந்தால் கூட இனிமையான உணர்வோடு நீலவானத்தை பார்த்துக் கொண்டே இருங்கள். ஒருவேளை கண்கள் வலிக்கலாம். வலியைப் புறக்கணித்து விடுங்கள். கண்ணீர் கண்களை கழுவிய பிறகு உற்றுப் பார்ப்பது எளிதாகி விடும்.

வானத்தைப் பற்றி நினைக்காதீர்கள்! அந்த வானம் எவ்வளவு அழகாக நீலமாக இருக்கிறது. என்றெல்லாம் நினைக்காதீர்கள். எந்த வினாடி அதைப் பற்றி நினைக்க ஆரம்பிக்கிறீர்களோ அந்தக் கணமே நீங்கள் வானத்தை விட்டு விலகி விடுவீர்கள். உங்கள் பணி வானத்தைப் பற்றி நினைப்பதல்ல. அப்படியே அதற்குள் புகுந்துவிடுவது. சும்மா பார்த்துக் கொண்டிருப்பதன் மூலம் வானத்தின் துல்லியத்தை உணருங்கள். நீலவானத்தின் தூய்மையை உணருங்கள். அதற்குள் பிரவேசித்து விடுங்கள். வானத்திற்குள் ஆழமாகச் சென்று விடுங்கள்.

மேலும் மேலும் ஆழமாகப் பார்க்கப் பார்க்க இன்னும் இன்னும் ஆழத்தினுள்ளே செல்ல முடியும். அதனோடு ஒன்றிவிடும்வரை பார்த்துக்கொண்டிருங்கள். அதனோடு ஒன்றிவிட்டதாக நீங்கள் நினைப்பது வேறு. ஒன்றிவிடுவது வேறு அதனோடு ஒன்றி விட்டால் அது உங்களுக்குத் தெரிந்து விடும். ஒரு மணி நேரமோ அதற்கு மேலுமோ ஆகலாம். நிறுத்தாதீர்கள். உங்களது சிந்தனையை அலைபாய விட வேண்டாம். உங்களது பார்வையை வானத்தை விட்டு அகற்ற வேண்டாம். இனி கண்களை மூடுங்கள். அந்தச் சங்கமம் உண்மையில் ஏற்பட்டிருந்தால் வானம் உங்களுக்குள் இருப்பதை உணர்வீர்கள்!

உங்களது மனம் கழன்று காணாமல் போகும். உங்களின் எண்ணங்களும் மறைந்து போகும். அந்த வானத்திற்குள் இருங்கள். ஆரம்ப கட்டத்தில், அது, ஒரு சில கணமாகவே அமையும். பயிற்சி மேற்கொள்ள மேற்கொள்ள அந்த நிலையை மேலும் அதிக நேரம் அனுபவிக்க நேரும். தெளிந்த வானம் உங்களுக்குள் இருக்க நீங்கள் மனமற்ற நிலையை உணர்வீர்கள்.

### ஸ்பூர்த்தி பானா

பலன்கள்:
1. வாயு தத்துவ சக்தியை நமக்குள் உருவாக்கும் ஸ்பூர்த்தி பானா தியானம்.
2: நீங்கள் ஓடும்போது மனம் அசைவது இல்லை. மன அசைவு நின்றால் ஜீவன் முக்தத் தன்மையில் மலர்வீர்கள். அதுதான் டைனமிக் தியானம்‘ ‘ஓடும் தியானம்‘. ஏன் ஓட வேண்டும்? நீங்கள் ஓடும்போது தயார்நிலையிலும் விழிப்புணர்வு கொண்டும் இருப்பீர்கள். நீங்கள் ஓடும்போதுமனம் அசைவது இல்லை.

### செயல்முறைக்கான விளக்கம்:

ஓடுவதற்கான நேரத்தை முடிவு செய்து கொள்ளுங்கள். அதிகாலை நேரம் சிறந்தது அடுத்தபடியாக மாலை நேரம். எளிய நேரான பாதையைத் தேர்தெடுத்துக் கொள்ளுங்கள். கரடுமுரடானபாதை வராது. நிசப்தமும் தனிமையும் உள்ள இடம்.

ஓடும்போது... உங்களன் எண்ணம் முழுவதையும் தொண்டைக் குழியில் இருக்கும் விசுத்தி சக்கரத்தில் ஒன்றாக்கி ஓடுங்கள். உங்கள் கவனம் ஓட்டத்தில் மட்டுமே ஓடும்போது விசுத்தி சக்கரத்தில் கவனத்தை ஒன்றாக்கும்போது நமக்குள் வாயு தத்துவத்தின் பிராண சக்தி மிக அதிக அளவில் பொங்க வைக்கும்.

ஓடிப் பழக்கமில்லை என்றால் கொஞ்ச தூரம் ஒரு அரை மைல் ஓடினால் போதும். காலணி அணிந்து கொண்டும் செல்லலாம். கொஞ்சம் கொஞ்சமாகத் தூரத்தைக் கூட்டிக் கொள்ளலாம்.

அதற்குப் பிறகு ஓடுங்கள்! வயிற்றிலிருந்து மூச்சை விட்டு நன்றாக இழுங்கள். கைகள் எல்லாம் செயல்படும்படி ஓடுங்கள். களைப்புத் தோன்றினால் உடலுக்குச் சிரமம் கொடுக்காமல் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். காலணிகளைக் கழற்றி விட்டு கால் பூமி மண்ணைத் தொட்டு உணரும்படி நில்லுங்கள். பூமியைத் தொடுவதால் கிடைக்கும் ஒரு சக்தி ஆதாரத்தை நாம் இழந்து விட்டோம். காரணம் எங்கும் செயற்கையான தளங்கள் இருப்பதால் நாம் வெறுங்காலில் நடந்து மகிழ்வதையே விட்டு விட்டோம்.


இந்தியாவில் வெறுங்காலில் நடப்பது புனிதமான உடற்பயிற்சியாகக் கருதப்படுகிறது. அதனால்தான் பல வழிபாட்டுத் தலங்களிலும் மிதியடிகளை வெளியே விட்டு வரும்படிச் செய்கிறார்கள். அந்த இடங்களில் சக்தி மட்டம் உயர்ந்திருக்கும். அந்தச் சக்தியைப் பெற உங்கள் புலன்கள் அனைத்தும் தயாராகத் திறந்து இருக்கும்படி செய்ய வேண்டும். பாதை நன்றாக இருந்தால் வெறுங்காலில் ஓடுவது மாபெரும் அனுபவமாக அமையும்.



புல்வெளியிலோ
ஆற்றோரத்திலோ

கடற்கரையிலோ முயற்சி செய்து பாருங்கள். பூமியோடு தொடர்பு கொள்வது வாழ்வின் ஆதாரமூலத்தோடு தொடர்பு கொள்வதாகும். அதிகப்படியாக ஓடும் உற்சாகத்தில் சிக்கிக் கொள்ள வேண்டாம். காலத்தை வரையறுக்க வேண்டாம். உங்கள் பயிற்சியைச் செழுமைப் படுத்தவும் வேண்டாம். எடை குறைப்பதற் காகவும் ஓட வேண்டாம்!

ஒருவேளை உங்கள் எடை குறைந்தால் அதுவும் நல்லதுதான் ஆனால் அதற்காக என்று ஓடக் கூடாது. சும்மா ஓடுங்கள்! பல நாள் ஓடிய பிறகு அந்தக் காரியம் மலைபோல் தோன்றினால் அதை அப்படியே விட்டுவிட்டு, வேறு தியான முறைக்குப் போய் விடுங்கள்! நீந்தலாம் நடனமாடலாம். மறுபடியும் செய்யலாம் என்று தோன்றினால் ஓடுவதற்குத் திரும்ப வந்து விடுங்கள். நீங்கள் கடைப்பிடித்தாக வேண்டிய இந்தச் சில குறிப்புகள் தவிர வேறு எந்த விதிகளையும் வகுத்துக் கொள்ளாதீர்கள்.




# ஈழத்துத் திருக்கோவில்கள் 991



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## பத்திரகாளி அம்பாள் ஆலயம்
### திருகோணமலை

“சிலையாக நின்றாலும் சீரான வாழ்வுதரும்
செம்மை சேர் எழிலரசி
செவ்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்து
தேவியுந் தன் அருளாசியே
நித்தமும் சித்தத்தில் நின்றுமே அருளூட்டும்
நீடுபுகழ் உலகரசியே
நத்திடும் நங்கையர் மாங்கல்யம் காத்திடும்
நாயகி மாதரசி நீயே.”

இச்சம்பவத்தின் பின்னர், இத்தகைய உக்கிரமூர்த்தியால் மக்களுக்கு இன்னல் ஏற்படும் என்பதை உணர்ந்து, மந்திர, தந்திர கிரியைகளால் வைரவரை இடம்பெயர்த்துத் தூரத்திலுள்ள ஒரு மலையில் கொண்டுபோய் நிறுவினர். இவ்வாறான கர்ண பரம்பரைக்கதைகளும், வாய்மொழியாக நிலவுகின்ற கதைகளும், மக்களிடையே பயங்கலந்த ஒருவித பக்தியை பத்திரகாளி அம்பாளிடம் ஏற்படுத்தியுள்ளது.

இந்து மதத்தில் காணப்படும் வழிபாடு மற்றும் நம்பிக்கைகள் பரம்பரை பரம்பரையாக மக்களிடையே நிலை கொண்டு காணப்படுகின்றது. அறிவு வளர்ச்சி மேலோங்கிக் காணப்பட்டபோதிலும், இவ்வாறான வழக்கிலுள்ள கதைகளால் மக்கள் ஈர்க்கப்பட்டு, தொடர்ந்தும் தமது நம்பிக்கைகளை வளர்த்து வருவது கண்கூடு. சிலவேளைகளில் சிலருடைய வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் இந்த நம்பிக்கைகளுக்கு மேலும் உரமூட்டுவதாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்திலே பூசை செய்து வந்த அந்தணர் ஒருவருக்கு ஏற்பட்ட சம்பவமொன்றை இதற்குச் சான்றாகக் கூறலாம். ஒருநாள் இவ்வாலயத்துள் சுருண்டு படுத்திருந்த ஒரு சர்ப்பத்தின்மீது தவறுதலாகப் பாரமான கிடாரமொன்றை அந்தணர் ஒருவர் தூக்கி வைத்துவிட்டார். கிடாரத்தினடியிலிருந்த சர்பம் நசுங்கி இறந்துவிட்டது. அந்தச் சர்ப்பத்தின் சாபத்தால் இவ்வாலயத்திலே பூசை செய்து வந்த அந்தணர் பரம்பரையில், ஏழு சந்ததிக்கு ஆண் குழந்தையே பிறக்கவில்லை. ஏழு சந்ததிக்குப் பின்னரே ஆண் குழந்தை பிறந்தது. இக்கதையோடு தொடர்புடைய அந்தணர் பரம்பரை இக்கோயிலில் பூசை செய்து வருவது இக்கதை வெறும் கட்டுக்கதையல்ல என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி, தெய்வநம்பிக்கை மேலும் வலுவடைய ஊன்றுகோலாகக் காணப்படுகின்றது.

பத்தரகாளி அம்பாள் மீது மக்கள் கொண்ட ஆராத பக்தியால், இவ்வாலயத்தின் புனருத்தாரணவேலைகள் காலத்திற்குக் காலம் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, பிரம்மஸ்ரீ சு.கு. சோமாஸ்கந்தக்குருக்கள் காலத்தில் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவர் தமது பதினாறாவது வயதில் பத்திரகாளி அம்பாள் ஆலய பூசைப் பொறுப்பை ஏற்று நடத்த ஆரம்பித்தார். இவர் பொறுப்பேற்ற காலத்திலே ஆலய கர்ப்பக்கிரகமும், ஏனைய மண்டபங்களும் பழுதடைந்த நிலையிலே காணப்பட்டது. 1933 ஆம் ஆண்டு சில திருத்தவேலைகளைச் செய்து கும்பாபிஷேகமும் நடைபெற்றது. தொடர்ந்தும் பல திருத்த வேலைகள் இடம்பெற்றன. ஆலயத்தின் மகா மண்டபம், கோபுரமண்டபம் ஆகியவற்றைத் திருத்தியமைத்து 1947 ஆம் ஆண்டு மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. வசந்தமண்டபத் திருத்த வேலைகளும், வேறு சில திருத்தவேலைகளும் நடைபெற்று மீண்டும் 1962 ஆம் ஆண்டு மூன்றாவது தடவையாகக் கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. 1979 ஆம் ஆண்டு கற்பக்கிரகத்தைபூரணமாகத் திருத்தியமைத்து, அதிலே சுதைச் சித்திரங்களாகச் சப்தகன்னியர்கள் அமைக்கப்பட்டன. அர்த்த மண்டபத்தின் தென்புறத்திலே முச்சக்திகளும், வடபுறத்தில் அம்பாள், விநாயகர், முருகனும் அமைக்கப்பட்டனர். மகாமண்டபத்தில் ராஜராஜேஸ்வரியின் திருவுருவமும், விமானத்தில் கௌரி அம்பாளும் நிறுவப்பட்டனர். ஸ்நபனமண்டபம் சிற்ப சித்திர வேலைப்பாடுகளோடு அழகுற அமைக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் மேற்தளத்தில் அட்டநாகபந்தனம், ராசிச்சக்கரம் என்பன சுதையினால் அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் தெற்குப்பக்கம் மகாலெட்சுமியும், வடக்குப்பக்கம் சரஸ்வதியும் பரிவார மூர்த்திகளாக எழுந்தருளியுள்ளனர். சிம்மம், பலிபீடம், கொடித்தம்பம், மூலாதாரகணபதி என்பனவும், நாகதம்பிரான், பைரவர் ஆலயங்களும் அழகாகக் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. வெளிமண்டபத்தில் பத்திரகாளி அம்பாளின் திருவுருவம் சுதையினால் சித்தரிக்கப்பட்டுள்ளது. மண்டப வாசலுக்கருகே மணிக்கூட்டுக்கோபுரத்தை நாற்பதடி உயரத்திற்கு உயர்த்திக்கட்டி, அறுநூறு இறாத்தல் எடையுள்ள கண்டாமணி ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறான திருப்பணிகள் யாவும் காலக்கிரமத்தில் நடைபெற்று 1980 ஆம் ஆண்டு மீண்டும் கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடைபெற்றது. இவ்வாறாகப் பல கும்பாபிஷேகங்கள் இவ்வாலயத்திலே நடைபெற்றுள்ளது.

காரணம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும், ஆலய அமைப்பு முறைகளையும், கும்பாபிஷேக நித்திய, நைமித்திய விழா நெறிகளைத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. ஏன் இவ்வாறான கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன என்பதை அறிவது அவசியம். கும்பாபிஷேகம் நாலு வகைப்படும். அவை ஆவர்த்தம், அனாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரீகம் எனப்படும். கோவில் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து புதிதாக விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தால், அதனை அனாவர்த்தம் என்று அழைப்பர். முன்பு ஆலயம் இருந்து இயற்கையின் சீற்றத்தினாலோ அன்றி வேறு வகையாலோ அழிவுபட்டு பின்னர் வரலாறுகளின் மூலமோ அன்றிக் கர்ணபரம்பரைக் கதைகளின் மூலமோ கண்டுபிடிக்கப்பட்டுச் சிறு ஆலயமாக வழிபாடியற்றப்பட்டு வந்து, புதிதான ஆலயத்தைப் பழைய இடத்திலே நிர்மாணித்து பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தம் எனப்படும். ஆலயத்திலுள்ள வர்ணங்கள் மற்றும் விக்கிரகங்களில் பிழை ஏற்பட்டாலும், மருந்து என்று கூறப்படும் அஷ்டபந்தனம் பழுதடைந்தாலும் செய்யப்படும் கும்பாபிஷேகம் புனராவர்த்தனம் என அழைக்கப்படும். கள்ளராலோ மற்றும் வேறு காரணங்களாலோ நித்திய பூசை தடைப்படால் செய்யப்படுவது அந்தரீதம் எனப்படும். பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பல தடவைகள் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இதனைப் பெருஞ்சாந்தி விழா எனவும் அழைப்பர்.

வளரும்...

DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6



416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan

ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 50)

# கல்கியின் பொன்னியின் செல்வன்


## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

'கோமகனே தாங்கள் இதற்கு முன்னால் செய்த துரோகங்கள் குற்றங்கள் எல்லாவற்றையும் நான் மன்னித்து விடுகிறேன் மறந்தும் விடுகிறேன் ஆனால் நீங்கள் இன்னும் கூட எனக்கு துரோகம் செய்கிறீர்கள் ஒரு நாள் இவன் என்னைத் தஞ்சையில் பார்த்தான் என் பாதம் தன் பேரில் பட்டால் அது என் பாய்க்கியம் என்றான் அவனைக் காலால் உதைக்கவும் கூட எனக்கு மனமில்லை பின்னர் அங்கிருந்து ஓடிவிட்டான் இவன் நிச்சயமில்லாத எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் தங்களைக் கடம்பூர் செல்ல வேண்டாம் என்று வழியில் தடுக்கப் பார்த்தான். பொய்யான செய்திகளைச் சொல்லி தங்களை இணைபிரியாது சுற்றி வருகிறான் தாங்களும் அவனை உயிர் நண்பன் என்று எண்ணி தங்களுடன் வைத்திருப்பது எத்தனை துரோகம்' என்றாள் நந்தினி. அதைக் கேட்ட கரிகாலர் 'வந்தியத்தேவன் அப்படிப்பட்டவன் அல்ல என்பது திண்ணம் அவனை மணிமேகலைக்கு திருமணம் செய்து கொடுக்கலாம் என்று எண்ணுகிறேன் நீ சொல்வதை நம்ப முடியவில்லை என்னை கடம்பூர் போக வேண்டாம் என்று முதல் மந்திரி அநிருத்தரிடம் இருந்து ஆழ்வார்க்கடியான் ஊடாக செய்தி வந்தது' என்றான். 'முதல் மந்திரி அநிருத்தரின் சூழ்ச்சியது அதாவது அவர் தங்கள் தந்தையின் உயிர் நண்பர் அதனால் தானே அவர் உரிமையை அபகரிக்கப் பார்க்கிறார் தாங்கள் வெறிபிடித்தவர் பக்தி இல்லாதவர் என்பது அவர் எண்ணம் தங்கள் தம்பிக்கு பட்டம் கட்டி விட்டால் அவரை வீர வைஷ்ணவராக்கி இந்த சோழ நாட்டையே வைஷ்ணவ நாடாக்கி விடலாம் என்பது அவர் விருப்பம்' என்றாள். கரிகாலரோ 'அவர் அந்தரங்கங்கள் எவ்வாறு உனக்குத் தெரியும்' என்றார். 'ஐயா அந்த வைஷ்ணவன் என் சகோதரன் என்பதை தங்களுக்கு நினைவூட்டுகிறேன் அவன் தந்தை வீட்டில் நான் வளர்ந்தேன் ஆகையால் என்னை அவன் சகோதரி என்று அழைத்தான். ஆனால் அவன் தன்னை நான் கல்யாணம் செய்து கொண்டு தம்பதிகளாக யாசுரம் பாடிக்கொண்டு ஊரூராய் போய் வைக்ஷ்ணவத்தை பிரசுரம் செய்ய வேண்டும் நான் பல குழந்தைகளைப் பெற்றளிக்க வேண்டும் என்பது அவன் விருப்பம்' என்றாள். அதற்கு கரிகாலர் 'இது என்ன உன் அழகுக்கு இவன்------. நந்தினி, வந்தியத்தேவனும் மணிமேகலையும் வருகிறார்கள் மீண்டும் பேசுவோம்' என்றான் பின்னர் மதிய உணவு அருந்திவிட்டு கடம்பூர் சென்றனர். குந்தவையும் வானதியும் நாகபட்டினம் வந்து ஆனை மங்கலத்தில் சோழ மாளிகையில் அருள் மொழி வர்மரைப் பார்த்து விட்டுப் போனார்கள்.

அதன் பின் பொன்னியின் செல்வர் நாகை பட்டினத்தில் சூடாமணி விகாரத்தில் குந்தவையின் மறு ஓலை வரும்வரை காத்திருந்தார். தஞ்சை சென்று தன் தாய் தந்தையரைப் பார்க்க வேண்டும் தனக்கு ஏற்பட்ட பழியை வெகு விரைவில் போக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். தன் நோக்கத்தை அங்கு நடைபெறும் ஆராதனைகளிலும் பூசைகளிலும் கலந்து கொண்டு போக்கினார். அதனைவிட அங்குள்ள சித்திரங்களிலிலும் தலைமைப் பிக்குவிடம் உரையடுவதிலும் கழித்தார். இந்தப் பிக்கு கீழ்த்திசை கடலுக்கு அப்பாலுள்ள பற்பல நாடுகளிலும் வெகுகாலம் யாத்திரை செய்தவர். சீன தேசத்தில் இருந்து சாவகத் தீவு வரையில் பல ஊர்களுக்குச் சென்று வந்தவர் இதனால் அங்குள்ள நாடு நகரங்கள் மக்கள் யாவரையும் பற்றி நன்கு எடுத்துக் கூறினார். அதனைவிட எம் மொழி கலை கலாச்சாரம் என்பன அந்தந்த நாடுகளில் பரவியிருப்பதைப் பற்றி சொன்னார். தமிழ் மொழியின் தந்தையாகிய அகத்திய முனிவருக்கு உள்ள மரியாதை பற்றியும், அந்த நாடுகளில் கோயில்கள் கட்டியிருப்பதைப் பற்றியும் சொன்னார் அவற்றை மிக ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். இளவரசே சக்கரவர்த்தியும், தங்கள் தமக்கையாரும், தாங்களும் புத்த மதத்திற்கு எத்தனை பெரும் தொண்டு செய்துள்ளீர்கள் இலங்கை அரச குடும்பத்தினர் கொடும் பாதகங்களை செய்வதாக மகாவம்சமே கூறுகிறது. இந்த அரச வம்சத்தையே மாற்ற மகா புத்திமான்களான புத்த சங்கத்தார் விரும்பினார்கள். தங்களை முதல்வராக கொண்டு புதிய வம்சம் தொடங்கட்டும் என்று எண்ணினார்கள் நீங்கள் மறுத்தது எத்தனை பெரும் கவலை என்றார் புத்த பிக்கு. அதற்கு அருள்மொழிவர்மர், 'என் முன்னோர்கள் மத்தியில் நான் மண்டியிடுகிறேன் பிறருக்கு உபகாரம் செய், உன் நலனை மற்றவர்களுக்காக தியாகம் செய் என்று வற்புறுத்துகின்றனர். சிலர் கையில் கத்தி எடு, படை திரட்டு, சோழ ராஜ்ஜியத்தை விஸ்தரி, உலகம் காணாத பெருமை கொள் என்கின்றனர். சிலர் ஆலயத்திருப்பணி செய்ய பெரிய சிவாலயங்களை எழுப்பு என்று உபதேசிக்கின்றனர். என் பெரும் கடமைகளை நான் உணர்கிறேன்' என்றார்.

அப்பொழுது தலைமைப் பிக்கு 'சுந்தர சோழ சக்கரவர்த்தியின் குடும்பத்திற்கு விரோதமாக சோழ நாடு சிற்றரசர்கள் பல சதி செய்வதாக நாடெங்கும் பேச்சு. அத்துடன் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள் சிலர் இரகசிய சதிவேலை வெய்வதாக கேள்வி இந்த இருவருக்கும் புத்த விகாரத்தில் உள்ள நாம் உதவி பண்ணியிருப்பதாக எண்ணி மக்கள் ஆத்திரத்துடன் வாசலில் வந்து கூடியிருக்கிறார்கள். தங்களைப் பாதுகாப்பது எம் கடமை' என்றார். அப்பொழுது ஒரு பிக்கு அங்கு வந்தார் 'சுவாமி நிலைமை கட்டுக் கடங்காது போகிறது இளவரசர் இங்கு இருக்கிறாரா? இல்லையா? என்று நாம் பார்க்க வேண்டும் எங்களை உள்ளே விடுங்கள் என்கிறார்கள் மக்கள் என்ன பதில் சொல்லி அவர்களை சமாளிப்பது என்று தெரியவில்லை' என்றார். அதற்கு இளவரசர் 'குருநாதரே பதட்டம் வேண்டாம் நான் இங்குள்ள ஆனை மங்கலத்தில் உள்ள சோழ மாளிகைக்கு கால்வாய் வழியா போகிறேன் பின்னர் திரும்பி வருகிறேன் படகு ஒன்று ஆயத்தம் செய்யுங்கள்' என்றார். 'இளவரசே கோடிக்கரை தியாகவிடங்கர் மகன் முருகையனும் அவன் மனைவியும் நீங்கள் இங்கு தான் இருக்க வேண்டும் என்று வாதம் செய்தனர் அவர்களும் இந்த மக்கள் கூட்டத்தில் இருக்கிறார்கள்' என்றார். அப்பொழுது இளவரசர் 'முருகையனை எனக்கு நன்கு தெரியும் அவன் என் விருப்பத்திற்கு எதிராக ஒன்றும் செய்ய மாட்டான். அவனை இங்கு அழைத்து வாருங்கள் அவன் என்னைப் படகில் ஏற்றி ஆனைமங்கலம் சோழ மாளிகைக்கு கொண்டு செல்வான்' என்றார். பின்னர் தலைமைக் குரு வெளியே சென்றார். ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு கூச்சல் போட்டபடியும், வாள், வேல், தடி போன்றவற்றை கைகளில் வைத்துக் கொண்டும் நின்றார்கள் இதைப் பார்த்ததும் தலைமைக் குரு கதி கலங்கி நின்றார். அவரைக் கண்டதும் 'பொன்னியின் செல்வரைக் கொடுத்து விடுங்கள் இல்லாவிடில் விகாரத்தை இடித்து தரை மட்டமாக்குவோம்!' என்று குரோதம் நிறைந்த குரலில் எழுந்த கோசத்தைக் கேட்டு திடுக்கிட்டார்.

அவ்வேளை கொடும் புயல் தாக்கத்திற்கான அறிகுறியையும் அவதானித்தார். இந்தக் கொடுமைகளில் இருந்து தப்பிப் பிழைக்க வேண்டுமே என்று கவலை கொண்டார். அங்கு நின்ற வாலிபப் பிக்கு ஒருவர் மக்களின் இரைச்சல் அடங்கும் படி செய்தார் பின்னர், 'மகா ஜனங்களே எங்கள் தலைவரை அழைத்து வந்திருக்கிறேன் உங்களில் யாராவது சென்று ஒரு மாத காலத்திற்குள் பொன்னியின் செல்வரை பார்த்தவர் இருந்தால் வாருங்கள் நான் உங்களை அழைத்துப் போகிறேன். நீங்கள் இளவரசரை அடையாளம் கண்டு கொள்ளுங்கள் பின்னர் திரும்பி வந்து அந்த சனங்களுக்குச் சொல்லுங்கள் இது உங்களுக்கு சம்மதமா?' என்று பெருத்த குரலில் முழங்கினார். அப்பொழுது முருகையன் 'நான் அவரைப் பார்த்திருக்கிறேன் அவரின் அடையாளங்களை என்னால் சொல்ல முடியும் நான் வருகிறேன்' என்றான். அந்தப் பிக்குவும் அவரை முன் நிறுத்தி 'இதோ இந்தப் படகோட்டி முருகையன் இளவரசரைப் பார்த்து இருக்கிறானாம் இவனை உள்ளே அழைத்துப் போகிறேன் விகாரம் முழுவதும் தேடிப் பார்த்துவிட்டு திரும்பி வந்து உங்களுக்குச் சொல்வான்' என்றார். அவனை அழைத்துச் சென்றான் அப்பொழுது சாந்த




முகம் கொண்ட தலைமைப் பிக்குவை பார்த்து மக்கள் பயபக்தி கொண்டனர். அவரும் மக்களைப் பார்த்தார். அவர்களுக்குப் பின்னால் தெரிந்த கடலையும் பார்த்தார். 'மகா ஜனங்களே இளவரசர் மீது தாங்கள் கொண்ட அன்பை நான் இங்கு காண்கிறேன் உலகை ஆளப் பிறந்த இளவரசரை காவித் துணி அணிவிக்க நான் உடந்தையாக இருக்க மாட்டேன் இதை புத்த பகவான் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன் புத்தம் கச்சாமி! தர்மம் கச்சாமி! சங்கம் கச்சாமி!' கம்பீரமான குரலில் உணர்ச்சி ததும்பப் கூறினார். 'மேலும் கடும் கொடும் புயல் எம்மைத் தாக்கப் போகிறது திரும்பிப் பாருங்கள் உங்களை காத்துக் கொள்ளுங்கள்' என்றார். உடனே மக்கள் பீதியுடன் கலைந்து சென்றனர். தலைமைப் பிக்கு இளவரசரிடம் திரும்பி வந்தார் இளவரசே புறப்படுங்கள் என்றவாறு அவரை படகு வரை அழைத்துச் சென்று விடை கொடுத்தார். அங்கு கூடியிருந்த புத்த பிக்குகளைப் பார்த்து, 'நாம் கருணை வடிவான புத்த பகவானினைச் சேர்ந்தவர்கள். பிரிவின் துன்பத்தின் போது நாம் கைகொடுக்க வேண்டியரவர்கள் சொல்லில் ஒன்றும், செயலில் ஒன்றும் செய்யாது துன்பத்தின் பிடியில் இருப்பவர்களைப் பார்த்தும் பார்க்காமல் போவதும் புத்த பெருமானுக்கு உகந்ததல்ல. நாகபட்டின மக்களுக்கு பெரும் சோதனை வந்துள்ளது. கடல் பொங்கி நகரத்துக்குள் வேகமாக புகுந்து விட்டது புயலின் வேகத்திற்கு வீட்டுக் கூரைகள் பறக்கின்றன. மரங்கள் விழுந்து முறிகின்றன குழந்தைகள், வயோதிபர்கள், பெண்கள் ஆண்கள் எல்லோரும் படும் துன்பங்களை தீர்ப்பதற்கு உங்களால் முடிந்த உதவி செய்யப் புறப்படுங்கள் முடிந்தவரை அவர்களை காப்பாற்றுங்கள் நான் வயதானவன் இந்த மாலை நேரப் பூசையைக் கவனித்துக் கொள்கிறேன் அனைவருக்காகவும் கருணை உள்ளம் படைத்த பெருமானிடம் வேண்டிக் கொள்கிறேன்' என்றார். இளவரசர் படகில் ஏறி ஆனை மங்கலம் மண்டபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். முருகையனோ படகைச் செலுத்த மிகவும் கடினப்பட்டான். படகும் தத்தளித்தது இளவரசர் சற்றுத் தூரமாக தன் கண் பார்வையை செலுத்தினார் நந்தி மண்டபம் தெரிந்தது அதன் நீர் மட்டம் தலைக்கு மேல் போயிருந்தது உடனே இளவரசர் நிலைமையை ஊகித்துக் கொண்டு 'முருகையனே படகை சூடாமணி விகாரத்திற்கு திருப்பு' என்றார். அவனும் அவ்வாறே செய்தான் படகு விகாரத்தை அடைந்ததும் விரைவாக ஓடிச் சென்று மேல் மாடங்களின் பகுதியை அடைந்து பரபரப்புடன் தேடினார்.

அப்பொழுது அவர் கண்ட காட்சி அவர் மனதை உருக்கியது அங்குள்ள புத்த பெருமானின் சிலையின் பாதங்களை இறுகக் கட்டிக் கொண்டு ஆச்சாரிய பிக்கு உட்கார்ந்திருந்தார். உடனே இளவரசர் அவரைத் தூக்கி எடுத்தார். தன்னோடு படகில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார். முருகையன் படகை சர்வ ஜாக்கிரதையாக செலுத்தினான். பெரிய பெரிய மரங்கள் காற்றில் முறிந்து விழுந்தது. முறிந்த மரங்கள் மிதந்து சென்றன அதில் பிடித்துக் கொண்டு சிலர் உயிர் தப்ப முயன்றனர். ஆடு மாடுகள் வெள்ளத்தில் அலறிக் கொண்டு சென்றன இப்படியான கொடூரமான காட்சிகளைக் கடந்து படகு சென்றது. இயற்கையின் உட்பாதங்களைத் தடுக்கும் சக்தி யாருக்கும் இல்லை. இயற்கையை ஆளும் சக்தியின் தீர்மானங்களே இவைகள். மனித சக்கியால் அதை தடுத்து நிறுத்தவோ எதிர்த்துப் போராடவோ முடியாதவை அதிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளவோ, பிறருக்கு உதவிடவோ, அவர்களைக் காப்பாற்றவோ எம்மால் முடியும். அதைச் செய்வதால் எம் மனம் அமைதியும் ஆனந்தமும் கொள்ளலாம். இதனால் நாம் எம் வாழ்வை வென்றிடலாம். படகு அரண்மனை ஓரத்தில் வந்து நின்றது. அங்கு நின்ற காவலன் அதில் இளவரசர் இருப்பதைக் கண்டான். ஓடோடி வந்து அவர் காலில் விழுந்து வணங்கினான் 'இளவரசே தாங்கள் சூடாமணி விகாரத்தில் இருப்பதை குந்தவை பிராட்டி என்னிடம் சொன்னார். யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றும் பணித்தார். இன்று சூடாமணி விகாரம் மூழ்கிவிட்டதெனப் பார்த்தேன் என் கவலைக்கு அளவேயில்லை' என்றான். இளவரசர் காவலனை நோக்கி 'இங்கு உள்ளவர்கள் யார்' என்றார். அதற்கு அவன் 'இந்த மாளிகையைச் சுற்றி இருக்கும் மக்கள் கடல் புகுந்து விட்டதால் ஓடிவந்தவர்கள்' என்றான். 'அவர்களுக்கு இடம் கொடு சமைத்துச் சாப்பிடக் கொடு எங்களை அரண்மனையின் மேல் மாடத்திற்கு அழைத்துப் போ எவரும் நாம் அறியதவாறு பார்த்துக் கொள்' என்றார். அன்றிரவு முழுவதும் நாகை பட்டடினம் ஒரே அல்லோல கல்லோலமாக இருந்தது. தலைமைக் குருவும் பொன்னியின் செல்வரும் ஆனை மங்கல சோழ மாளிகைக்குள் வெகு நேரமாக கண் விழித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

பின்னர் இளவரசர் அரண்மனை மணியக்காரனை அழைத்து களஞ்சியங்களில் உள்ள தானியங்களையும், பொக்கிஷத்தில் உள்ள பணத்தையும் பற்றி விசாரணை செய்தார். பின்பு தலைமைக் குருவிடம் களஞ்சியத்தில் உள்ள தானியங்களை ஏழை மக்களுக்கு உணவளிக்க செலவிடலாம். செம்பியன் மாதேவி அனுப்பி வைத்த பொக்கிஷங்களை எடுத்து வீடு இழந்தவர்களுக்கு விநியோகிக்கலாம். அரசாங்க பொக்கிஷத்தில் இருந்து செலவு செய்தால் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் கோபம் கொள்ள நேரிடும் செம்பியன் மாதேவிக்கு நான் சமாதானம் சொல்லிக் கொள்வேன். ஏழை எளியவர்களுக்கு செலவு செய்தால் அவர் உள்ளம் மகிழ்ந்து பூரிக்கும் இந்த சோழ நாடெங்கும் நூற்றுக் கணக்கான ஆலயங்கள் எழுப்பிக் கொடுப்பேன் என்றார். 'இளவரசே தங்களை பெரிய ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றியது தாங்கள் பெரிய பெரிய காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகவே! இது அந்த இறைவனின் சித்தம்' என்றார் தலைமைக் குரு. இவ்வேளை படகோட்டி முருகையன் தன் மனைவியை எண்ணி அழுது கொண்டிருந்தான். அதைப் பார்த்த இளவரசர் அவன் அருகில் சென்று ஆறுதல் கூறினார். அப்பொழுது முருகையன் 'என்னை சூடாமணி விகாரததிற்கு அழைத்து வந்தவள் என் மனையாள் அங்குதான் இளவரசர் இருக்கிறார் என்று கூறியவளும் அவளே! அதனால் தான் எனக்கு இந்தப் பாய்க்கியம் கிடைத்தது' என்றார். 'அவள் எப்படி தெரிந்து கொண்டாள்' என்று இளவரசர் கேட்க, 'என் அத்தையும், பூங்குழலியும் படகில் நாகை பட்டினம் போக புறப்பட்டனர் அப்பொழுது யாரோ மூர்க்கர்கள் என் அத்தையை பலவந்தமாக இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள் பூங்குழலியை கட்டிவிட்டு என் மனையாளை அடித்துப் போட்டனர். இதனால் தாங்கள் நாகபட்டினத்ததில் இருக்கலாம் என்று ஊகித்தோம்' என்றார். 'யார் உன் அத்தை அவள் ஏன் நாகபட்டினம் வரப் புறப்பட்டாள்' என்று இளவரசர் கேட்டார். 'தங்களை பல தடவை காப்பாற்றிய ஈழத்தரசி' என்றான் முருகையன்.

*தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோ கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# மலேசியத் தமிழர்களின்-இந்தியர்களின் ஊடக ஒளிக்கீற்று -தகவல் பெட்டகம்: மின்னல் பண்பலை வானொலி

- நக்கீரன்



2022 ஏப்ரல் முதல் நாளில் 76-ஆம் ஆண்டை எட்டும் மின்னல் பண்பலை வானொலிக்கு முதற்கண் மனமார்ந்த வாழ்த்து உரித்தாகட்டும்!. மலேசியவாழ் தமிழர்களின் தாய்மொழியாம் தமிழில் புத்தாக்கப் பணியைய காலந்தோறும் மேற்கொண்டு வருவதுடன் இணைய யுகத்திற்கும் 21-ஆம் நூற்றாண்டுக்கும் ஏற்ப தமிழை செம்மைப்படுத்தி செதுக்கியும் புதுப்பித்தும் வரும் ஒரே அமைப்பு இந்த மலையக மண்ணில் ஆர்டிஎம் மின்னல் பண்பலை வானொலிதான் குறிப்பாத அதன் செய்திப் பிரிவினர்.

இம்மலைத்திருநாட்டில் தமிழ் இனம் சார்ந்தும் மொழி சார்ந்தும் எண்ணற்ற அமைப்புகள் இருந்தாலும், தமிழில் புத்தாக்கப் பணியை இடையறாது மேற்கொண்டு வரும் மின்னல் வானொலியின் செய்திப் பிரிவினருக்கு மலேசியத் தமிழர்கள் எஞ்ஞான்றும் நன்றிக்கடன் பட்டுள்ளனர்.

மின்னல் வானொலி செய்திப்பிரிவினர் நூற்றுக் கணக்கான புதிய சொற்களை உருவாக்கி, அல்லது புதுப்பித்து வானவீதியில் தவழவிட்டு வருகின்றனர். அத்தகைய சொற்களில் மகுடத்தைப் பொன்ற ஒரு சொல் மறைகாணி. இந்தச் சொல்லை சொல்லுந்தோறும் நினைக்குந்தோறும் உள்ளத்தில் இன்ப வெள்ளம் பெருக்கெடுக்கும். கேட்குந்தொறும் செவியில் தேனாறு பாயும்.











தொடக்க நாட்களில் சிசிடிவி கேமெரா என்றும் பின்னர் இரகசிய கேமரா என்றும் சொல்லப்பட்டு வந்த நிலையில், அதற்கு தமிழில் ஒரு புதிய கலைச்சொல்லை உருவாக்கி, அதை பலுக்கியும் வருகின்றனர்.

பூஜியத்தை மாற்றி சுழியம், அபராதம் என்பதற்குப் பதிலாக தண்டம், டயர் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக வட்டகை, விண்ணப்ப பாரம் அல்லது மனுபாரம் என்பதை விண்ணப்பப் படிவம் என்று மாற்றியது, "ட்விட்டர்" என்பதை கீச்சகம் எனல், இன்ஸ்தாகிராமை படவரி எனல், Cake-அணிச்சல், Chocolate-இன்னட்டு, Calculator-கணிப்பான், இடைநிலைப் பள்ளிகளில் உள்ள வகுப்புகளை படிவம்-1, படிவம்-2, படிவம்-3 என்பதையெல்லாம் திருத்தி, 4-ஆம் படிவம், 5-ஆம் படிவம் என்று தமிழ் மரபுக்கு ஏற்றபடி மாற்றி அமைத்தது போன்றவறை சான்றாகக் குறிப்பிடலாம்.

இதில் அண்மைக்காலமாக வானொலி செய்திப் பிரிவில் உலா வரும் இன்னோர் இனிய சொல் "சந்திப்புறுதி" Appointment என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத்தான் இந்த புதிய கலைச்சொல்லை மின்னல் பண்பலையின் செய்திப் பிரிவினர் உருவாக்கி உள்ளனர்.

தமிழில் புதிய கலைச்சொல் உருவாக்கப் பணியில், சில வேளைகளில் தேசிய மொழியான மலாயின் தாக்கம் இழையோடி இருப்பதையும் காண முடிகிறது. இது, தவிர்க்க முடியாததுதான் என்றாலும், இன்னும் சற்றே முயன்றால் அதையும் தவிர்க்கலாம்.

போட்டி விளையாட்டு, வெட்டுமர நடவடிக்கை, மணி பத்து போன்ற சொற்றொடர்களில் தேசிய மொழியின் தாக்கம் அப்பட்டமாகத் வெளிப்படுகிறத் அதைப்போல 'Undivided Support' என்பதை காலமெல்லாம் "பிளவுபடாத ஆதரவு" என்றே சொல்லுக்கு சொல் என்ற பாணியில் மொழிபெயர்த்து பலுக்குவதும் சிறு மாசுதான். ஆதரவு என்றானபின் "பிளவு" என்பது என்பதைத் தவிர்த்துவிட்டு முழு ஆதரவு அல்லது ஒன்றுபட்ட ஆதரவு எனலாம்.

மொத்தத்தில், இந்த மலையகத்தில் தமிழ் கலைச்சொற்களை உருவாக்கி, மொழியில் புத்தாக்கம் படைத்து தமிழ்த் தொண்டாற்றிவரும் மின்னல் வானொலி அறிவிப்பாளர்கள், குறிப்பாக அதன் செய்திப்பிரிவினர் மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள் என்பதை மீளவொரு முறை பதிவு செய்கிறேன்.

இதில், குறிப்பிடத்தக்க இன்னோர் அம்சம், மின்னல் பண்பலை வானொலியில் பணிபுரியும் நளினி, சத்தியா, குணசுந்தரி, கிஷன், திரேசா, சுகன்யா, பிரேமா கிருஷ்னன், தெய்வீகன், மோகன், காயத்ரி கண்ணம்மாள், அஸ்வினி, பவின், சகுந்தலா உள்ளிட்ட அறிவிப்பாளர்களும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் குழுவாக சேர்ந்து ஆங்கில கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கலை சமூக வலைதளங்களில் அறிமுகப்படுத்தி வருகின்றனர். இவை பெரும்பாலும் மாணவர்களுக்கும் இளைய சமுதாயத்தினருக்கும் பயனுற அமைகின்றன.

நாடு விடுதலை அடைவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னமே தொடங்கப்பட்ட இந்த வானொலிக்கு நெடிய வரலாறு உண்டு அதேவேளை இது கடந்துவந்த பாதை, மலையையும் மடுவையும் கடந்து வந்ததைப் போன்றது.











இதன் நிகழ்காலத் தலைவராக இருப்பவர் கவித்திரு கிருஷ்ணமூர்த்தி இவரின் தலைமையில் இயங்கும் மின்னல் பண்பலை வானொலி, கொரோனா பருவத்திற்கு ஏற்ப தன்னை தக அமைத்துக்கொண்டு சமூக நலப் பணியில் அதிகமாக ஈடுபட்டு வருகிறது.

மின்னல் வானொலியின் இலச்சினையில் இடம்பெற்றுள்ள இனிமை, இளமை, புதுமை என்னும் சொற்களுக்கு ஏற்ப இவ்வானொலி நிலையம் பயணித்து வந்தாலும், இந்த வானொலி தொடங்கி 15-ஆம் ஆண்டில் தலைமை ஏற்ற இரா. பாலகிருஷ்ணனின் காலம் இந்த அரச வானொலிக்கு வசந்த காலம் எனலாம்.

அவரின் காலத்தில்தான், சமற்கிருத சாயல் கொண்ட ஏராளமான சொற்கள், நற்றமிழ் வடிவம் பூண்டன. ஆரம்பம் என்பதற்குப் பதிலாக தொடக்கம் கானம் என்பதற்கு மாற்றாக பாடல் அதைப்போல சபைக்கு பதில் அவை, கோஷ்டி கானம் என்பதை மாற்றி குழுப்பாடல், உபயோகத்தைத் தவிர்த்துவிட்டு பயன், பிரயாணிகளை மாற்றி பயணியர் என்றது, பாராளுமன்றம் நாடாளுமன்றம் ஆனது, சந்தோசம் இடம்பெயர்ந்து மகிழ்ச்சி குடிகொண்டது் வந்தனம் வணக்கமாக மாறியது, ராஜா அரசரானது போன்றவற்றைச் சுட்டலாம்.







அதைப்போல, திரு. பார்த்தசாரதி, திரு. இராஜசேகரன் போன்றோரின் காலத்திலும் அந்தந்த காலத்திற்கேற்ப தமிழ் வளர்ச்சிப் பணி தொடர்ந்தது.

இது ஒரு தகவல் ஊடகமாக இருந்து, நம்பகமான செய்திகளை மலேசிய இந்திய சமுதாயத்திற்கு இனிமையும் புதுமையும் கலந்து இனிமை சேர வழங்கிவரும் மின்னல் பண்பலை வானொலி வாழ்க! வாழ்க!!

அதன் சேவை தொடர்க! தொடர்க!!

முன்பெல்லாம் காலை 11:00 மணி உலகச் செய்தி அறிக்கையைக் கேட்டால் உலகையே வலம் வந்த உணர்வு உள்ளத்தில் எழும் அதைப்போல இரவு 11:00 செய்தித் தொகுப்பைக் கேட்டால் அன்றைய மலேசியாவை நம் மனக்கண் முன் நிறுத்தி விடுவார்கள்.

கடந்த நம்பிக்கைக் கூட்டணி ஆட்சி ஏற்பட்ட நேரத்தில் இவ்விரண்டு 10 நிமிட செய்தி அறிக்கைகளைப் பாதியாகக் குறைத்தது சமுதாயத்திற்கு பெரு நட்டம்.

நாளேடுகளில் நான் பணிபுரிந்த காலத்தில் "ஒருசேர", "சங்கப் பதிவகம்" போன்ற சொற்றொடர்களை அறிமுகம் செய்தேன். அவற்றையும் மின்னல் செய்திப் பிரிவு எடுத்தாள்வது தனிப்பட்ட முறையில் எனக்கு மகிழ்ச்சியானது நற்றானியம் எங்கு தென்பட்டாலும் கொத்தி எடுத்துக் கொள்ளும் புறாவின் போக்கு மின்னல் வானொலி செய்திப் பிரிவிடம் தென்படுவதை உணர்கிறேன்.

மீண்டும் ஒரு முறை "வாழ்க மின்னல் பண்பலை வானொலி" எனச்சொல்லி நிறைவு செய்கிறேன்.

# சிறந்த காலை உணவு



காலை உணவென்பது எமது நாளை சிறப்பாக மாற்றும் வலிமை உடையது. காலை உணவை சரியான முறையில் எடுத்துக்கொண்டால் அன்றைய நாள் சிறப்பாகவும் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் அமையும்.

காலையில் 7 மணிமுதல் 9 மணிவரையான காலமே காலை உணவை உண்பதற்கு பொருத்தமானது என மருத்துவர்கள் பரிந்துரை செய்கின்றனர். இந்த நேரத்தை தாமதமாக்கிவிட்டு உணவு உட்கொள்ளவதால் மயக்கம், போதியளவு சத்தின்மை என உடல் ரீதியான பாதிப்புக்கள் நேரிட கூடும்.

காலை உணவில் நேரத்தை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் நாம் என்ன வகையான உணவை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

சிலர் உடல் இடையை குறைக்கவேண்டும் என காலை உணவை தவிர்ப்பர் இது தவறான விடயமாகும். மேலும் காலையில் கொழுப்பு மற்றும் இனிப்பு நிறைந்த உணவுகளை தவிர்ப்பது சிறந்தது. இன்று இக்கட்டுரை மூலம் எவ்வாறான உணவுகளை காலையில் உட்கொள்ளலாம் என பார்க்கலாம்.



முட்டை

சத்தான காலை உணவை உண்ணும் எண்ணம் இருந்தால் முட்டை ஒரு சிறந்த தெரிவாக அமையும் காரணம் முட்டையில் தேவையான அளவு புரதம் காணப்படுகிறது. இதனால் உடலுக்கு தேவையான சத்து கிடைப்பதோடு உணவில் ஒரு முழுமைத் தன்மையும் ஏற்படும்.



ஓட்ஸ்

பழமை வாய்ந்த சிறந்த உணவு என்றால் அது ஓட்ஸ் தான். இதில் பீட்டா குளுக்கன் எனப்படும் ஒரு தனி தன்மை வாய்ந்த நார்சத்து காணப்படுகிறது. மேலும் இதில் இரும்பு சத்து, வைட்டமின், மாங்கனீசு மற்றும் புரதம் போன்ற உடலுக்கு தேவையான சத்துக்களும் உண்டு.



நட்ஸ்

அனைத்து வகையான நட்ஸ்களும் மாங்கனீசு, பொட்டாசியம் மற்றும் இதயத்திற்கு உகந்த நல்ல கொழுப்புகளை உடையது. இது உடல் இடையை கட்டுப்படுத்தவும் உதவும்.



கிறீன் டி

காலை உணவுடன் ஒரு கோப்பை அளவு கிறீன் டி பருகுவதால் அன்றைய நாள் சுறுசுறுப்பாக அமையும்.



பழங்கள்

அதிக அளவில் சாப்பிடாமல் அளவாக காலையில் சாப்பிட வேண்டும் என எண்ணம் இருந்தால் பழங்கள் ஒரு சிறந்த தெரிவு ஆகும். காரணம் பழங்களில் நமக்கு தேவையான அளவு விட்டமின்கள் மற்றும் பொட்டாசியம் கிடைக்கும். இது உடல் இடையை குறைத்தல், சரும பராமரிப்பு போன்ற பல விடயங்களில் எமக்கு உதவிபுரியும்.



ஆனைக்கொய்யா

இலகுவான மற்றும் ஆரோக்கியமான உணவுகளில் ஒன்றுதான் இந்த ஆனைக்கொய்யா. இதில் நல்ல கொழுப்பே அடங்கியுள்ளது. இதனால் உடல் பருமன் தொடர்பாக எந்த பிரச்னையும் ஏற்படாது. எனவே எவ்வித பயமும் இன்றி காலை உணவில் இதனை சேர்த்துக்கொள்ளலாம்.

"சரியான காலை உணவு - புத்துணர்ச்சியான நாளுக்கான வழி"

**- இரா. சஹானா**


**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Children's Party
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Holiday Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

**MONEY PROBLEMS?**
**பணச்சிக்கலா?**

ALL DEBT SOLUTIONS CRPLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# இவ்வார ராசிபலன்

## 01-04-2022 வெள்ளி தொடக்கம் 07-04-2022 வியாழன் வரையும்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** உயரங்களை சந்திக்கும் வாரம். குதூகலம் தாண்டவமாடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். திறமைகள் வெளிப்படும். செல்வாக்கு மேம்படும். காதலர்கள் தம்பதியாவார்கள். சுபச்செலவு அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. விளையாட்டுத்துறையில் கவனம் தேவை. வீண் சஞ்சலங்கள் விலகும். வேண்டாத கவலைகள் விலகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். நினைத்த வி'யம் நிறைவேறும். கடன் பாக்கிகள் வசூலாகும். திருமண தீபம் சுடர்விடும். பொருளாதாரம் மேம்படும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். எதிலும் வெற்றி கிட்டும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வேண்டாத நபர்களின் பேச்சை குறைக்கவும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. எதிரிகளால் ஏற்றம் உண்டு. உத்தியோக உயர்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3*

*அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,H*




**ரிஷபம்:** கட்டுமானப் பணியில் கௌரவம் உயரும் வாரம். ஆசைகள் நிறைவேறும். காரிய தாமதம் ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். தொழில் வளம் கூடும். சொத்துக்கள் சேரும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உடல்நலம் சீராகும். விரோதங்கள் விலகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். பொருளாதாரம் முன்னேற்றம் மேம்படும். பாராட்டுக்கள் குவியும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திடீர் மாற்றம் ஏற்படும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். முகப்பொலிவு கூடும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவார்கள். சமூக சேவை செய்ய முன் வருவார்கள். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். காதலில் புத்துணர்வு இருக்கும். வியாபாரம் வளர்ச்சி தரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமை தீரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. வாகனச் செலவு உண்டு.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்டஎண்: 3,5,9,7*

*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,B*




**மிதுனம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். அலுவலகங்களில் பாராட்டுக்கள் குவியும். பயணத்தால் நல்ல பயன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பழிச்சொல்லில் இருந்து விடுபடுவீர்கள். பாக்கிகள் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். புதிய பொருள் சேரும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். சட்டம் சாதகமாகும். திட்டங்கள் நிறைவேறும். வெற்றி சீக்கிரம் கிட்டும். பயணத்தினால் அனுகூலம் உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். ஆண்களின் ஆதிக்கம் உயரும். தடைகள் விலகும். வேலைப்பளு கூடும். அரசியல் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பல்வலி வந்து நீங்கும். எதிர்பார்ப்புகள் உருவாகும். நண்பர்களை சந்திப்பீர்கள். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். தனலாபம் பெருகும். இடமாற்றம் ஏற்படும். பயணம் தடைப்படும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்ப தேவை அதிகரிக்கும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. மதிநுட்பம் தேவை. ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலம் கூடும். மற்றவர்களால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி தரும். வெளியூர் பயணம் செல்வீர்கள்.

*வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9*

*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,E*




**கடகம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும் வாரம். காரியம் வெற்றி தரும். அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் உண்டு. வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமுண்டு. குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கலைத்தொழிலில் ஆர்வம் கூடும். விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. ஆபரணச் சேர்க்கையுண்டு. கவனமுடன் செயல்பட வேண்டும். பொறாமைகள் அகலும். விட்டுக்கொடுத்து செல்ல வேண்டும். அமைதியாக செயல்பட வேண்டும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பொன்னான தருணம். புதிய வாகனம் வாங்குவீர்கள். புது மனை புதுப்பிப்பீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மனநிறைவு தரும். புதிய நண்பர்களை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர் நட்பு கிட்டும். குடும்ப கௌரவம் உயரும். திருமண தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பங்குச் சந்தை மாற்றம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். பணவிரயம் ஏற்படும். உறவினரால் செலவு உண்டு. கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். மன வேதனை குறையும். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். வசதிகள் பெருகும். பொருளாதார உயர்வு உண்டு.

*வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,1,5*

*அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y*




**சிம்மம்:** நல்ல வாய்ப்புக்கள் வரும் வாரம். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் பலன் உண்டு. கலைத்தொழிலில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். உறவினர்களின் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். கடன் குறையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். பெண்களுக்கு யோகமான காலம். செயல்களில் கவனம் தேவை. அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலை திறன் அதிகரிக்கும். சுபக்காரியச் செய்தி வரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். உள்ளம் பூரிப்படையும். மனம் மகிழும் நாளாக அமையும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். தொலைபேசித் தகவல் நல்ல செய்தி தரும். செல்வாக்கு சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். சேய் நலம் கூடும். நோய் நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை.

*வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,1,9*

*அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J*




**கன்னி:** உடல் உபாதை விலகும் வாரம். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச்செலவு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் வியாபாரம் லாபம் தரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். மருத்துவச் செலவு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. வியாபாரத்தில் நன்மை உண்டு. சாதனைகள் நிகழ்த்தும் நாளாக அமையும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். அரசு வழியில் ஆதாயம் தரும். கடன்சுமை தீரும். நன்மைகள் பெருகும். கூட்டுத்தொழில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கனவுத்தொல்லை உண்டு. ஏற்றுமதி தொழிலில் முன்னேற்றம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. தன வரவில் தாமதம் உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கல்வியில் ஏற்றம் உண்டு. கவலைகள் குறையும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பெரியோர்கள் ஆசி கிடைக்கும். வீண் பேச்சை தவிர்க்கவும். தனம் சேரும் காலம். கடன் பிரச்சனை தீரும். வியாபார வாய்ப்பு உண்டு. புத்திரர் வழியில் தொல்லை உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வீண் வம்பு ஓடி மறையும். வாழ்க்கை வசதி பெருகும். வேலை பளு அதிகரிக்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கோதுமை தானம் குல விருத்தியை சேர்க்கும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4*

*அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,L*




**துலாம்:** உள்ளத்தில் கவலைகள் விலகும் வாரம். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். நல்வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். போட்டிகள் மறையும். தொல்லைகள் அகலும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. விவசாய விளைச்சல் மூலம் நற்பலன் உண்டாகும். புதிய சிந்தனை உருவாகும். போட்டி பொறாமைகள் மறையும். பூமியால் லாபம் உண்டாகும். விளையாட்டுத்துறையில் கவனம் தேவை. உடல்நலம் சீராகும். இனிய தகவல் வந்து சேரும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைப்பளு கூடும். நிதானம் தேவை. அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் விலகும். படிப்பில் ஆர்வம் கூடும். சந்தோஷமான நாளாக அமையும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. உடல் நலம் சீராகும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும். வசந்தம் தேடி வரும். நற்பலன்கள் கிடைக்கும். குதூ கலம் அதிகரிக்கும். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையும். இனிதான காரியம் நடைபெறும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். கணவன், மனைவி உறவு மேம்படும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: எமதர்ம ராஜா, அதிர்ஷ்ட எண்: 4,2,3,5*

*அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P*




**விருச்சிகம்:** வெற்றி கிட்டும் வாரம். நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். வீண் செலவுகள் அதிகமாகும். புதிய பொறுப்பு வரும். அரசியலில் ஆதாயம் உண்டு. திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. கலையில் ஆர்வம் பெருகும். நண்பர்களை சந்திப்பீர்கள். தாயின் நலனில் அக்கறை தேவை. பிரச்சனைகள் விடுபடும். புதிய முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். இனிய எண்ணம் உதயமாகும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்தன்மை கூடும். பொன், பொருள் சேரும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நினைத்ததை சாதிக்கும் காலம். உற்சாகம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. திடீர் செலவு ஏற்படும். மங்களச்செய்தியால் மனம் மகிழும். பிள்ளைகளால் பெருமை சேரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆலோசனை பூர்த்தியாகும். அணிகலன் ஆர்வம் கூடும். பங்குச்சந்தையில் லாபம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,4,5,6*

*அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K*




**தனுசு:** மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும் வாரம். தன்னம்பிக்கை கூடும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். குடும்ப கௌரவம் உயரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். தோஷங்கள் ஒதுங்கும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். தெம்பும், தைரியமும் கூடும். மங்கையருக்கு திருமண பாக்கியம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்ட காலம் மறையும். ஜீவராசிகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மன அமைதி சீர் குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பொறாமைகள் விலகும். சிறப்புக்கள் சேரும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*

*அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X*




**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். உற்சாகம் அலைமோதும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். காரியத்தடை ஏற்படும். புதிய எண்ணங்கள் உருவாகும். மனநிறைவு உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். வெற்றியை எட்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும் முடிவுகளில் தெளிவு இருக்கும். செயலில் துணிவு கூடும். உடல்நிலையில் அக்கறை தேவை. ஆதாயம் பெருகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பலன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*

*அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q*

(தொடர்ச்சி 33ம் பக்கம்)

## இவ்வார ராசிபலன்

(32ம் பக்கம் தொடர்ச்சி)




**கும்பம்:** கௌரவம் அதிகரிகக்கும் வாரம். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். காதலர்கள் தம்பதியாவார்கள். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். பூர்வீக சொத்து கிடைக்கும். சுபச்செய்திகள் வீடு தேடி வரும். திருமணப் பேச்சு நல்ல தகவல் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் மேன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பயணம் அனுகூலம் தரும். சாதனைகள் படைக்கும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். நட்பு வட்டம் விரிவடையும். ஆடை, ஆபரணம் சேரும். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,2*
*அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,D*




**மீனம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். செயல்திறமை வெளிபடும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து உண்டு. மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. மங்களச் செய்தி வரும். வெற்றிகள் குவியும். வீண் செலவுகளை தவிர்க்கவும். ஆன்மீகத்தில் ஆர்வம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். அலைச்சல் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். மாணவர்களுக்கு கவனம் தேவை. காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் வரும். செல்வாக்கு மேம்படும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்) அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A*


# எங்கே போனது மனிதநேயம்? மாற்றுத்திறனாளியை கட்டையால் தாக்கும் நபர் - குவியும் கண்டனம்



மாற்றுத்திறனாளி ஒருவரை ஒரு ஆணும், பெண்ணும் கட்டையால் தாக்கிய வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த சம்பவத்துக்கு பலரும் கண்டனங்களை பதிவிட்டு வருகின்றனர்.

இந்த வீடியோ நொய்டாவில் நடந்துள்ளது. அந்த வீடியோவின் படி மாற்றுத்திறனாளி ஒருவர் தன்னுடைய 3 சக்கர பைக்கில் அமர்ந்துள்ளார். அவரை சுற்றிவளைத்த ஒரு ஆணும், பெண்ணும் பெரிய கட்டையை கையில் வைத்துக்கொண்டு அவரை மிரட்டுகின்றனர். மட்டுமின்றி கையில் உள்ள கட்டையால் மாற்றுத்திறனாளியின் பைக்கை அடித்து நொறுக்குகின்றனர்.

இந்த வீடியோவே சோஷியல் மீடியாவில் வைரலாகி வருகிறது. இந்த வீடியோவை ஷேர் செய்த பலரும் தங்களது கண்டனத்தை பதிவிட்டு வருகின்றனர். இது காட்டுமிராண்டுத்தனம் என்றும், மனிதநேயம் எங்கே என்றும் பலரும் கேள்விகளை பதிவிட்டு வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் தாக்கிய நபரும், அந்த மாற்றுத்திறனாளியும் உறவினர்கள் என்றும், சொத்து தொடர்பான தகராறில் இந்த தாக்குதல் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக தற்போது போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



**மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்**




## 'மஹாகவி' பாரதி பாடல்கள்

**அத்தியாயம் - 15**

"எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனதிற் சலனமில்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திட நீ செயல் வேண்டும்
கனக்குஞ் செல்வம் நூறு வயது
இவையும் தர நீ கடவாயே!

என, பாரதி ஐயா வேண்டுதல் செய்தது போன்று நானும் - ஆயுள் உள்ளவரை அந்த மகாகவியை நெஞ்சில் வைத்துப் பூஜித்து அவர் தம் பெருமையை எழுதிக்கொண்டிருக்க ஆவல் மிகக் கொண்டுள்ளேன்.

தந்தையார் சின்னசாமி ஐயருக்கும் - தாயார் லட்சுமி அம்மாளுக்கும் பிள்ளையாக உதித்த அவதார புருஷரான சுப்பையா என்ற சுப்பிரமணியம் - பின்னாளில் சூடிக்கொண்ட புனைபெயர்களை நினைவூட்ட விரும்புகிறேன்.

காளிதாசன்
சக்திதாசன்
சாவித்திரி
ஓர் உத்தம தேசாபிமானி
நித்திய தீரர்
ெ'ல்லிதாசன் (ஆங்கிலப் புலவன் ஷெல்லியிடம் அளவற்ற இலக்கிய காதல் கொண்டவர் மகாகவி யாவார்)





தமிழறிந்த சான்றோர்கள் வழங்கிய சிறப்புப் பெயர்களாவன;

"புதுக்கவிதையின் முன்னோடி"
"பைந்தமிழ் தேர்ப்பாகன்" (பாவேந்தர் வழங்கியது)
"சிந்துக்கு தந்தை" (பாவேந்தர்)
"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா" (பாவேந்தர்)
"காடு கமழும் கற்பூரச் சொற்கோ" (பாவேந்தர்)
"பாட்டுக்கொரு புலவன் பாரதி" கவிமணி
"தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி"
"தேசியக்கவி"
"விடுதலைக்கவி"
"அமரகவி"
"முன்னறி புலவன்"
"மகாகவி"
"உலககவி"
"தமிழ்கவி"
"மக்கள் கவிஞர்"
"வரகவி"

பாரதி ஐயா பற்றி புதிய தலைமுறை தமிழ் பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டிய இவற்றைப் பதிவு செய்கிறேன்.

பாரதி ஐயா எழுதிய நாடகம் "ஜெகதசித்திரம்"
ஐயா எழுதிய உரைநடை நூல்கள்..
"ஞானரதம்" (முதல் உரைநடை காவியம்)
"தராசு"
"சந்திரிகையின் கதை மாந்தர்"

அடுத்து வரும் இதழ்களில் வேறு சில புதினங்களை தொடங்குவேன்.

இனி, "தமிழ் சினிமாவில் மகாகவி பாரதியின் பாடல்கள் தொடர்ச்சியாக...

"திக்குத் தெரியாத காட்டில்.." என ஆரம்பிக்கும் பாடல் "பானை பிடித்தவள் பாக்கியசாலி" (1958) படத்தில் இசையமைப்பாளர்கள் எஸ் வி வெங்கட்ராமன் எஸ் வி ராஜேஸ்வரராவ் இருவரினதும் இசை சேர்க்கையில் திருமதி ஜக்கி அம்மாவும், திருச்சி லோகநாதன் பாடியிருந்தார்.

1977 இல் வெளிவந்த "அக்ரகாரத்தில் கழுதை" படத்திற்கு எம்பி ஸ்ரீனிவாசன் பின்னணி இசையில் வசன கவிதையாக.. "தீ எரிக.. என ஆரம்பிக்கும் பாரதியின் வசனங்கள் இடம் பெற்றிருந்தன.

1968-இல் வெளிவந்த "திருமால் பெருமை" படத்தில் (நடிகர் திலகம் நடித்தது) கே ஆர் விஜயாவிற்காக "திரை இசைத் திலகம்" கேவி மகாதேவன் இசையில் சூலமங்கலம் ராஜலட்சுமி அவர்களின் இசை குரலில் "காக்கை சிறகினிலே... நந்தலாலா.." பாடல் ஒலித்தது.

1980 இல் வெளிவந்த இயக்குனர் கே பாலச்சந்திரனின் "வறுமையின் நிறம் சிகப்பு" படத்தில் பாரதி ஐயா எழுதிய "தீர்த்தக் கரையினிலே.. தெற்கு மூலையில் செண்பகத் தோட்டத்திலே.." என பாடும் நிலா எஸ்பிபியும், தொடர்ந்து அவரே "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ..." எனும் பாடல்களும் மெல்லிசை மன்னர் எம்எஸ்வியின் இசைக்கருவிகளும் இணைந்து எம்மை கிறங்கடித்தன.

1986 இல் வெளியான "கண்ணே கனியமுதே" படத்தில் பாரதி ஐயாவின் "நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி.." எனும் வரிகளுடன் ஆரம்பிக்கும் பாடலை மெல்லிசை மன்னர் எம் எஸ் விஸ்வநாதன் இசையில் திரு கே ஜே யேசுதாஸ், திருமதி வாணி ஜெயராம் இருவரினதும் இரு குரலிசையில் ஒலித்தது.

அடுத்து, 1987 இல் வெளியான "இனி ஒரு சுதந்திரம்" படத்தில் திரு கங்கை அமரன் இசையில் ஜேசுதாஸ் அவர்கள் குரலில் "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்.." எனும் பாரதி ஐயாவின் தாகத்தை கேட்டு நெகிழ்ந்தோம் உணர்ச்சியுற்றோம்.

இப்பாடல் வரிகளுடன் கூடிய காட்சியை "கப்பலோட்டிய தமிழன்" படத்தில் முன்னமேயே திருச்சி லோகநாதன் அவர்களை பாடவைத்து பிரமாதப் படுத்திருப்பார் சங்கீத மேதை ஜி ராமநாதன் ஐயர்.

கடந்த வார இதழில் குறிப்பிட்டபடி 2000-ம் ஆண்டில் வெளியான பாரதி படம் அவரது வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை ஓரளவு காட்சிப்படுத்தப்பட்ட படமாக தயாரிக்கப்பட்டிருந்தது. கன்னட மொழி நடிகரான "சாயாஜி சிண்டே" என்ற நடிகர் பாரதியாக தோன்றி நடித்திருப்பார். செல்லம்மாளாக திருமதி தேவயானி பாத்திரமேற்று இருந்தார். இந்த வரலாற்றுப் பட முயற்றி பாராட்டுக்குரியது.

"இசைஞானி" திரு இளையராஜா அவர்களின் ஆளுமை மிக்க இசைக் கலவைகளோடு பாரதி ஐயாவின் சுமார் எட்டு பாடல்கள் இப்படத்தில் இடம் பெற்றிருந்தன.

பாரதி ஐயாவின் மகள் வயிற்றுப் பேரன் ராஜ்குமார் பாரதி அவர்களையும் பாட வைத்திருப்பார் இளையராஜா அவர்கள். "கேளடா மானிட வா.." பாடலை திரு ராஜ்குமார் பாரதி பாடியிருந்தார்.

"நின்னை சரணடைந்தேன்" வரிகளுடன் ஆரம்பிக்கும் பாடலை இளையராஜா - பாம்பே ஜெயஸ்ரீ ஆகியோரும், "பாரத சமுதாயம் வாழ்கவே" பாடல் வரிகளை கே ஜே யேசுதாஸ்,

"எதிலும் இங்கு" என மது பாலகிருஷ்ணனும், அவரே மீண்டும் "வந்தே மாதரம்", எனவும் இரு பாடல்களையும் பாடி இருப்பார்.

"அக்னி குஞ்சு" பாடியவர் கே.ஜெ ஜேசுதாஸ்.

ஹரிஸ் ராகவேந்திராவின் "..நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம் சொற்பனந்தானோ..." என எத்தனை முறை கேட்டாலும் மெய்மறக்கலாம்..

**அடுத்த இதழில்...**
**மகாகவி பாரதியாரின் எட்டு பாடல்கள் இடம்பெற்ற பிரபலமான படம் எது?**

வீணை மைந்தன்

# அன்பின் தொனி - 648

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். உலகத்தை உருவாக்கிப் படைத்த தேவாதி தேவனை விட்டுவிட்டு அவர் படைத்த படைப்புகளை மனிதன் வணங்குவது தவறு என்பதை பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள வார்த்தைகளின்படி எடுத்துக் காட்டி, பல விபரங்களோடு இப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

## மனிதன் தெய்வமாகலாமா?

இன்றைய உலக நிலமைகளை நாம் உற்றுப் பார்க்குமிடத்து, நாளுக்கு நாள் மனிதன் தன்னை உருவாக்கிப் படைத்த தேவாதி தேவனை விட்டு விலகி, அவருக்குப் பாத்திரராய் வாழவேண்டிய வாழ்கையிலிருந்து தூரமாகி, அவருக்குக் கொடுக்க வேண்டிய துதி கன மகிமையை மனுஷர்களுக்குக் கொடுத்து, மனிதனை மனிதன் வணங்குகிறதையும், ஏனய படைப்புக்களை ஆசரிப்பதையும் இன்று நாம் எங்கும் காணக்கூடியதாய் இருக்கிறது. இன்றய முன்நேற்றமான விஞ்ஞான உலகில், கல்வியிலும் அறிவிலும் மேதைகளாக விளங்குபவர்களும் இப்படியான மூட வழிபாடுகளில் நம்பிக்கை வைத்து வாழ்வதும், மனிதனை மனிதன் வணங்குவதும் எவ்வளவு தவறானதும் கவலைக்குரியதுமாாய் இருக்கிறது. மேலும், கடவுளுடைய ஏனய படைப்புக்களையும், மனித சிந்தனையால் உருவாக்கப்பட்ட விக்கிரகங்களையும் மனிதன் வணங்கி வருகிறான். இந்த, மனிதனை மனிதன் வணங்கும் நிலை, கடவுள் உலகத்தைப்படைத்த ஆரம்பத்திலேயே சத்துருவான பிசாசினால் ஏதேன் தோட்டத்திலேயே வித்திடப்பட்டது, இச் சம்பவத்தை பரிசுத்த வேதாகமத்தில் "ஆதியாகம்" அதிகாரங்களில் பார்க்கலாம்.

## தேவனைப்போல் இருக்க விரும்பினர்

கடவுள் படைத்த முதல் மனுஷன் மனுஷி ஆகிய ஆதாமையும் ஏவாளையும் தேவன் தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார், பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். மேலும் தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். ஆதாமும் ஏவாளும் கர்த்தராகிய தேவனோடு ஏதேன் தோட்டத்திலே சந்தோஷத்தோடு நடைபோட்டு வந்தார்கள்.

## தேவ தூாதர்களில் முக்கிய ஒரு தூதனாக இருந்த "லூாசிபர்"

பரலோக இராட்சியத்தில் தேவ தூாதர்களில் முக்கிய ஒரு தூதனாக இருந்த "லூாசிபர்" என்னும் தேவ தூதன், "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன், வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்றும் தன் இருதயத்தில் சொன்னதின் நிமித்தம், அவனையும் அவனோடு இணைந்த வேறு அனேக தூதர்களும் தேவ சன்னிதானத்திலிருந்து தேவாதி தேவனால் துரத்தப்பட் டனர். இந்த சத்துருவான பிசாசானவன் தந்திரமுள்ள சர்ப்பமாக ஏதேன் தோட்த்தில் ஏவாளை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம் ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத்தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை, நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான். இப்படியாக முதல் மனுஷனும் மனுஷியும் பிசாசினுடைய தந்திரத்திற்கும், வஞ்சனைக்கும் ஆளாகி, கர்த்தருடைய கட்டளையை மீறி, விலக்கப்பட்ட கனியைப் புசிப்பதற்குக் காரணம் என்னவெனில், தாங்களும் தேவர்களைப்போல் இருக்கலாம் என்ற நினைவு. இதன் நிமித்தம் அவர்கள் இருவரையும் கர்த்தர் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டார்.

## மனிதன் தேவர்களைப்போல் ஆகலாம் என்ற சிந்தனை

மனிதன் தேவர்களைப்போல் ஆகலாம் என்ற சிந்தனையை அன்று ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளுடன் ஆரம்பித்துவைத்த அதே சத்துருவான பிசாசு, இன்றும் அநேகரை உலகம் பூராவும் வஞ்சித்து வருவதால் அநேகர் தங்களைத் தெய்வப் பிறவிகளும், தேவர்களுமாக்கி, மற்ற மனுஷர்கள் தங்களை வணங்குகிற நிலைக்கு ஆளாக்குகிறார்கள். மெய்யான தேவனை அறியாமல் அலைகிற அப்பாவி மக்கள், அறியாமையின் நிமித்தம் அந்த மனிதர்களை, அவர்கள் பாதம் தொட்டு வணங்குவதும், அவர்களையே நம்பி ஜீவிப்பதும் இன்று உலகில் சர்வ சாதாரணமாகிவிட்டது. இந்நிலை எவ்வளவு பாதகமான செயலும், பரிதாபப்பட வேண்டிய நிலையுமாய் இருக்கிறது.

இப்படியாக மனிதனை மனிதன் வணங்கும் நிலமை ஒருபுறம் இருக்க, கடவுள் படைத்த படைப்புக்களைத் தெய்வங்களாக்கி அவைகளுக்குப் பெயரிட்டு, சிலை எழுப்பி, விக்கிரகங்களை செய்வித்து, கோவில்களை அமைத்து வழிபட்டு, விழாவெடுத்து வருகிற இன்னுமொரு சாராரும் பரந்து இருக்கிறதை உலகம்பூராவும் காணலாம்.

தொடரும்...

# கடந்தவையும் கடப்பவையும் (25)

- உமா மோகன் -

*எத்தனை அழிவுகள் செய்தாலும் மக்கள்*
*தத்தமது வேலைகளை விடவில்லை - சொல்லியது*

*சுன்னாகப் பாதை வழிச் சுறுசுறுப்பு - அடுத்து*
*மல்லாகப் பாதை வழிப் போகும்போது - அங்கும்*

*ஆங்காங்கே அவர்களும் தான் நிற்கின்றார்கள் - மக்கள்*
*தேங்காத சிறு தெருக்கள் அமைதியாய்.*

*கூடுமாம் பெரும் கூட்டம் மல்லாகத்தில் - யானை*
*வடம் பிடித்துத் தேரினை இழுக்கும் போது - மக்கள்*

*சேர்ந்தும் தாம் இழுப்பாராம், உண்மையாம் - தாம்*
*பார்த்ததையும் சொல்லுகிறார் நல்ல தமிழ்*

*வளம் மிகுந்த பரம்பரையில் வந்த*
*நம. சிவப்பிரகாசப் புலவர் அவர்*

*தான் வாழ்ந்த காலத்து மல்லாகத்தை*
*'பன்மணிமாலை' எனும் பல்வகைப்*

*பாக்களின் கோர்வையிலே மிக நல்லாகக் கூறுகிறார் - அதில்*
*அக்கால மக்களின் பக்திச் சிறப்பும் நன்றாகப் புரிகிறது,*

*பழம்பதிப்பிள்ளையார் தான் பாட்டுடைத் தலைவன் - அந்த*
*வேழத்தின் செயலோ அதைவிடச் சிறப்பு*

*சைவ ஆலய அழிப்பு வேலையிலே போத்துக்கேயர் - தம்*
*கைவரிசையைக் காட்ட அங்கும் வரவே - அங்கு*

*பார்த்திருந்த யானை அவர்களைத் துரத்திடவே*
*போத்துக்கேயர் போனபோக்கு ஒரே போக்காம்*

*மல்லையிலே வீற்றிருந்து நல்லருளை*
*நல்லும் அந்த விநாயகனுக்கு இளையவனின்*

*சிறப்பினையும் மறக்காது பாடியுள்ள புலவரவர்*
*திறம்படத்தான் சொல்லுகிறார் மல்லாகத்தை*

*அவ்வூர்,*

*நல்ல மண் வளமும் நல்லின நெல்லினமும்*
*கொல்லையிலே கதலி வாழைகளும்*

*இன்சுவை தரும் மா பலா என்பனவும்*
*நற்கரும்பொடு செவ்விளநீரும் தந்திடுமாம்*

*தான் பிறந்த மல்லாகம் - ஆனால்*

*அன்று நாம் போனபாதையிலே செழிப்பேதும் தெரியவில்லை*
*நின்று பார்ப்பதற்கும் நிலைமை அது சரியில்லை*

*தொடருகிறோம்........*

(தொடரும்)


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE


எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTORSEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX
ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING

உதயம் 1356 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 1, 2022

## சுவாமி விபுலானந்தர் அவர்களை "முத்தமிழ் அறிஞர்" என்ற வட்டத்திற்குள் அடக்கி விடமுடியாது

### சுவாமி நீலமாதவானந்தா அவர்கள் தெரிவிப்பு



சுவாமி விபுலானந்தர் அவர்களை "முத்தமிழ் அறிஞர்"என்ற வட்டத்திற்கு அடக்கி விடமுடியாது. அவரது இளவயதிலிருந்தே இறைவனின் ஆசியும் அருளும் பெற்ற ஒருவராக வாழ்ந்துள்ளார். அவர் விரும்பிய போதெல்லாம் அவருக்கு தேவையான பொருட்களை அவரை அறியாதவர்கள் பலர் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்கள். உதாரணமாக சில புத்தகங்களை அவர் வாசிக்க விரும்பிய போது அவை விபுலானந்தர் அடிகளாருக்கு எவ்வித தடையுமின்றி கிடைத்துள்ளன.

இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற விபுலானந்த அடிகளாரின் 130வது பிறந்த நாளை விழாவில் இணையவழி மூலம் உரையாற்றிய மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிசன் அமைப்பின் பொறுப்பாளர்களில் ஒருவரான சுவாமி நீலமாதவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 13ம் பக்கத்தில்)*

## ஒன்றாரியோ லண்டன் நகரில் வைத்திய தாதியான இளம் தாயின் கொலைச் சம்பவம் தொடர்பாக புதிய தகவல்களை வெளியிட்டுள்ள பொலிசார்



ஒன்றாரியோ மாகாணத்தின் உள்ள லண்டன் நகரில் வைத்திய தாதியாக பணியாற்றிய ஒரு இளம் தாயை கொலை செய்த சம்பவம் தொடர்பாக புதிய தகவல்களை பொலிசார் வெளியிட்டுள்ளனர்.

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள லண்டன் நகரில் வைத்திய தாதியாக பணியாற்ற வந்த ஒரு இளம் தாயை கொலை செய்த ரொறன்ரோ பெரும்பாக நகரங்களில் ஒன்றான ஸ்காபுறோவிலிருந்து கொலை வெறியுடன் சென்ற துப்பாக்கி ஏந்திய கொலையாளிகள் இருவர் அந்த இளம் பெண்ணை கொலை செய்து விட்ட பின்னர் உடனடியாக இலண்டன் நகரத்தை விட்டு வெளியேறி பின்னர் தாங்கள் திருடிச் சென்ற வாகனத்தை கைவிட்டுச் சென்றுள்ளனர் என விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ள பொலிசார் ஊடகங்களுக்கு அறியத்தந்துள்ளனர். *(தொடர்ச்சி உள்ளே 7ம் பக்கத்தில்)*

## Mr Tamil - Canada சமூக சேவை அமைப்பு நடத்திய இவ்வருடத்திற்குரிய சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்



கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Mr Tamil -Canada** என்னும் சமூக சேவை அமைப்பு இவ்வருடத்திற்குரிய சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தை கடந்த புதன்கிழமை **(International Womens' Day )** மார்க்கம் நகரில் அமைந்துள்ளள **Hilton Five Star Hotel** மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது.

பல சுவையான நடனங்கள் பாடல்கள் உரைகள் ஆகியன இடம்பெற்றன.

அத்துடன் முக்கிய நிகழ்வாக இடம்பெற்ற பெண்கள் கலந்துரையாடலில் ஜனனி பாஸ்கரன் அவர்கள் தலைமை தாங்க. சட்டத்தரணி லக்சுமி வாசன். மற்றும் ரஜனி நாதன். காஞ்சனா சிவலிங்கம். ஏஞ்சல் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்

மேற்படி கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பயனுள்ள விடயங்கள் கலந்துரையாடப்பெற்று சமூகத்தில் பெண்கள் அனுபவிக்கும் வலிகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவை தொடர்பாக ஆரோக்கியமான கருத்துக்கள் முன்வைக்கப்பெற்றன..

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

*செய்தியும் படங்களும்: சத்தியன்*

## கனடாவில் நன்கு அறியப்பெற்ற காப்புறுதி முகவர் ஜேய் நடராஜாவின் புதிய நிறுவனம் Great Life Financial



கடந்த பல வருடங்களாக கனடாவில் நன்கு அறியப்பெற்ற காப்புறுதி முகவராகவும் மற்றும் வீடு விற்பனை முகவராகவும் பணியாற்றி வரும் திரு ஜேய் நடராஜா (ஜெயக்குமார் நடராஜா) அவர்களின் நிர்வாகத்தில் புதியதோர் காப்புறுதி நிறுவனமான **Great Life Financial** தலைமை அலுவலகம் கடந்த சனிக்கிழமையன்று மாலை திறந்து வைக்கப்பட்டது. **885 Progress Avenue, Scarborough** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அலுவலகத்தினை திரு ஜேய் நடராஜா (ஜெயக்குமார் நடராஜா) அவர்களின் நண்பரும் **Mega Financial Inc.** காப்புறுதி நிறுவனத்தின் அதிபருமாகிய திரு ராஜ் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். அதன்போது, ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தின் ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் உறுப்பினர் விஜய் தணிகாசலமும் உடனிருந்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வைபவத்தின் பிரம்ரன் மாநகர மேயரும் மத்திய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பதவிக்கு தற்பொழுது போட்டியில் இறங்கியுள்ளவருமான பெற்றிக் பிரவுண் அவர்களும் கலநது சிறப்பித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

## ஒன்றாரியோவில் மருத்துவ மற்றும் பற்சிகிச்சை காப்புறுதி இல்லாதவர்களுக்கு உதவு திட்டத்தை அறிவித்த மாகாண அரசு



ஒன்றாரியோ மாகாணத்தில் மருத்துவ மற்றும் பற்சிகிச்சை காப்புறுதி இல்லாத தொழிலாளர்களுக்கு உதவு திட்டத்தை ஒன்றாரியோ அரசு அறிவித்துள்ளது ஒன்றாரியோ அரசாங்கம் நியமித்துள்ள ஒரு புதிய குழு, உடல்நலம், பல் மற்றும் பார்வை பராமரிப்புக்கான காப்புறுதி இல்லாத இலட்சக் கணக்கான முழு நேரத் தொழிலாளர்களுக்கு அதற்குரிய அரச திட்டத்தை வழங்குவதற்கு, கையடக்க நன்மைகள் அமைப்பை எவ்வாறு வடிவமைப்பது என்பதை ஆராயும் வண்ணம் குழுவை அமைத்துள்ளது

*(தொடர்ச்சி உள்ளே 7ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker